இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 93 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 15, திங்கட்கிழமை 27.02.2017

## 78 வெடி குண்டுகள் வதிரியில் மீட்பு



யாழ்ப்பாணம், பெப். 27
வடமராட்சி, நெல்லியடி வதிரி புலவர் வீதியில் 78 பழைய வெடி குண்டுகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காணி உரிமையாளரால் தென்னம்பிள்ளை வைப்பதற்காக நேற்று முன்தினம் கிடங்கு வெட்டப்பட்டது. இதன்போது ஓர் வெடி குண்டு கண்டறியப்பட்டது. இது தொடர்பில் காணி உரிமையாளரால் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்று பொலிஸார் அந்தப் பகுதியை சோதனையிட்ட போது 78 வெடி குண்டுகள் மீட்கப்பட்டன.
வெடி குண்டுகள் மீட்கப்பட்ட காணியில் முன்பு விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி.26,106)

## ஈழத்துப் புரட்சிப் பாடகர் எஸ்.ஜி.சாந்தன் மறைவு



யாழ்ப்பாணம், பெப். 27
தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனது குரலை ஆயுதமாக்கி தமிழ் மக்களிடையே போராட்டக் கருத்துக்களைக் கொண்டு சேர்ப்பதிலும், மாவீரர்களின் காவியங்களை வரலாறாக்குவதிலும் முன்னின்ற தலைசிறந்த பாடகரும் பிரபல இசைக்கலைஞருமான எஸ்.ஜி.சாந்தன் (வயது - 57) உடல்நலக் குறைவால் நேற்றுக் காலமானார்.
சிறுநீரகங்கள் இரண்டும் >> 24

## விக்கியின் செயற்பாடுகளால் தமிழ் மக்களுக்குப் பேராபத்து

### இப்படிச் சொல்கிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, பெப். 27
"மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பை விரட்டி விட்டு வடக்கு, கிழக்கில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் முற்படுகின்றார். அதற்காக அவர் இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார். இனவாதக் கருத்துக்களை விதைக்கின்றார். இது நாட்டுக்கும் தமிழர்களுக்கும் பெரும் ஆபத்தாக அமையும்"
இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற எழுக தமிழ் நிகழ்வு உள்ளிட்ட >> 24

## காணாமற்போனோரின் உறவினர்களின் போராட்டங்கள் தொடர்கின்றன

கிளிநொச்சி, பெப். 27
காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடித் தருமாறு கோரிக்கை விடுத்து அவர்களின் உறவினர்களால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் .போராட்டம் 7ஆவது நாளாகவும், வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டம் 3ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தன.
கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கிளிநொச்சி உறவுகளின் போராட்டத்தில் நேற்றுப் பங்கெடுத்தனர். வவுனியாவில் நடத்தப்படும் போராட்டத்தில் காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி மற்றும் தெற்கைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் சிலரும் கலந்துகொண்டு ஆதரவை வழங்கினர். (விரிவு: பக். 03)

# ஐ.நா. கண்டம் இன்று ஆரம்பம்

### ஹுசைனின் ஆரம்ப உரையிலேயே இலங்கை மீதான காட்டம் வெளிப்படும்

ஜெனிவா, பெப்ரவரி 27
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், இலங்கை தொடர்பிலான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்திக் காட்டமான அறிவிப்பை இன்றைய தினம் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
அத்துடன் இலங்கை தொடர்பான பிரிட்டனின் பிரேரணை, அடுத்த மாதம் 22ஆம் திகதியே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் இது முக்கியமான அமர்வு. 2015ஆம் ஆண்டு இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீதான காலக்கெடு இந்த அமர்வுடன் >> 24

## கூட்டமைப்பினருக்கு அமைச்சர் பதவிகள்

### அரசுக்குப் புத்திமதி சொல்கிறார் அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி

கொழும்பு, பெப். 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் யோசனை முன்வைத்துள்ளார். >> 24

### கிளிநொச்சியில் நேற்று வரை

## 11 கர்ப்பிணிப் பெண்கள் பன்றிக் காய்ச்சலால் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 27
பன்றிக்காய்ச்சல் எனப்படும் என்1எச்1 வைரஸ் தொற்றால் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 11 கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறையினரால் தெரிவிக்கப்பட்டது. வடக்கில் நேற்றுவரை இந்தத் தொற்றால் >> 23

### அரசமைப்பு உருவாக்கம்

## பொது வாக்கெடுப்பு நடத்துவதில் ஐ.தே.க. உறுதி

கொழும்பு, பெப். 27
புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்குத் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தக் >> 24

## ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்ற கால அவகாசமும் நிதியும் தேவை

### ஜெனிவாவில் நாளை கோருவார் மங்கள

கொழும்பு, பெப். 27
ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசமும், நிதி உதவியும் கோருவதற்கு கொழும்பு அரசு தீர்மானித்துள்ளது.
இதனை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் நாளை உரையாற்றவுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரியப்படுத்துவார்.
இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக மங்களசமரவீர, ஜயம்பதி விக்கிரமரட்ண ஆகியோர் நேற்று அதிகாலை ஜெனிவாவுக்குப் புறப்பட்டனர்.
ஐ.நா மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ளது.
இன்றைய முதல் நாளில் ஐ.நா. மனித >> 24

### காணி விடுவிப்பு விவகாரம்

## மைத்திரியுடன் கூட்டமைப்பு இன்று பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 27
முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் காணிகள் விடுவிப்புத் தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்ட >> 24

### இளைஞன் மீது கொலை முயற்சி

## வாள்வெட்டுக் கும்பல் சினிமாப் பாணியில் தாவடியில் அடாவடி

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணம் தாவடியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனை, மோட்டார் சைக்கிள்களில் வாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்த 13 பேர் கொண்ட கும்பல் ஓட ஓட விரட்டி கொலை அச்சுறுத்தல்விடுத்தது.
அவர்களைப் பொலிஸார் துரத்திச் சென்றபோதும் கும்பல் தப்பிச் சென்றது என்று >> 24

## மகிந்தவின் கைகளில் விரைவில் ஆட்சி

பந்துல எம்.பி. சூளுரை

கொழும்பு,பெப்.27
அரசதலைவருக்கான தேர்தலை நடத்திதலைமை அமைச்சரை மாற்ற >> 06

## வடக்கில் இன்று முழு அடைப்பு போராட்டம் நடக்காது

யாழ்ப்பாணம், பெப். 27
வடக்கு மாகாணத்தில் இன்று எந்தவொரு முழு அடைப்புப் போராட்டமும் >> 23

### 24ஆவது நாள்

## புதுக்குடியிருப்பு மக்கள் போராட்டம் நீடிக்கிறது

முல்லைத்தீவு, பெப். 27
தாயக உறவுகளின் பேராதரவுடன் புதுக்குடியிருப்பு மக்கள் முன்னெடுக்கும் அறவழிப்போராட்டம் 24ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. >> 06



## வடக்கு அமைச்சர்களிடம் ஊழல், மோசடி விசாரணை

### இரு நாள்களாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 27
வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இருவரும், வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் குழுவினால் கடந்த இரு தினங்களாக் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். >> 24



(மேலும் செய்திகள் 09ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 27ஆவது நாள்

### பிலக்குடியிருப்புக்கு படையெடுக்கும் தாயக இளைஞர்கள்

முல்லைத்தீவு, பெப். 27
பிலக்குடியிருப்பு அறவழிப் போராட்டக் களத்துக்குத் தாயகத்தின் பல பாகங்களிலிருந்தும் படையெடுக்கும்இளைஞர்கள்மக்களின்போராட்டத்தில் பங்கெடுக்கின்றனர். >> 06

# காந்தக்குரலில் எப்போதும் சாந்தன் எம்முடன் வாழ்வார்

## சரவணபவன் எம்.பி இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 27

ஈழத்துப் பாடகர் சாந்தன் உடலளவில் எம்மை விட்டு நீங்கினாலும், அவர் தனது காந்தக் குரல் மூலம் எம்முடனே என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்துப் புரட்சிப் பாடகர் சாந்தன் உடல்நலக்குறைவால் நேற்று மதியம் உயிரிழந்தார். அவரது மறைவு தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்ரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

'கண்ணில் வடிக்கும் நீரை துடைத்தே வாருங்கள்;...', 'இந்த மண் எங்கள் சொந்த மண்...' என்று ஈழத்து இன விடுதலைப் போராட்டத்துக்கு இளைஞர்களை தனது காந்தக் குரலால் அழைத்து இன மீட்புக்காகப் பெரும் பங்களிப்புச் செய்த பாடகர் சாந்தன் எம்மை விட்டு விடைபெற்றுள்ளார். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

இன விடுதலைப் போராட்டமொன்றில் போராடும் போராளிகளுக்கு மனவலிமை மிகவும் அவசியமானது. தனது பாடல்களால் எமது இளைஞர்கள் உள்ளிட்ட எமது இனத்திடையே இனவுணர்வையும் மனத்தைரியத்தையும் பெருக்கியவர் சாந்தன். இளைஞர்களையும் மக்களையும் போராட்டக் களத்துக்குக் கொண்டு வருவதில் கலை, இலக்கியங்களின் பங்கு மிக முக்கியமானது. கலைஞர்களின் பங்கும் அளப்பரியது. அந்தப் பங்கைச் செய்து முடித்த பின்புதான் சாந்தன் எம்மிடம் இருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

எமது போராட்டம் கபடமாக மௌனிக்கப்பட்டதையே நினைத்து மிகவும் வேதனையோடு எம்மிடம் இருந்து விடைபெற்றுள்ள சாந்தன், உடலளவில் எம்மை விட்டு நீங்கினாலும் அவர் தனது குரல் மூலம் எம்முடன் என்றும் வாழ்ந்து கொண்டு தான் இருப்பார் என்றுள்ளது. (வ-5)

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர் பரிந்துரை

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தரைத் தேர்வு செய்வதற்காக நேற்று நடத்தப்பட்ட தேர்தலில் பேராசிரியர் சிறிசற்குணராஜா 17 வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

வேட்பாளர்களான பேராசிரியர்கள் 5 பேரும், தாம் துணைவேந்தரானால் தம்மால் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் உள்ளிட்ட விடயங்களை பேரவை முன்னிலையில் கூறியிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. முற்பகல் 9.30 மணிளவில் ஆரம்பமான நிகழ்வு மதியம் நிறைவடைந்தது. பிற்பகல் தேர்தல் இடம்பெற்றது.

தேர்தலை அவதானிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அபயகுணவர்த்தன அனுப்பப்பட்டிருந்தார். முதலில் வாக்களிப்பு இடம்பெற்ற போது பேராசிரியர் சிறிசற்குணராஜா 17 வாக்குகளைப் பெற்றார். பேராசிரியர் விக்னேஸ்வரன் 11 வாக்குகளைப் பெற்றார். மருத்துவ பீடாதிபதி ரவிராஜ், பேராசிரியர் வேல்நம்பி ஆகியோர் தலா 9 வாக்குகளைப் பெற்றனர். பேராசிரியர் மிகுந்தன் 6 வாக்குகளைப் பெற்றார்.

அதிகளவு வாக்குகளைப் பெறும் முதல் 3 பெயர்கள் துணைவேந்தர் தெரிவுக்காக அரச தலைவருக்கு அனுப்பப்படுவது வழமை. நேற்று 3 ஆவது நபராக 2 பேர் தெரிவானதால் அந்த 2 பேரில் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் பேராசிரியர் வேல்நம்பி 14 வாக்குகளைப் பெற மருத்துவ பீடாதிபதி ரவிராஜ் 9 வாக்குகளைப் பெற்றார்.

அதன்படி முதல் 3 இடங்களையும் பெற்ற 3 பேராசிரியர்களது பெயர்கள் அவர்களது எதிர்காலத் திட்டங்கள் கொண்ட அறிக்கையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக அரச தலைவருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 3 பேரில் ஒருவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அரச தலைவர் நியமனம் வழங்குவார். அதன் பின்னர் அவர் துணைவேந்தர் பதவியைப் பொறுப்பேற்பார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்றுப் பட்டம் பெற்று தற்போது துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிட்டு அதிக வாக்குகளால் முதலிடம் பெற்றவராக பேராசிரியர் சிறிசற்குணராஜா விளங்குகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பதவிக்கு தற்போது அமெரிக்காவிலுள்ள பேராசிரியர் சாம் தியாகலிங்கமும் விண்ணப்பித்தபோதும் அவரது விண்ணப்பம் தாமதமாகக் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டு அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்பு தடுக்கப்பட்டது.

அவருக்கான தடையை நீக்கி துணைவேந்தர் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் கோரிய போதும் அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. (வ-4-101)

### மட்டு மாநகரின் முன்னாள் முதல்வர்

# சிவகீதாவின் வீட்டில் நேற்று வாள்வெட்டு

மட்டக்களப்பு, பெப். 27

'மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சிவகீதா பிரபாகரனின் வீட்டில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் சிவகீதாவின் கணவர் தேடப்படுகிறார்'

இவ்வாறு மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றது. அதனையடுத்து சிவகீதாவின் வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. வீட்டுடன் இணைந்த கட்டடத்தில் விபசாரம் நடத்திய குற்றச்சாட்டில் கடந்த வருடம் ஒக்ரோபர் 23ஆம் திகதி மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சிவகீதா பிரபாகரனும் அவரது கணவர் உட்பட ஏழு பேரும் மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் உள்ள முன்னாள் மாநகர முதல்வரின் வீட்டுடன் இணைந்த கட்டடத்தில் அறைகள் வாடகைக்கு விடப்படும் என்ற பெயரில் சிவகீதாவின் வீட்டின் ஒரு பகுதியில் வைத்து இரண்டு பெண்களும் ஐந்து ஆண்களும் பிடிக்கப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து சிவகீதா பிரபாகரன் அவரது கணவர் பிரபாகரன் ஆகியோரும் இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (வ-4

# சட்டத்தரணிகள் சங்க தேர்தல் மார்ச் 15இல்

*தலைவர் பதவிக்கு சங்கராஜா போட்டி*

கொழும்பு, பெப். 27

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவை தெரிவுசெய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 15ஆம்திகதிநாடுமுழுவதும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சிறப்பு நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி திகதி நிர்ணயிக்கப்பட்டது. அத்துடன், சட்டத்தரணிகள் சங்கத்தின் யாப்பிலும் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு இம்முறை சட்டத்தரணிகளான ஆர். ஆர். எஸ். சங்கராஜா, யூ. ஆர்.டி. சில்வா, அநுர மெத்தேகொட ஆகியோர் போட்டியிடுகின்றனர். செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட பதவிகளுக்கும் மூத்த சட்டத்தரணிகள் சிலர் போட்டியிடுகின்றனர்.

"சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல் கடந்த 21ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனினும், நீதிபதிகள் சங்கத்துக்கும் குறித்த சங்கத்துக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையால் அது ஒத்திவைக்கப்பட்டது. தேர்தல் திகதிக்கு முன்னர் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும் என நம்புகின்றோம்" என்று சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல் சகல மாவட்ட நீதிமன்றங்களிலும்நடத்தப்படும். மாவட்ட நீதிபதி முன்னிலையில் வாக்கெடுப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

### பொருளாதார ஒத்துழைப்பை விட

# இலங்கையுடன் கூட்டு முயற்சிக்கே புதுடில்லி ஆர்வம்

## இந்திய அயலுறவுச் செயலர் ஜெய்சங்கர் கொழும்பில் அதனையே வெளிப்படுத்தினார்

கொழும்பு, பெப். 27

இலங்கையுடன் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடுகளைச் செய்து கொள்வதை விட, கூட்டு முயற்சி உடன்பாடுகளைச் செய்து கொள்வதிலேயே இந்தியா ஆர்வம் காட்டுவதாக கொழும்பு அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

அண்மையில் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய அயலுறவுச்செயலர் எஸ்.ஜெய்சங்கர், புதுடில்லி அரசின் இந்த நிலைப்பாடு குறித்து, இலங்கைத் தலைவர்களுடனான சந்திப்பின் போது தெளிவுபடுத்தினார்.

அத்துடன், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் திட்டம் தொடர்பாக, கூட்டு முயற்சி உடன்பாடு ஒன்றை எட்டுவது தொடர்பாகவும், இலங்கையில் நடத்திய பேச்சுக்களின் போது, ஜெய்சங்கர் ஆர்வம் காட்டினார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான கேள்விப்பத்திரம் கோரப்பட்ட பின்னர் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகவும், இந்திய அயலுறவுச் செயலர் இலங்கை அரச தரப்புடனான சந்திப்புகளின் போது விசாரித்துள்ளார். அத்துடன் திரவ எரிவாயு மின் திட்டம் மற்றும் ஏனைய பல திட்டங்கள் தொடர்பாகவும் அவர் கலந்துரையாடினார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

### தேக்கவத்தை கொலை

# சந்தேகநபருக்கு விளக்கமறியல்

வவுனியா, பெப். 27

வவுனியாவில் தேக்கவத்தைப் பகுதியில் இளம் குடும்பத் தலைவர் ஒருவரை வெட்டிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் மன்று உத்தரவிட்டது.

"கடந்த மாதம் 11ஆம் திகதி தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீட்டில் இருந்த இளம் குடும்பத் தலைவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில், அவரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குடும்பத்தலைவரின் மனைவி பிள்ளைகள் நயினாதீவில் வசித்து வரும் நிலையில் வவுனியா தேக்கவத்தை பகுதியில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வந்தபோதே அவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இனம்தெரியாத குழுவினரே இந்தக் கொலையை செய்தனர் என்று தெரிவித்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். கொழும்பு மருதானைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் பொலிஸார் அவரை வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-21)

# ஊடகர் மீதான தாக்குதலுடன் எந்தத் தொடர்பும் கிடையாது

## அடித்துக் கூறுகிறார் கோத்தா

கொழும்பு, பெப். 27

'தி நேசன்' ஆங்கில நாளிதழின் இணை ஆசிரியராக பணியாற்றிய கீத் நொயார் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தனக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

சண்டே லீடர் ஆங்கில வார இதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நான் பாதுகாப்புச் செயலராக இருந்த போது, கொழும்பில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக, புலனாய்வு அதிகாரிகளுடன் கிரமமான சந்திப்புகளை நடத்துவது வழக்கம். போர் நடந்த காலகட்டத்தில், புல்னாய்வு அதிகாரிகளுடன் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் கூட்டங்களை நடத்துவேன். இந்தக் கூட்டங்களின் மூலம், வெற்றிகரமாக விடுதலைப் புலிகளின் இரகசிய செயற்பாட்டாளர்களை அடையாளம் கண்டு, கொழும்பில் சில தாக்குதல்களையும் தடுக்க முடிந்தது.

பாதுகாப்புச் செயலராக பணியாற்றிய போது, இராணுவ அதிகாரிகளுக்கு அவர்களின் கடமைகளுக்கு அப்பால் செயற்படுவதற்கான உத்தரவுகளை இடும் அதிகாரம் எனக்கு இருக்கவில்லை. யாரோ செய்த குற்றங்களை சுமத்துவது நியாயமற்றது. உண்மையான குற்றவாளிகளை அதிகாரிகள் கைது செய்ய வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம்

# பெருகுகின்றது ஆதரவு



கிளிநொச்சி, பெப்.27

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்துக்கு நீதி கோரி அவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகுகின்றது.

கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று 7 ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பேரணி நடத்தினர்.

கிளிநொச்சி திரேசா ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான பேரணி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டம் நடத்திவரும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடைந்தது. ஆலய முன்றிலில் மாணவர்கள் ஒன்று கூடி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் நடத்தப்பட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவியும், தெற்கைச்சேர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் சிலரும் நேற்றுக் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று 3 ஆவது நாளாகத் தொடர்ந்தது.



"இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த, இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட, கடத்தப்பட்டவர்களின் விடுதலை தொடர்பான தெளிவான வெளிப்படுத்தலை இலங்கை அரசு உடனடியாக நம்பத் தகுந்த வகையில் வெளிப்படுத்தல் வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஐ.நா மேலும் கால அவகாசம் வழங்கக்கூடாது என்று தெரிவித்தே தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எங்களுக்குத்தீர்க்கமான முடிவுகள் கிடைக்கா விட்டால் போராட்டவடிவம் மாறும். அது உணவு ஒறுப்பு போராட்டமாக அமையாது." என்று காணாமல் போனவர்களின் உறவினர்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த மாதம் 23 ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். நான்கு நாள்கள் தொடர்ந்த அந்தப் போராட்டம் இராஜாங்க அமைச்சரின் வாக்குறுதியை அடுத்துக் கைவிடப்பட்டது. தற்போது இரண்டாவது முறையாக உணவு ஒறுப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ற-21-6-35)

## கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப்.27

இரண்டு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் கடத்தப்பட்ட 22 கிலோ கஞ்சா கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் மேலும் ஒருவர் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.



இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் கார் ஒன்றின் மூலம் 22 கிலோ கஞ்சா கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் பளை நகர் பகுதியில் வைத்து இரண்டு பேரை போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்தி பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி பெறப்பட்டது. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்ன பூநகரி பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் நேற்று நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர் .

(ற-6)

## அக்கறையில்லாத அரசுக்கு எதிராகப் போராட வேண்டும்

*அமைச்சர் ராஜித கூறுகின்றார்*

அதிகாரத்துக்கு வரும் அரசு பொதுமக்களின் நலன்களில் அக்கறை கொள்ளவில்லை என்றால் அந்த அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களின் அமைப்பால் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் நாட்டின் அரசை அமைக்கின்றார்கள். அவ்வாறு அமைக்கப்படும் அரசு மக்களின் நலன்களின் அக்கறை செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் மக்கள் அரசுக்கு எதிராகப் போராடுவார்கள். அடுத்த சந்ததியினர் அரசியல் அமைப்புக்கு எதிராகவே கிளர்ந்தெழுவார்கள். என்றார். (ற-4)

## புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்துகிறது அரசு

*பெங்கமுவே நாலக தேரர் குற்றச்சாட்டு*

கொழும்பு, பெப். 27

கூட்டரசு பிரிவினைவாத இலக்குகளைக் கொண்ட புலம்பெயர்வாழ் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே புலனாய்வுத் துறையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறது.

இவ்வாறு பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் கீத்நொயார் மீது தாக்குதல் நடத்தியதாக புலனாய்வுத்துறை அதிகாரிகளை சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுப்புக்காவலில் வைப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரிவினைவாதிகளை சந்தோசப்படுத்தும் வகையிலான தீர்மானங்களை மேற்கொள்ளாது இராணுவத்தைப் பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ற-10)

## நட்டமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த நடவடிக்கை!

நட்டமடையும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. நட்டமடைந்து வரும் அரச நிறுவனங்களை விற்பனை செய்ய வேண்டும் அல்லது அவற்றை தனியார் மயப்படுத்த வேண்டுமென்றுஅரசின்மூத்தஆலோசகர் ஒருவர் அழுத்தம் பிரயோகித்துவருகின்றார் என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நட்டமடைந்து வரும் நிறுவனத்தின் பிரதானிகளை அழைத்து குறித்த மூத்த ஆலோசகர் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

நிறுவனங்களை விற்பனை செய்வதற்காக நடைபெறும் கூட்டங்கள் அமைச்சர்களுக்கு தெரியாமல் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினையால் அரச நிறுவனங்களின் பிரதானிகள் பெரும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர் என்றும் கூறப்படு கின்றது. (ற-4)

## கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி - வன்னேரிக்குளத்தில் பால் கொள்வனவு செய்யும் நேரத்தை மாற்ற வேண்டும் என்று கோரி கால்நடை வளர்ப்பாளர்கள் நேற்று காலை 7 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பால் கொள்வனவு செய்யும் நிறுவனம், காலை 7 மணிக்குப் பாலைக் கொள்வனவு செய்கின்றது. கிராமத்தின் சகல இடங்களில் இருந்தும் பாலை குறித்த இடத்துக்குக் கொண்டுவருவதற்கு குறைந்தது காலை 8 மணியாகும். கால்நடை வளர்ப்பாளர்கள் பாலை முழுமையாக விற்க முடியாதுள்ளது.,காலை 8 மணியளவில் பாலைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-21)

## சன்னாவின் மூத்த சகோதரனும் பொலிஸாரால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்படும் சன்னாவின், மற்றொரு சகோதரனும் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இரண்டாவது சகோதரன் உள்ளிட்ட 3 பேரும் பொலிஸ் தடுப்பில் விசாரணையில் உள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சன்னா நீண்டகாலமாகத் தேடப்பட்டு வருகிறார். அவரைப் பொலிஸார் இன்றுவரை கைது செய்யவில்லை. இந்த நிலையில் சன்னாவின் இளைய சகோதரன் உள்ளிட்ட 3 பேர் தென்மராட்சியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், சன்னாவின் மூத்த சகோதரன் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரும் வாள் உட்பட சில குற்றச் செயல்களில் ஈடுபட்டார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதேவேளை, வாள்வெட்டு உள்ளிட்ட அடாவடிகளுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்படும் சன்னா நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-4-101-106)

## மருத்துவ சேவை தொழிற்சங்கங்கள் நாளை கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவையினர், துணை மருத்துவ சேவையினர் நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணித்தியால கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளதாக தாதியர் சங்கம் தெரிவித்தது. மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும், பதவியுயர்வுக்கு அதிகரிக்கப்பட்ட காலத்தைக் குறைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துக் கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலயத்தின் 2017ஆம் ஆண்டுக்கான இல்ல மெய் வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் த.யோகானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டார். (10)




இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள பிப் சவுந்தரம் மீடியா நிலையத்தில், ஊடக இளங்கலைமாணி மற்றும் முதுகலைமாணி கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா கடந்த வாரம் யாழ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஓய்வுபெற்ற ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் மாணவர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவித்தார். (ஐ)



புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் மாணவன் வசந்தராசா டிலக்சன் பல்நோக்குடைய உயிரி அடுப்பொன்றை கண்டுபிடித்து தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளார். இந்தச் சாதனையைப் படைத்த மாணவனைக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி சி.இராசரத்தினம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. (10)



மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சுதர்சினி விக்னமோகன் உரையாற்றுவதையும், நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் இடைவேளை நிகழ்வையும், மாணவர் கௌரவிப்பையும் காணலாம். (10)



புதுக்குடியிருப்பு இரணைப்பாலை கிராமத்தில் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட கதிர்காம நாதன் கஜித் குடும்பத்தினருக்கு அவர்களது மருத்துவ செலவுக்காக குணா அறக்கட்டளை நிதியத்தினால் ஐம்பதினாயிரம் ரூபா அறக்கட்டளை நிதிய இணைப்பாளர் [illegible] வைக்கப்பட்டது. (7)



இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 67ஆவது ஆண்டு விழா அண்மையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் திருவள்ளுவர் மகாசபையின் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவ மாணவிகளையும், 2017ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளையும் கௌரவித்துப் பரிசில்கள் வழங்குவதைக் காணலாம். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் நேற்று மாலை 2 கும்பல்கள் பெரும் அடாவடி

## ஓட்டோ ஒன்றும் அடித்துச் சேதம்



யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் முதன்மைச் சாலை மடத்தடியில் நேற்றுமாலை இரண்டு கும்பல் இடையே மோதல் இடம்பெற்றது. சுமார் 20 பேர் வரை வாள்கள், கத்திகள் கொண்டு அடிதடியில் ஈடுபட்டதனால் அந்த இடத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. முச்சக்கரவண்டி ஒன்றும் அடித்து நொறுக்கப்பட்டு புரட்டி சாலையோரம் இரவிரவாகக் காணப்பட்டது.

இரு கும்பலும் கத்திச் சத்தமிட்டு அடாவடியில் ஈடுபட்டதோடு, அவர்கள் எறிபட்ட கற்கள் அயலிலுள்ள வீடு களுக்கு மேல் சென்று விழுந்தன என்று தெரிவிக்கப்பட்டது. சிறிது நேரம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. கும்பல்களின் அட்டூழியம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் அந்த இடத்துக்குச் செல்ல சில நிமிடங்களுக்கு முன்னர் அந்தக் கும்பல்கள் ஆயுதங்களுடன் அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றன.

அந்த இடத்தில் சுகாதார நிலையம் ஒன்றுக்கு அருகில் முச்சக்கரவண்டி ஒன்று தலைகீழாகப் புரட்டிவிடப்பட்டுள்ளது. அதற்கு முதல் அது கடுமையாகத் தாக்கப்பட்டு அதன் பாகங்கள் பிரித்து எறியப்பட்டுள்ளன. முச்சக்கர வண்டியின் அதிகமான பாகங்களை அதில் காணவில்லை. (வ4,101)

# கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை நீக்க இடமளிக்கக்கூடாது பிரிட்டன்

## வலியுறுத்தி லண்டனில் உணவு ஒறுப்புப் போராட்டம்




லண்டன், பெப். 28

ஐ.நா. தீர்மானத்தில் பரிந்துரைக்கப் பட்டகலப்புநீதிமன்றப்பொறிமுறையை நீக்குவதற்கு அல்லது அதனை நிறை வேற்ற கால அவகாசம் வழங்கு வதை பிரிட்டன் ஆதரவளிக்கக் கூடாது என்று வலியுறுத்தி புலம்பெயர் தமிழ் மக்களால் லண்டனில் உணவு ஒறுப்புப் பேராட்டம் முன்னெடுக்கப் படுகிறது.

இலங்கை அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு தமிழர்களின் பூர்வீக நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். பிலக்குடியிருப்பு மக்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் காணிகளை மீட்கும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இன்னும் சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ)

**வெளிவந்துவிட்டது**

**குவி அச்சகத்தின் புதிய வெளியீடுகளாக**
- Class Work Book Grade-8
- Happy Kids English Grade-1
- Practise your Grammar Grade-11
- கணிதம் தரம்-7(தமிழ் மொழி மூலம் & English Medium)
- கணிதம் தரம்-10(தமிழ் மொழி மூலம் & English Medium)

சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

K.V,Printers Book Distributing Centre
355, Clock Tower Road, Jaffna.
T.P:- 021 720 0237

**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

**ஏலவிற்பனை**

எமது கல்வி அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 06.03.2017 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும்.

1. பயன்படுத்தப்பட்ட கணினிகள்
2. பிறின்டர்கள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள்
3. இலத்திரனியல் உபகரணங்கள்
4. உடைந்த தளபாடங்கள்
5. ஏனைய சிறு அலுவலக உபகரணங்கள்

(AJA/IN/862) (22,18) -செயலாளர்

# இலங்கை தேசிய மகா சபையின் முதலாவது ஒன்றுகூடல் நாளை

அத்துரலிய ரத்ன தேரர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை தேசிய மகா சபையின் முதலாவது ஒன்றுகூடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன் னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முதன்மை விருந்தினராகவும், சமயத்தலைவர்கள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் உட்பட பலர் கலந்துகொள்வர். (ஐ-10)

**உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**வர்ணம் பூசுதலுக்கான கேள்விகோரல்**

புறாப்பொறுக்கி ஆலடியில் அமைந்துள்ள எமது சங்க எரிபொருள் நிரப்பு நிலைய கட்டடம் மற்றும் கனோபி ஆகியவற்றுக்கு வர்ணம் பூசுவதற்காக கூலிக்கான கேள்விகூறுகள் கோரப்படுகின்றன.

இதற்கான கேள்விக்கூறைச் சமர்ப்பிக்க விரும்புவோர் எரிபொருள் நிரப்பு நிலையத்தைப் பார்வையிட்டுத் தங்கள் கேள்விக்கூறை பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு *15.03.2017* ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்,
25.02.2017 (AJA/881)(11.18)

**உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு**

**01.கட்டார்**
**எயார்ப் போட் கார்கோ (லேபர்ஸ்) - (50 ஆண்கள்)**
- 1100 RL SR 44000+OT உணவு, தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு. (வயது 20-35)
- லைட் வெயிக்கிள் சாரதி 20 ஆண்கள் (வயது 20 - 40) RL 1800 SR 72 000 + OT உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

**02.சவுதி**
**(சுப்பர் மார்க்கட், பல்கலைக் கழகம், வங்கி, அலுவலகம்)**
RL 1200 SR 48000+OT தங்குமிட மருத்துவ வசதிகள் உண்டு. (வயது 21-45) 30 ஆண்கள்

**03.மலேசிய**
**சுப்பர் மார்க்கட்**
RM 1300 SR 43000+OT தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு. (வயது 20-45) 20 ஆண்கள்

New Gulf Lankan Man Power
136, Dam Sl.Co:12
Phone No: 077 044 7386/ 077 346 8011
E - mail: asianlanka27@gmail.com

**வீடு வளவு விற்பனைக்குண்டு**

டிஸ்பென்சரி லேன், உரும்பிராயில் 6 பரப்பில் அமைந்துள்ள மேல்மாடி வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

021 221 9526, 077 628 5831, 077 610 1872

**காணி தேவை**

கோப்பாய்,இராஜவீதி, உரும்பிராய், ஊரெழு பகுதியில் வீட்டுடன் அல்லது வெற்றுக் காணி தேவை. நல்ல சுற்றாடல் அவசியம்.

**070 202 6746**

**தேவை**

அச்சக வேலையில் அனுபவம் உள்ள **கணினி இயக்குநர்** தேவை.

077 306 8982
சிவரஞ்சனம் , கோண்டாவில்

**பெயர்மாற்றம்**

**டெலினா** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **மேரி ஆன் டெலினா** எனப் பெயர் மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**மேரி ஆன் டெலினா**

**காணி விற்பனைக்கு**

ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி வீதியில் கல்லுண்டாய் வைரவர் கோயிலில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 46 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 443 4501, 075 070 3811**

**CANE HOSPICE**

No. 05, Sabapathipillai Road,
Uduvil, Chunnakam.

VACANCY FOR POST OF SENIOR NURSES, DRIVER & HEALTH CARE ASSISTANTS

CANE Hospice has started home based palliative care programme and terminal care of cancer patients and looking for the suitable person for the following posts.

1. SENIOR NURSES
Should be registered to practice as a Nurse. Experience in the Nursing field or in the Recognized organization will be an added qualification.

2. DRIVER CUM HEALTH CARE ASSISTANT
In addition to the driving experience (Three Wheeler & Van) Should Preferable Nursing care experience.

3. HEALTH CARE ASSISTANTS
Should have undergone a 01 (One) year training in a recognized training Centre and suitable qualification and experience in Health care in a recognize Organization.

Salary:

Nurses : 20,000.00 - 30,000.00
Driver cum Health care Assistant :
10.000.00 - 15,000.00
Health care Assistant : 10,000.00 - 12.000.00

Salary will be based on qualification & experience,

Applicants are requested to forward their application by registered post to reach by 05.03.2017 addressed to Chairman, CANE Hospice, No.05, Sabapathipillai Road, Uduvil, Chunnakam.

**பணிநயப்பு**




**அகவை அறுபதில் இன்று (27.02.2017) காலடிவைக்கும்**
**திருமதி கலாவதி கணேசலிங்கம்** அவர்கள்
**(நிர்வாக அலுவலர் சாவகச்சேரி நகராட்சிமன்றம்)**

நல்லபெரும் சேவையினை நாளும்
பேணி நயம்படவே பழகிவரும்
சேவைப்பேறேவல்ல விளைவேலியதன்
மருதம் வீற்றுவாஞ்சையோடு அருள்புரியும்
பிள்ளையாரின் தெள்ளுபுகழ்க் கருணையினால்
காலம் தோறும் களிப்போடு நீர் வாழ்வீர் காலம் வாழ்த்தும்
ஞாலமதில் நயமான சேவை செய்தீர்
நன்றி சொல்லி மாளாதே என்தான் செய்வோம்
நகராட்சி மன்றத்தை நாடுபோற்றச் செய்த
பெரும் பெருமையெல்லாம் உமக்கே சாரும்
செகம் புகழும் நகரமென செழிக்கச்செய்த
செயல்வீரர் நவரத்தினராசாஜயா பின்னே
சேவையது நம் கடமை என்று பேணி
நெடிதுழைத்த நேரிழையே நீண்டு வாழ்க
பயன் கருதாப் பணி சுமந்த அம்மா உங்கள்
பங்கமறு பணி நயந்தோம் பணிந்தோம் வாழி

வாழ்த்துவோர்:
**நகராட்சி மன்ற நலன்புரி சங்கம் சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 24ஆவது...

இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் தங்களுடைய சொந்தக்காணியை விடுவிக்குமாறு 49 குடும்பங்கள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் நேற்றைய தினம் நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்ததுடன், மக்களின் நியாயபூர்வமான போராட்டத்துக்கு எமது ஆதரவு எப்போதும் இருக்கும் என்று தெரிவித்தனர்.

பொதுமக்கள் முன்னெடுத்துவரும் அறவழிப் போராட்டத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

'எங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த காலங்களில் பல அறவழிப்போராட்டங்களை மேற்கொண்டோம். அதன் தொடர்ச்சியாக நாம் தற்போது 24 நாட்களாக பிரதேச செயலகத்துக்கு முன்னால் தகரக் கொட்டகை அமைத்து அறவழிப் போராட்டத்தையும் அதனைத் தொடர்ந்து சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றோம். எங்கள் காணிகள் எமக்கு வழங்கப்பட்டு எங்கள் அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அல்லாது விடின் நாங்கள் இந்த பிரதேச செயலகத்துக்கு முன்னால் கிடந்தே எமது ஆயுளை முடித்துக்கொள்வோம்' என்று அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் தெரிவித்தனர்.

(வ-7)

### 27ஆவது நாள்...

பெருமளவான இளைஞர்கள் இரவு முழுவதும் போராட்ட களத்திலேயே தங்கியிருந்து மக்களுக்குத் தமது ஆதரவை வழங்கினர்.

பிலக்குடியிருப்பில் தமது வாழ்விட நிலங்களில் நிலைகொண்டுள்ள வான் படையினர் வெளியேறி தமது காணிகளை மீள வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை கடந்த 27 நாட்களாக தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடைய நியாயபூர்வமான கோரிக்கைக்கு நாடு முழுவதும் இன, மத, மொழி கடந்து மக்களின் ஆதரவு பெருகுகிறது.

பிலக்குடியிருப்பு அறவழிப்போராட்டக்களத்தில் துன்பப்படும் குழந்தைகள் நிலைகண்டு அவர்களுக்கு விரைவாக தீர்வுகள் வழங்கப்பட்டு அவர்கள் காணிகளுக்குச் சென்று மீள்குடியேற வேண்டும் என்பதை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் வருகைதந்த இளைஞர்கள் பொதுமக்களுடன் இணைந்து போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம். மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள், விளையாட்டுக் கழகத்தினர் என நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக நேற்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களும் நேற்றைய தினம் பிலக்குடியிருப்பு பொதுமக்களைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

(வ-7)

### மகிந்தவின்...

முடியும் என்றால், யாருமே நினைத்துப் பார்க்காத விதத்தில் ஆட்சி மாற்றமடையும். நாட்டின் தலைவராக மீண்டும் மகிந்த ராஜபக்ச பதவியேற்பார்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

புறக்கோட்டையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முன்னாள் படை வீரர்களை நேற்று நேரில் சென்று சந்தித்த பின்னர் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது

அரசுக்குத் தெரியாமல் அரசு கவிழ்க்கப்படும். எல்லோரும் எண்ணுவதற்கு மாறாக அரசு மாற்றமடையும். அரச தலைவர் தேர்தலின் ஊடாக தலைமை அமைச்சர் தெரிவு செய்யப்பட்டார். முன் எப்போதும் நடைபெறாத வகையில் அரச தலைவர் தேர்தலை நடத்தி, தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

நினைக்காத ஒன்று நடைபெறும். அதனை நாம் நடத்திக்காட்டுவோம்.

மகிந்த ராஜபக்ச நாட்டைப் பொறுப்பேற்பார். வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்ப மீதமாக உள்ள ஒருவராக மகிந்த ராஜபக்ச மாத்திரமே இருக்கின்றார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பெரும்பாலானவர்கள், கூட்டு எதிர்க்கட்சியில் உள்ளனர். ஏனைய அரசியல் கட்சிகளின் பெரும்பாலானவர்கள், மகிந்த ராஜபக்சவுக்கே ஆதரவு வழங்குகின்றனர். அதுவே யதார்த்தம் என்றார்.

(வ-5)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**குமாரசாமி பார்வதி**

கடந்த 28.01.2017 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி குமாரசாமி பார்வதி அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நடைபெற்று இன்று (27.02.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் மணிமண்டபத்தில் மதியபோசனம் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

73, வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் முருகன்
**தங்கராசா**



தோற்றம்
15.08.1943

மறைவு
29.01.2017

கடந்த 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் முருகன் தங்கராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.02.2017) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணல்தெரு,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை,
021 790 3850

**குடும்பத்தினர்.**

(ஏ.என்.ஈ.0054) (13.18)

## கண்ணீர் அஞ்சலி



யா/இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில்
சிரேஷ்ட ஆசிரியராக கடமையாற்றும்
செல்வி **சுவேந்திராதேவி குருநாதபிள்ளை**
அவர்களின் அன்புச் சகோதரன்

**கு.ஜெயபாலன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் ஆசிரியருக்கும் மற்றும் அவர்களின் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**இராசையா ஜெயகோபால்**

(பௌதிகவியல்துறை, தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ் பல்கலைக்கழகம்)

திதி: 03.03.2017



தோற்றம்
1961.06.28

மறைவு
2012.02.27

பண்பின் உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றும் அகலாது

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

(C 28361)
(14,17,18)

*என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்*
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ கைதடி முத்துக்
குமாரசுவாமி ம.வி.
ஆசிரியை **திருமதி
பாக்கியலட்சுமி
குமாரதேவன்**
அவர்களின் பாசமிகு
தந்தையார்

**நாகமணி சண்முகம்**

(ஓய்வு நிலை சாரதி இ.போ.ச)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!

பாடசாலை சமூகம்
யா / கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. கைதடி

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.02.2017 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
அமரர் திருமதி

**சரஸ்வதி (செல்லம்மா) ஆனந்தசிவநடராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (28.02.2017) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் – ஆனந்தசிவநடராசா
(கண்ணன் சாமியார்)
இல.14, முத்தட்டுமட வீதி, கோண்டாவில்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**கந்தையா பொன்னுத்துரை**

தோற்றம்
19.08.1943

மறைவு
12.03.2013

திதி: மாசிமாத பூர்வபக்க பிரதமை
(27.02.2017)

எங்கள் இனிய தெய்வமே நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறாது எம் துயரம்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்



வீரப்பதிராயன்,
தாளவாய் தெற்கு,
கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலத்தில் திடீர்த் தீ

## 4 வகுப்பறைகளிலிருந்த உடைமைகள் எரிந்து நாசம்

கிளிநொச்சி, பெப். 27

கிளிநொச்சி, புதுமுறிப்பு விக்கினேஸ் வரா வித்தியாலயத்தில் நேற்றுத் திடீர் தீ ஏற்பட்டதால் மாணவர்கள் கற்கும் ஓலைக் கொட்டகையும் அதனுள் இருந்த தளபாடங்களும் எரிந்து நாசமாகின.

பாடசாலை இன்று இடம்பெறவுள்ள நிலையில், 4 பிரிவு வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் 90 மாணவர்கள் கல்



வியைத் தொடர்வதில் கடும் இடர்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மாற்றுவழி உடனடியாக ஏற்படுத்தித் தந்தால்தான் மாணவர்களின் கல்வியைப் பாதிக்காது முன்னெடுக்கலாம் என்று அந்தப் பாடசாலையின் அதிபர் த.கண்ணபிரான் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீ விபத்தினால் சுமார் 10 லட்சம் ரூபா வரையில் இழப்பு ஏற்பட்டுள்ளது. தூண் நிறுத்தப்பட்டு கிடுகினால் வேயப்பட்ட தற்காலிகக் கொட்டகையே முற்றாக எரிந்து சாம்பலாகியது. தீ பற்றியவுடன் பாடசாலையை அண்மித்துள்ளவர்கள் விரைந்து தீயைக் அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். பல தளபாடங்களை அவர்கள் வெளியே எடுத்தபோதும் பயனளிக்கவில்லை. பின்னர் பிரதேசசபையினரும் பொலிஸாரும் தத்தமது தண்ணீர் தாங்கிகளைக் கொண்டு சென்று தீயை முற்றாக அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

100 அடி நீளம் 20 அடி அகலமுடைய குறித்த ஓலைக் கொட்டகையில் தரம் 6, 7 வகுப்புக்களின் ஏ.பி பிரிவுகளையுடைய 4 வகுப்பு அறைகளில் 90 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இன்று பாடசாலைநாள். 90 மாணவர்களுக்கு என்ன மாற்று ஏற்பாடு செய்வது என்பது தொடர்பில் இன்றுதான் ஆராயவேண்டும். மாணவர்களின் கல்வியைப் பாதிக்க விடமுடியாது. ஆனால் கூரை உட்பட மாணவர்களின் கதிரை மேசைகளும் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தச் சிக்கலான நிலை ஏனைய வகுப்புக்களின் மாணவர்களின் கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் உடனடித் தீர்வு வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவ நிலையத்தினர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு மாவட்டச் செயலருக்கு அறிவிப்பதாகக் கூறிச் சென்றனர். பொலிஸார், படையினர், மற்றும் பலரும் வந்து பார்த்துச் சென்றனர். இன்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

எவ்வாறாயினும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு என்று ஒரு தீயணைக்கும் இயந்திரம் இல்லாமையால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றும் செய்யமுடியாத நிலை காணப்படுவதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். (வ-4)

# பாடசாலைகளில் பௌதிக வளப்பற்றாக்குறை நிவர்த்தி செய்ய அரசு சிறப்பு வேலைத்திட்டம்

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 27

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசு சிறப்பு வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி உள்ளது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவை றோயல் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையிலான சூழலை கட்டியெழுப்புவது தொடர்பில் அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக உபவேந்தர்கள், பீடாதிபதிகள், ஒழுக்காற்று சபை உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏனைய நிறுவனங்களுடன் கைகோர்த்துக் கொள்ளும் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

பெற்றோர்களினதும், நாட்டினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் மனிதாபிமானத்துடனும், சகோதரத்துவத்துடனும் ஒரு சிறந்த மாணவராக தனது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு உலகுக்கு ஒரு முன் மாதிரியான மாணவத் தலைமுறையாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் விளங்க வேண்டும்.

எழுச்சிபெறும் பொலன்னறுவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டாகும் போது பொலன்னறுவை மாவட்டத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் பௌதிகத் தேவைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே போன்று பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுநீரக வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் இந்த வருடம் ஜூன் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும். சீன அரசின் அன்பளிப்பில் அனைத்து சிறுநீரக நோயாளிகளுக்கும் நன்மைபயக்கும் வகையில் இந்த வைத்தியசாலை அமையும் -என்றார். (ஐ-10)

# சாலை அறிவுறுத்தலை மீறி பாடசாலை நேரங்களிலும் கனரக வாகனங்கள் பயணம்

## பொலிஸார் மீது பெற்றோர் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி சாலையில் பாடசாலை நேரங்களில் கனரக வாகனம் பயணிக்கத் தடை என்று யாழ். மரநகர சபையால் அறிவித்தல் பலகை சாலையின் நான்கு இடங்களில் நடப்பட்டுள்ளன. அதனைப் பொலிஸார் நடைமுறைப்படுத்துவது கிடையாது.

இவ்வாறு கல்லூரி மாணவிகளின் பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

பலாலி சாலையையும் காங்கேசன்துறை சாலையையும் இணைக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி சாலையின் ஊடாக மகளிர் கல்லூரி, மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றுடன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாடசாலை நாட்களில் பயணிக்கின்றனர். இதனால் காலை 6.30 முதல் 8 மணி வரையிலும் பிற்பகல் 1.30 முதல் 2.30 மணிவரையிலும் கனரக வாகனங்கள் இந்தப் பாதையூடாக பயணிப்பதற்கு தடைவிதித்து அறிவித்தல் பலகைகள் 4 இடங்களில் யாழ். மாநகர சபையால் நடப்பட்டன.

இவ்வாறு அறிவித்தல் பலகைகள் உள்ள சாலையில் தினமும் காலையும் பிற்பகலும் சாலை ஒழுங்குக்காக 4 இடங்களில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுகின்றனர் . ஆனால் பாதையின் ஊடாக பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் தவிர்ந்த பார ஊர்திகள் , டிப்பர்களும் மாணவர்களின் ஊடாக வீதியை தடை செய்த வண்ணம் மிகவும் நெருக்கடியாக பயணிக்கின்றன. ஆனால் கடமையில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிஸாரோ வேடிக்கை பார்க்கின்றனர் என்று பெற்றோர் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் குறித்த சாலையில் தினமும் ஆயிரக்கணக்கான மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு வழிவிடும் வகையில் நடப்பட்டுள்ள அறிவித்தலை நடைமுறைப்படுத்த பொலிஸ் அதிகாரிகள் கவனம் செலுத்தி மாணவர்களின் பயணத்துக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-101)

# ஹெரோயினுடன் இருவர் கைது

வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஒரு கிலோ கிராம் ஹெரோயினுடன் பாகிஸ்தான் நாட்டு குடிமகனும், 500 கிராம் ஹெரோயினுடன் மற்றுமொரு நபரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# மரண அறிவித்தல்

## நாகமணி சண்முகம்

**(ஓய்வுநிலை சாரதி - இலங்கைப் போக்குவரத்துச்சபை)**



மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சண்முகம் 25.02.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி– சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், அமிர்தலிங்கம் (Italy), பாக்கியலட்சுமி, மகாலட்சுமி, பாலசரஸ்வதி (India), குகேசன் (U.K), சபேசன் (France), கணேசலிங்கம் (Canada), ஞானகௌரி (U.K), அமுதவதி, மகேந்திரலிங்கம் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசபூபதி, காலஞ்சென்ற குமாரதேவன் மற்றும் சுகுணராஜா, சண்முகவேலு, காலஞ்சென்ற ரஜிந்தினி மற்றும் இராஜமலர், யோகேஸ்வரன், வசந்தி, விஜயரூபன், ஜெயச்சந்திரன், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிநாதனின் பாசமிகு பெரியப்பாவும், சுகிர்தா, தர்சன், சசிதா, சர்வேஸ், மயூரன், மிதுராஜினி, இந்துஜா, டானியஸ், காயத்திரி, கோகுலன், நிருபன், கிருசாந், கோபிசாந், தேவமேனன், கிருத்திகா, ஹர்சியா, யதுசன், ஆருஷன், சர்மிகா, சரண்யா, சௌமியா, சேருஜன், யதுசன், அனோஜா, கவின், பானுசன், கௌரிசங்கர், பிரவுஜன், சயந்தவி, அரிஷ், அனுஷ், லரீபா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், சமீரா, சைடன், பிறைசன், ஆருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா போராட்டத்துக்கு இன,மத பேதமின்றி அனைவரும் பங்குபற்றவேண்டும்

*அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள்*



யாழ்ப்பாணம், பெப்.27

"யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்துவதற்கு வவுனியா வளாக ஆசிரியர் சங்கம் எடுத்துள்ள முயற்சி காலத்தின் தேவையாகும். அதற்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றோம். வடமாகாண மக்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாணத்தில் இன்னுமொரு பல்கலைக்கழகம் உருவாகுவது எமது மாகாணத்துக்குப் பெருமை மட்டுமல்லாது இளம் சந்ததியினரைச் சிறந்த புத்திஜீவிகளாக உருவாக்குவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கும். குறிப்பாக இதன் மூலம் எமது வளம் சார்ந்த பட்டப்படிப்புக்களை எமது மாகாணத்தில் உருவாக்கி அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு பெரும் உதவியாக அமையும்.

இதன் மூலம் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற முடியும். எமது மாகாண மாணவர்கள் வேறு பல்கலைக்கழகங்களில் பயிலும் போது அதிகமான பணத்தைத் தமது அன்றாட தேவைக்காகச செலவிடுகின்றனர். எமது பகுதியில் ஓர் பல்கலைக்கழகம் அமையுமானால், அந்த அநாவசியமான செலவுகளைக் குறைக்க முடியும். இதன் மூலம் வருமானம் குறைவாகவுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

எனவே, நாளை நடைபெறவிருக்கும் போராட்டத்தில் வடமாகாண மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி கலந்து கொள்ள வேண்டும். குறிப்பாக கிராம மட்ட அமைப்புக்கள், தனியார் பேருந்துச் சங்கத்தினர், வர்த்தக சங்கத்தினர், மீனவ சமூகத்தினர், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டுதங்களது பூரண ஆதரவை வழங்க வேண்டும். என்றுள்ளது. (ஜ-21)

# தென்னைப் பயிர் செய்கையாளர்களுக்கு சுய தொழில் கடன்

யாழ்ப்பாணம்,பெப்.27

தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் ஊடாக தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு சுய தொழில் கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன என்று தென்னைப்பயிர்ச் செய்கை சபையின் வட மாகாண பிராந்திய முகாமையாளர்தே.வைகுந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது:

தென்னைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள பயனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், இலகு கடன் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் கடன் திட்டத்தின் ஊடாக 1 ஏக்கருக்கு ஆகக்கூடிய தொகையாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

இந்தக் கடனைப் பெற வேண்டுமானால் தென்னை வளர்ப்புத் தொடர்பான ஆவணங்களைஎங்களிடம்அனுப்ப வேண்டும். அவர்களின் விண்ணப்பங்களை நாங்கள்பரிசீலனைசெய்து அவர்கள் தென்னைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள காணிகளை ஆய்வு செய்வோம்.

அதன் பின்னர் அந்தக் காணியில் தென்னைப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான குழா ய்க்கிணறு, பசளைகள், தென்னம் கன்றுகள் போன்றவற்றுக்கான உதவிகள் வழங்கப்படும். குறித்த தேவைகள் கடன் பெறுவதற்கு முன்னரே நிறைவேற்றப்பட்டிருப்பின், அதற்கான பெறுமதிகளும் கணிக்கப்பட்டு அவர்களுக்கான கடன் உதவிகள் வழங்கப்படும்.

இந்தக் கடன் திட்டத்தின் மூலம் ஆகக்கூடியது 30 ஏக்கர் வரையான காணிகளுக்கு கடனைப் பெற முடியும். இந்தக் கடனைப் பெறுவதற்கு வழமையாக வங்கிகளில் கடன் பெறும் போது பின்பற்றப்படும் பொதுவான நிபந்தனைகள் பின்பற்றப்படும். இரண்டு அரச உத்தியோகத்தர்களின் கையொப்பம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் தென்னைச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள மூவர் இணைந்து குழுக் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு, 9 வீத வட்டி அறவிடப்படும். கடன் பெற்றஒருபயனாளிகடன் பெற்ற திகதியிலிருந்து ஆறு அல்லது 1 வருடங்களின் பின்னர் மாதாந்தம் தங்களின் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் வழங்கப்பட்டதிலிருந்து ஒருவருட காலம் தொடர்ச்சியாக கடனுக்கான தவணைக் கட்டணத்தை செலுத்துபவாராயின் அந்தப் பயனாளிக்கு வட்டி மானியங்களும் வழங்கப்படும். என்றார். (ஜ-8)

*மந்திரத் தாயத்து கட்டியிருந்ததால்*

# இறுதி அஞ்சலி செலுத்தாமல் நழுவினார் மகிந்த

கொழும்பு,பெப். 27

சக்தி வாய்ந்த தாயத்து ஒன்றைக் கையில் கட்டியிருந்தமையால், இறந்தவரின் உடலுக்கு அருகில் சென்று, இறுதி அஞ்சலியைச் செலுத்துவதை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தவிர்த்துக் கொண்டார் என்று சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல் மாகாண சபை உறுப்பினர் மெரில் பெரேராவின் தந்தையின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக, தனது மகன் நாமல் ராஜபக்சவுடன் மகிந்த சென்றிருந்தார். நாமல் ராஜபக்ச மட்டும் இறந்த உடலுக்கு அருகில் சென்று இறுதி அஞ்சலியைச் செலுத்தினார். மகிந்த அஞ்சலி செலுத்தவில்லை. அதற்குக் காரணம் அவரது கையில் கட்டியிருந்த தாயத்தே என்று தெரிவிக்கப்பட்டது.

வீழ்ச்சியடைந்து வரும் அரசியல் ஈர்ப்பைப் பாதுகாப்பதற்காகவே, சக்தி வாய்ந்த மந்திர தகடுகள் பொருத்திய தாயத்தை மகிந்த கட்டியுள்ளார். அதனால் இறப்புச் சடங்குகளில் கலந்து கொள்ளவேண்டாம் என்று மகிந்தவின் சோதிடர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். சோதிடத்தை நம்பிய மகிந்த ராஜபக்ச தனது பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னரே அரச தலைவர் தேர்தலை நடத்தித் தோல்வியடைந்திருந்தார் - என்றுள்ளது. (ஜ-4)

*புதுடில்லியின் தடையையும் உடைத்து*

# கொழும்புக்கு போர் வானூர்தியை விற்பதற்குப் பாகிஸ்தான் முயற்சி

இலங்கைக்கு எட்டு ஜே.எவ். 17 ஜெட் போர் வானூர்திகளை விற்பனை செய்வதற்கான புதிய முயற்சிகளை பாகிஸ்தான் முன்னெடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடம் பாகி ஸ்தானிடம் போர் வானூர்திகளைக் கொள்வனவு செய்ய கொழும்பு அரசு எடுத்த முயற்சியை இந்தியா தடுத்திருந்தது.

இலங்கை வான் படை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு ஜே.எவ். 17 போர் வானூர்திக்கும், எவ் 7 ரக ஜெட் போர் வானூர்தி ஒன்றை அன்பளிப்பாக வழங்குவதற்கு இஸ்லாமாபாத் திட்டமிட்டிருப்பதாக, ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டு ள்ளது.

மூன்றாவது தலைமுறை சுப்பர்சொனிக் போர் வானூர்தியான எவ் 7, சீனாவில் தயாரிக்கப்பட்ட தாகும். இந்தப் போர் வானூர்திகள் 1992ஆம் ஆண்டில் இருந்து இலங்கை வான் படையின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்தத் தகவல் இன்னமும் உறுதிப்படுத்தப்படாத போதிலும், பாகிஸ்தான். இலங்கை ஆகிய நாடுகளால் மறுக்கப்படவில்லை. (வ-4)

# மாணவி மீது துர்நடத்தைக்கு முயன்ற இளைஞன் ஊர் மக்களிடம் வசமாகச் சிக்கினார்

தென்மராட்சி, பெப். 27

தென்மராட்சியைச் சேர்ந்த 14 வயது பாடசாலை மாணவிக்கு ஆசை வார்த்தை கூறி ஆள் நடமாட்டமற்ற பற்றைக்கு அழைத்துச் சென்ற 24 வயது இளைஞனின் முயற்சி ஊர் மக்களால் தடுக்கப்பட்டது. இளைஞனை மடக்கிப் பிடித்த மக்கள் அவரை முறையான கவனிப்பின் பின்னர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளின் பின்னர் பொலிஸார் இளைஞனை சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பட்டப் பகலில் தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்றது.

இளைஞன் 14 வயது மாணவியைக் காதலிப்பதாகத் தெரிவித்துள்ளார். மாணவிக்கு சில காலமாக அவர் ஆசை வார்த்தை பேசி வந்துள்ளார். மாணவியை அழைத்த இளைஞன் அவரை அங்குள்ள பற்றைப் பகுதிக்குக் கூட்டிச் சென்றுள்ளார். இதனை அவதானித்த ஊர் மக்கள் பற்றையைச் சுற்றி வளைத்து அவர்கள் இருவரையும் பிடித்து நையப்புடைத்தனர்.

பின்னர் அவர்களை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மாணவி மீது துர்நடத்தை முயற்சிதான் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்தனர்.

இளைஞரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (வ-9)


# இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதை ஏற்க முடியாது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குவதை ஏற்க முடியாது. இந்த முயற்சியைத் தமிழ் தலைமைகள் எதிர்க்க வேண்டும். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜெனிவாத் தீர்மானம் மற்றும் போர்க் குற்ற விசாரணைகள் நீர்த்துப் போகுமா என்ற தலைப்பில் சிறப்புக் கலந்துரையாடல் பேராசிரியர் சிற்றம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசுக்கு பொறுப்புக் கூறல் விடயத்தில் கால அவகாசத்தை வழங்க முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கடந்த கூட்டத்தொடரில் கூறியவற்றை இலங்கை அரசு இன்று வரை செயற்படுத்தவில்லை. போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு என குழு ஒன்று கூட நியமிக்கப்படவில்லை. பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கும் விடயங்களை அரசு இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. 2015ஆம் ஆண்டின் தீர்மானத்தின் படி காணி விடுவிப்பு தொடர்பாக அரசு கூறியதை இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை. என்றார்.

இதில் அரசியல் பத்தி எழுத்தாளர் நிலாந்தன் தெரிவித்ததாவது;

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றவில்லை என்றால் இலங்கை அரசை அழைத்து அவர்கள் தலையில் குட்டப் போவதில்லை. திரும்ப திரும்ப இலங்கை அரசுக்கு அவர்கள் கால அவகாசம் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். ஏன் என்றால் இந்த அரசை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் கால அவகாசம் வழங்கப்படும். தமிழ்த் தலைமைகள் கால அவகாசம் கொடுக்க வேண்டாம் என்றாலும் அவர்கள் கால அவகாசத்தை கொடுப்பார்கள். அதன் பின்னர் தமிழ் தலைவர்களை சம்மதிக்க வைப்பார்கள். இதற்கு தமிழ் தலைவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றால் நாங்கள் கொள்கை ரீதியாக இதனை ஒப்புக்கொள்ள மாட்டோம் என மறுக்க வேண்டும். அப்படி மறுக்க வில்லை என்றால் மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் தேர்தலில் வெற்றியடைந்தவர்கள், தோற்றவர்கள் என்று இல்லாமல் யார் என்றாலும் மக்களின் கருத்துக்களைக் கேட்டு அவர்களின் ஆவணங்களுடன் தனியான அறிக்கை ஒன்றை ஐ.நாவுக்கு அனுப்பி வைக்க முடியும்.

இதுதான் நடைமுறைச் சாத்தியமாகும். இந்தக் கால அவகாசத்தை எத்தனை பேர் எதிர்க்கின்றனர் ஆதரிக்கின்றனர் என்பதை உலகம் அறிய வேண்டும் என்றார்.

நிகழ்வின் இறுதிப்பகுதியில் வயோதிப பெண்மணி ஒருவர் ஆவேசமடைந்து, பேராசிரியர் சிற்றம்பலம் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கத் தகுதி இருக்கின்றதா? வெளிநாடுகளில் இருந்து நிதிகளைப் பெற்று இங்குள்ள இளையோரை மீண்டும் காவு கொடுக்கப் போகின்றீர்களா? நீங்கள் எல்லாரும் ஆயுதம் ஏந்திப் போராடியவர்களா? என்று கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோரிடம் வினவினார். அந்தச் சமயத்தில் என்ன செய்வது என்று தடுமாறிய அவர்கள் நாசூக்காக மண்டபத்திலிருந்து வெளியேறினார்கள். (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய் பங்குத் திருச்சபையினர்

# பிலக்குடியிருப்பு போராட்டத்துக்கு ஆதரவாக கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம் பெப் 27

முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து உரும்பிராய் பங்குத் திருச்சபையினரின் ஏற்பாட்டில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

"எங்கள் சொந்த மண்ணில் எங்களுக்கு விளையாட ஆசை இருக்காதா?", "எங்கள் கோரிக்கைக்கு முடிவே வராதா?", "கூட்டு அரசிலாவது நல்லதைச் செய்யுங்கள்", "சொந்தக் காணியில் குடியேற அனுமதியுங்கள்", "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் முடிவுதான் என்ன?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்களின் கவனவீர்ப்பு நடத்தப்பட்டது.

"முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தங்களின் சொந்த நிலங்களை மீட்பதற்கான போராட்டத்தில் சுமார் 26 நாள்களுக்கு மேலாக ஈடுபட்டுள்ளனர். அவர்களின் போராட்டத்துக்கு பல தரப்பினரும் ஆதரவு தெரிவிக்கின்றனர். தமிழ் மக்களின் காணிகளை எந்த நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அறவழிப் போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும். சொந்த நிலங்களில் அவர்கள் மீண்டும் குடியேறி, வறுமையிலிருந்து விடுபட்டு அவர்களின் வாழ்க்கை சிறக்க வேண்டும். அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நாங்களும் அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கின்றோம்." என்று போராட்டத்தில் கலந்து கொண்ட உரும்பிராய் மிக்கேல் தேவாலயத்தின் பங்குத்தந்தை ம.பத்திநாதன் தெரிவித்தார். (ற-8)






# "கேட்பாரில்லை என நினைத்தாயோ கேப்பாப்பிலவு மக்களுக்கு"

## இலங்கை ஆசிரியர் சங்கத்தினர், மொறட்டுவ பல்கலை. தமிழ் மாணவர்கள் நேரில் சென்று ஆதரவு

முல்லைத்தீவு, பெப்.27

இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தித் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நேற்று போராட்டம் நடத்தினர்.



கடந்த 27 நாள்களாக தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிலக்குடியிருப்பு மக்களுக்கு, இலங்கை ஆசிரியர் சங்கத்தினர், மொறட்டுவ பல்கலை கழகத்தை சேர்ந்த தமிழ் மாணவர்கள், இளையோர்கள் நேற்று நேரில் சென்று ஆதரவு தெரிவித்தனர். மக்களின் போராட்டத்தில் அவர்களும் பங்கெடுத்தனர்.

'கேட்பாரில்லை என நினைத்தாயா கேப்பாப்பிலவு மக்களுக்கு, எமது நிலம் எமக்கு வேண்டும், வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு, உங்கள் பிள்ளைகள் உயர்கல்லூரியில் எங்கள் பிள்ளைகள் நடு வீதியிலா' போன்ற கோசங்களை எழுப்பியவாறு அவர்கள் சில மணி நேரம் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாடசாலை மாணவர்களை உள ஆற்றுப்படுத்தும் வகையில் மாணவர்களுடனான ஆடல் பாடல் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். (ற-7)

# மக்கள் போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும்

முல்லைத்தீவு, பெப்.27

'முல்லைத்தீவில் இடம்பெறும் போராட்டங்களுக்கு மக்கள் தலைமை ஏற்றுப் போராடிவருவதால் அவர்களுக்கு வெற்றி நிச்சயம். அவர்களுக்கு ஆதரவாக சமூகநீதிக்கான மலையக வெகுஜன அமைப்பும் குரல் கொடுக்கும்'.

இவ்வாறு சமூகநீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் செயலாளர் செ.மோகன்ராஜ் தெரிவித்தார்.

கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை சமூகநீதிக்கான மலையக வெகுஜன அமைப்பினராகிய நாங்கள் கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கச் சென்றிருந்தோம்.

புதுக்குடியிருப்பு ஏழாம் வட்டாரத்தில் 50 குடும்பங்கள் வாழ்ந்த 19 ஏக்கர் காணியையும் குடியிருப்புக்களையும் இராணுவம் 2009ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்திவருவது எந்த வகையிலும் நியாயமற்றது. மக்களின் காணிகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ற-21)

# வடக்கு மக்களின் அவலநிலை தெற்கில் மறைக்கப்படுகின்றது

## வவுனியா முகாம்களில் உள்ள மக்களைச் சந்தித்த தெற்கு இளையோர்கள் கவலை

வவுனியா, பெப்.27

போர் முடிந்து 8 ஆண்டுகளின் பின்னரும் மக்கள் துன்பங்களுடனேயே வாழ்கின்றனர். இங்குள்ள அவல நிலைமை உண்மையில் தெற்கில் வாழும் பலருக்குத் தெரியாது. வடக்கின் உண்மை நிலை தொடர்பாக தெற்கு மக்களுக்குப் புரிய வைக்க முயற்சிப்போம். அவர்களின் தவறான எண்ணங்களைப் போக்க நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு தெரிவித்தனர் தென்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள்.



அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வடக்கு மாகாணத்துக்கு தென்பகுதி இளைஞர்கள் வந்தனர். அவர்கள் வவுனியா பூந்தோட்டம் முகாமில் உள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

பூந்தோட்டம் முகாமில் தற்காலிக கொட்டகைக்குள் தங்கியுள்ள மக்களைச் சந்தித்தோம். அவர்கள் கடந்த 20 வருடத்துக்கு மேலாக இந்த முகாமில் இருக்கிறார்கள். அவர்களுக்கான ஒழுங்கான வீடு, மலசலகூடம், மின்சாரம், குடிநீர் என எந்த அடிப்படை வசதிகளும் இல்லை.

அங்குள்ள மாணவர்களும் கல்வியைத் தொடர முடியாது பாடசாலைக் கல்வியை இடை விடும் நிலையிலுள்ளனர். போர் முடிவடைந்துள்ளது, அபிவிருத்திகள் செய்யப்பட்டுள்ளன, மக்கள் சந்தோசமாக உள்ளார்கள் என்றுதான் எம்மை போன்றவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இங்கு வந்து பார்த்த பின்னர் தான் உண்மைத் தன்மை புரிகின்றது. போர் முடிவடைந்து 8 வருடங்களின் பின்னும் மக்கள் இவ்வாறான துன்பங்களுடன் வாழ்வது தொடர்பில் உண்மையில் எம்மைப் போன்ற தென்பகுதிகளில் வாழும் பலருக்கும் தெரியாது. உண்மையில் இங்குள்ள மக்களின் நிலைமை மற்றும் வடக்கின் உண்மை நிலை தொடர்பில் நிச்சயமாக தெற்கில் தெரியப்படுத்தி மக்கள் மத்தியில் உள்ள சில தவறான எண்ணங்களை நீக்க நாம் முயற்சிப்போம். இங்குள்ள மாணவர்கள் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக முடிந்த உதவிகளையும் பெற்றுக் கொடுக்க முயல்வோம் - என்றனர்.

மக்களின் நிலைமையைப் பார்த்து அவர்கள் தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். தென்பகுதி இளையோர்கள் முல்லைத்தீவுக்குச் சென்று கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் காணி விடுவிப்புக் கோரி போராடும் மக்களுக்குத் தமது ஆதரவை வழங்கினர். (ற-21)

# பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக மல்லாகத்தில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.27

முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், வலி. வடக்குக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று யாழ்ப்பாணம் மல்லாகத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்தில் இளைஞர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

"இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். வடபகுதியில் இருந்து இராணுவம் விலக்கப்பட வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

"எம் மாணவர்கள் நடுவீதியில் கிடக்கின்றனர். இதுவா நல்லாட்சியின் வெளிப்பாடு", "எமது மக்களின் அடிப்படை உரிமையை பறிக்காதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டம் ஒரு மணி நேரம் நடத்தப்பட்டது. வடமாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், பாலச்சந்திரன் கஜதீபன், அ.பரஞ்சோதி மற்றும் வலி. வடக்கு மீள்குடியேற்றச் சங்கத் தலைவரும், முன்னாள் வலி.வடக்குப் பிரதேசசபை உறுப்பினருமான எஸ்.சஜீவன் ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ற-21,101)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேப்பாப்பிலவு போராட்டத்துக்கு ஆதரவாக பேரணி

மன்னார், பெப்.27
இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்கவேண்டும்என்று பிலக்குடியிருப்பு மக்கள் நடந்தி வரும் தொடர்ச்சியானபோராட்டத்துக்குஆதரவாகமன்னார், முள்ளிக்குளம் மக்கள் இன்று கண்டனப் பேரணி நடத்தவுள்ளனர்.
மன்னார்மதவாச்சிமுதன்மை வீதியில் உள்ள முருங்கன் பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக காலை 9 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது.
கண்டனப்பேரணியில்இன உணர்வும், மனிதாபிமானமும்உள்ளஅனைத்துமக்களும்கலந்துகொண்டுமக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வெண்டும் என்று ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது.
'மன்னார் மாவட்ட மக்கள்' என்ற பெயரில் கண்டனப் பேரணி தொடர்பாக துண்டறிக்கைகளும்வெளியிடப்பட்டுள்ளன. (ற-56)

## சாய்ந்தமருது உள்ளூராட்சிச்சபை; அமைச்சர் பைசலுடன் பேச்சு

எருவில், பெப்.27
அம்பாறைமாவட்டத்தில் சாய்ந்தமருது உள்ளூராட்சிச் சபையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதுதொடர்பாக அமைச்சர்களான பைஸர், ரிசாத், ஜெமீல் ஆகியோருக்கிடையில் சந்திப்புநடந்துள்ளது.
இதுதொடர்பில்அகிலஇலங்கை மக்கள் காங்கிரசின் பிரதித் தலைவரான கலாநிதி ஏ.எம். ஜெமீல்தெரிவித்ததாவது:
சாய்ந்தமருது பிர தேசத்துக்கு தனியான உள்ளூராட்சி ச் சபையை உருவாக்குவதற்கான முயற்சிகளில் இருந்து நாம் பின்வாங்க வில்லை. தற்போது இந்த விடயம் முக்கிய கட்டத்தை எட்டியிருக்கின்றது.
எல்லை மீள்நிர்ணய அறிக்கையை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா கையொப்பமிட்டுள்ளார்.
சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையைஉருவாக்குவதற்கான வர்த்தமானி பிரகடனத்தை அமைச்சர் பைஸர் முஸ்தபா விரைவில் வெளியிடுவார் என நான் நம்புகின்றேன்.
2015 ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது, தேர்தல் முடிந்த கையோடு சாய்ந்த மருது உள்ளூராட்சிச் சபை உருவாக்கித் தரப்படும் என்று தலைமை அமைச்சரின் ஓர் உறுதிமொழியை மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்கியிருந்தார்.
அதன்பின்னர் அது தொடர்பாக அவர்கள் இருவரும் எந்தக் கருத்தும் வெளியிடவில்லை. -என்றார். (ற-ய)

# முல்லைத்தீவில் வெகு விரைவில் கடலட்டை பண்ணை

## கொழும்பு மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

மன்னார், பெப்.27
“மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள கடலட்டைப் பண்ணை போன்று முல்லைத்தீவுமாவட்டத்திலும்கடலட்டைப் பண்ணை அமைக்கப்படும். உலக சந்தையில் கடலுணவுகளின் ஏற்றுமதியை அதிகரிக்கும்நோக்கில்இந்தப்பண்ணைஅமைக்கப்படவுள்ளது”
இவ்வாறு கொழும்பு அரசின் கடற்றொழில்நீரியல்வளங்கள்அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
மன்னார், ஓலைத்தொடுவாயில் நேற்று முன்தினம் கடலட்டை பண்ணைகான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடற்றொழில் அமைச்சினால் இலங்கையில் முதல் முறையாக மன்னாரிலேயே கடலட்டைஇனப்பெருக்கக்கட்டடத்தொகுதி அமைக்கப்படுகின்றது.
கடலட்டை உற்பத்தி தற்போது குறைவடைந்து வருகின்றது. அதன் பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் செயற்கை முறை இனப் பெருக்கத்துக்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன்மூலம்அதிகளவான வருமானத்தையும், அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுக்க முடியும்.
உலக சந்தையில் கடலட்டைக்கான கேள்வியில் நூற்றுக்கு 10 வீதம் கூட கடலட்டைகளைக் கூட எம்மால் ஏற்றுமதி செய்ய முடியாதுள்ளது. செயற்கைமுறைஇனப்பெருக்கத்தின் மூலம் கடல் அட்டையில் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.
இதைப் போன்றே முல்லைத்தீவிலும் ஒரு பண்ணை அமைக்கப்படவுள்ளது. இந்தத் திட்டங்களின் மூலம் 10 இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதே எமது நோக்கமாக உள்ளது.
2020 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை கடற் றொழில்



ஓலைத்தொடுவாய் கடலட்டைப் பண்ணைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சினூடாக இவ்வாறான தி ட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலம்வழங்கமுடியும்.
கடலுணவு உற்பத்தியில் இலங்கைக்கு என்றே தனித்துவமான இடமுண்டு. நண்டு, கடலட்டை போன்ற கடலுணவுப் பொருள்களுக்கு அதிகளவு கேள்வி உலக சந்தையில் உள்ளது. பெரும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தொழில் துறையாக இந்தத்துறை அமைகின்றது.
கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் கடற்றொழிலில் ஈடுபட படகுகளை வழங்கும் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார். (ற-21,56)

## காணிஅபகரிப்பை தடுத்தமையே விமல்ராஜ் மீதான சூட்டுக்குக்காரணம்

### சிறிநேசன்எம்.பி.தெரிவிப்பு

செங்கலடி, பெப்.27
“சட்டவிரோதகாணிஅபகரிப்பைத்தடுக்கமுயன்றதாலேயே காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின்மட்டக்களப்புமாவட்டப்பணிப்பாளர்விமல்ராஜ் மீது துப்பாக்கிச் சூடுநடத்தப்பட்டது”
இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.
இலங்கை மத்திய வங்கியால் நடத்தப்பட்ட ஈகோன்ஐகோன் தொலைக்காட்சிநிகழ்ச்சியின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு குறுமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் விமல்ராஜ் தனது வீட்டில் இருந்த போது துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டுள்ளார். தெய்வாதீனமாக அவர் உயிர்தப்பியுள்ளார்.
“மட்டக்களப்பு, ஏறாவூரில் சட்டவிரோதமாக காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் கண்மூடித்தனமாக நடைபெறுகின்றன. அவற்றை சட்டத்தின் அடிப்படையில் தடுப்பதற்காக நான் முயன்றுகொண்டிருக்கிறேன். இந்தமுயற்சியில் எனக்குபலவிதமானஎதிர்ப்புக்கள்வருகின்றன. எனக்கு இடைஞ்சல்கள் வரும்போது எனக்காகக் குரல்கொடுக்கவேண்டும், பக்கபலமாக இருக்க வேண்டும்” எனசம்பவம்நடைபெறுவதற்குசில தினங்களுக்குமுன்புவிமல்ராஜ்என்னிடம்கூறினார். காணி அபகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கைஎடுக்கின்றேன் அரசதலைவரின் அலுவலகத்திலிருந்து உத்தரவு கிடைத்துள்ளது. அதற்காக நான் உழைக்கின்றேன். ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்டிருந்த நிலையில் அவர் சுடப்பட்டிருக்கின்றார் என்றால் நாங்கள் சில கோணங்களில் இந்த விடயத்தை ஆராய வேண்டும். பொலிஸார் பொறுப்புடன் செயற்பட்டு இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைதுசெய்ய வேண்டும்.
விமல்ராஜ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் எங்கு மறைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக்கண்டறிந்துஅவர்களுக்குரியதண்டனை வழங்காதுவிட்டால் இந்த அரசின் ஆட்சியும் கடந்த ஆட்சியைப் போல் ஆகிவிடும்-என்றார்.
(ற-ய-47)



திருக்கோணேஸ்வரப் பெருமானின் நகர் வலம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பி.ப. 5 மணிக்கு ஆலயத்தில் இருந்து ஆரம்பமானது, ஐந்து நாள்கள் மாதுமை அம்பாளுடன் சோமாஸ் கந்த மூகூர்த்தமாக கோணேசப் பெருமான் திருகோணமலை நகரை வலம் வருவார். (ற-40)

## சுத்திகரிப்பு பணிகள் கச்சதீவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் பெப் 26
கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் பெருநாளை முன்னிட்டு அந்தச் சூழலைச் சுத்திகரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.
கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் பெருநாள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. கச்சதீவுப் பெருநாளில் கலந்துகொள்ளவுள்ள இந்தியர்கள் ஊடாக மலேரியாத் தொற்று மக்களிடையே ஏற்படலாம். அந்தப் பிரதேசங்களில் நுளம்புகளை கட்டுப்படுத்தும் வகையில் புகை அடிக்கப்படவுள்ளது. உணவு சார்ந்த பண்டங்களைவிற்பனைசெய்யும்வியாபாரிகள் தங்களின் வியாபர அனுமதிகளைநெடுந்தீவுபிரேதேசசபையிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுளள்ளது.
(ற-8)

## துப்பாக்கியுடன் அடம்பனில் மூவர் கைது

திருமலை, பெப்.27
திருகோணமலை அடம்பனில் முச்சக்கரவண்டி ஒன்றில் கட்டுத் துப்பாக்கி, வெடிபொருள்கள் மற்றும் கத்திகளுடன் சென்ற மூவர் நேற்று அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
குச்சவெயிலிருந்து வந்த முச்சக்கரவண்டியைசந்தேகத்தில்நிறுத்திச் சோதனையிட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். காசிம் நகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அதேவேளை, மோட்டார் சைக்கிளில்வந்த அதே இடத்தைச்சேர்ந்த மற்றுமொருவர் 2 கிராம் கேரளக் கஞ்சாவுடன்கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.
(ற-ய-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடைபெறாவிடில் ஜனநாயகத்துக்கு பாதிப்பு

## டலஸ் அழகப் பெரும எம்.பி கருத்து



கொழும்பு, பெப். 27

'நாட்டில் தேர்தல் நடைபெறாமல் இருந்தால், ஜனநாயகம் சீர்குலைக்கப்படும். எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார முறையிலாவது நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.'

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது அரசு காலம் தாழ்த்துவது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாட்டில் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. எனினும் அரசு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. அதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

இவ்வாறு தேர்தலை நடத்தாமல் விட்டு, நாட்டின் ஜனநாயகத்தைச் சீர்குலைப்பதைவிட தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார முறையிலாவது தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் டயஸ் அழகப் பெரும தெரிவித்தார். (ஐ-10)

# பட்டப்படிப்புக்களை தரப்படுத்தச் சட்டம்

## உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, பெப். 27

அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் பட்டப்படிப்புகள் தொடர்பில் தரப்படுத்தலை மேற்கொள்ள புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாட்டில் எண்ணிலடங்காத பட்டப்படிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தலைமைத்துவத்துக்கான பட்டப்படிப்புகளை தனியார் நிறுவனங்களில் பயின்று வருகின்றனர்.

எனவே இவர்களின் கல்வித் தரத்தை உத்தரவாதப்படுத்தும் வகையில் இந்தப் புதிய சட்ட வரைவு கொண்டுவரப்படவுள்ளது.

உலக வங்கி உதவியுடன் தயாரிக்கப்பட்டு வரும் புதிய சட்ட வரைவானது இன்னும் இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ஐ-10)

# ஐ.தே.கவைப் பலப்படுத்த ஆலோசனைகள் தேவை

## கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் ரணில் வேண்டுகோள்

கொழும்பு, பெப்.27

ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து, இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தெரிவிக்கலாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்குக் காலக்கெடு விதித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

கூட்டு அரசின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. அதற்காகக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் இன்று திங்கட்கிழமை முன்னர் தமது ஆலோசனைகளையும், கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கட்சியின் தலைமைப் பீடத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அமைச்சர் மலிக் சமரவிக்ரம, உதவிச் செயலாளர் ருவன் விஜேவர்தன, மகளிர் பிரிவு தலைவி அனோமா கமகே, இளைஞர் முன்னணியின் தலைவர் அகில விராஜ் காரியவசம், தொழில்நுட்பப் பிரிவு பணிப்பாளர் சுதத் சந்திரசேகர ஆகியோரிடமே தலைமை அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது. (ஐ-10)

# குழந்தைக்கு மதுவைப் பருக கொடுத்தவர் கைது

கொழும்பு, பெப். 27

இரண்டு வயதுக்குழந்தை ஒன்றுக்கு மதுவைப் பருகக் கொடுத்த குற்றச்சாட்டில் 33 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மொனராகலை பஹலகம ஒக்கம்பிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவரை வெல்லவாய நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குழந்தை மொனராகலை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

# தனியார் மருத்துவர்கள் ஒரு நோயாளியை 10 நிமிடங்களாவது பரிசோதிக்கவேண்டும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.27

'தனியார் மருத்துவமனைகளில் நோயாளர் ஒருவரை, குறைந்தது 10 நிமிடங்களாவது மருத்துவர் பரிசோதனை செய்ய வேண்டும். இந்தச் சட்டம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. ஆனால் தனியார் மருத்துவமனைகளில் இந்தச் சட்டம் பின்பற்றப்படுகிறதா என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகிறது.'

இவ்வாறு சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் ஜுலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுமக்கள் நலன் தொடர்பான பன்னாட்டுக் கண்காட்சியின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை ஆரம்பித்து வைப்பதற்காக, அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எத்தகைய தனியார் மருத்துவமனைகளிலும், நோயாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளின் போது, மருத்துவர் நோயாளி ஒருவரைக் குறைந்தது 10 நிமிடங்கள் வரை பரிசோதனை செய்ய வேண்டும்.

அத்துடன் நோயாளரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையே மருத்துவக் கட்டணங்களாக தனியார் மருத்துவமனைகள் அறவிட வேண்டும். சிறப்பாக அரச சிறப்பு மருத்துவ நிபுணர்களுக்காக இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சத்திர சிகிச்சையின் பின்னர், மருத்துவர் ஒருவர், நோயாளியுடன் ஒரு மணித்தியாலங்கள் செலவிட வேண்டும். இதன் அடிப்படையில் நோயாளர்களின் உரிமை மற்றும் மருத்துவர்களின் சேவை தொடர்பில் இன்னமும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நோயாளர்களின் உரிமைக்காக எதிர்காலத்தில் மேலும் பல சட்டங்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்த்துள்ளோம்" என்று சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் இராமலிங்கம் நிர்மலன்

(உரிமையாளர் இராமலிங்கம் மில், செல்வன் வீடியோ, கவி தொலைத் தொடர்பகம், பூர்ணா மல்ரி சொப் - சாவகச்சேரி)

அன்னை மடியில் 30.08.1949

ஆண்டவன் தாளில் 28.01.2017

கடந்த 28.01.2017 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவால் தினமும் வாடும்

மனைவி - திருமதி சிவநேசம் நிர்மலன்,

பிள்ளைகள் - காலஞ்சென்ற கவிதா மற்றும் பூரணச் செல்வன், நளாயினி.

சகோதரிகள் - காலஞ்சென்ற யோகேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), மங்களேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை); காலஞ்சென்ற மதுரேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), சுதந்திரா (கொழும்பு),

மைத்துனர்கள் - காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற V.T. நடராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்), ஐ.சின்னத்துரை (பரீட்சைகள் ஆணையாளர் - கொழும்பு), காலஞ்சென்ற சு.சிறிதரன் (முன்னாள் பொதுமுகாமையாளர் - கைதடி, சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்),

மருமக்கள் - நந்தகுமார் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்), உதயகுமார் (கனடா), சுந்தரகுமார் (பிரதிப் பணிப்பாளர் கட்டடங்கள் திணைக்களம் - வடமாகாணம்), மாலதி (கனடா), காலஞ்சென்றவர்களான சுகந்தினி, கோபிராஜ், ரவிராஜ் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்) மற்றும் இன்பராஜ் (லண்டன்), வாசுகி (சட்டத்தரணி - கனடா), நந்தினி (நியூசிலாந்து), தயாளினி (நியூசிலாந்து), மயூரன் (ஆஸ்திரேலியா), குமரன் (கொழும்பு), குமரேசன் ( பாங்கொக்), செந்தூரன் (கொழும்பு ), சுபத்திரன் (சவுதி), பார்த்தீபன்,

மருமகன் - இராசபிரசாத்,

பேரப்பிள்ளைகள் - தஸ்வின், பிரகவி.

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி

(சி/28364)(1117.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் விடயத்தில் தனித்தே செயற்படுவேன்

## அமைச்சர் மனோ கணேசன் உறுதி



கொழும்பு, பெப்.27
"தமிழ்மக்களின்வேணவாக்களை நிறைவேற்றும் செயற்பாடுகளின் போது நான் ஒரு தனித்துவமான பிரதிநிதியாகவே செயற்படுவேன். தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க அல்லது எதிர்கட்சி தலைவர் சம்பந்தனின் கீழ் செயற்படப் போவதில்லை."

இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள்அமைச்சர்மனோகணேசன் தெரிவித்தார்.

கொட்டஞ்சேனைஇந்துமகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு அப்பியாச புத்தகங்கள் வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனநாயக மக்கள் முன்னணி சார்பிலும், தமிழ்முற்போக்குகூட்டணி சார்பிலும்கொழும்பில்பலஉதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம் இன்று எமக்கு இங்கு கிடைக்க ப் பெற்றுள்ள குறைந்தபட்ச பலமாகும். பலமில்லாவிட்டால் எம்மால் ஒன்றும்செய்யமுடியாதுவாய்பேச்சுக்கள்மாத்திரமேஎமக்குக்கிடைக்கும்.

அதனால் சகலதுக்கும் அடிப்படையாகஅரசியல்பலமேஅமைகிறது. அரசியல் பலம் எவ்வாறு வருகின்றது என பார்க்கின்ற போது தமீழீழ விடுதலை புலிகள் இருந்த காலத்தில் துப்பாக்கி ரவைகளில் பிரபாகரனின் பலம் இருந்தது. ஆனால் எனது பலம்வாக்குசீட்டாகும். வாக்குசீட்டை இங்குள்ளவர்கள் முறையாக பயன்டுத்தினால் எமக்கான பலம் கிடைக்கும்.

கடந்தகாலங்களில்நீங்கள்வாக்குகளை முறையாக பயன்படுத்தவில்லை. அறிவுள்ளவர்கள், உணர்வுள்ளவர்கள், சமூக அக்கறைஉள்ளவர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும், நாடாளுமன்ற தேர்தல்களிலும் தமது வாக்குகளை சரியாகப் பயன்படுத்தியமையால்தான்நாம் இந்த அளவுக்கேனும்பலமாக இருக்கின்றோம். தேர்தல் வருகின்ற போது கண்களை மூடிக்கொண்டேனும் வாக்குளைச் சரியாக அளிக்க வேண்டும். காரணம் நமக்கு நாமே வாக்களிக்கவேண்டும். தற்போது இந்த இடத்தில் உள்ளவர்கள் கூட தேர்தல் காலத்தில் நீங்கள் எமக்காக என்ன செய்தீர்கள் என்றுதான் கேட்பார்கள்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் கொழும்பில்நடமாடமுடியாதிருந்த போதும்கூடகூட்டணிமற்றும்கூட்டமைப்புஉட்படசகலரும்ஒடிஒழிந்துக்கொண்டார்கள்.

மலையகத்திலும், வடக்கு கிழக்கிலும், கொழும்பிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் பற்றி எனக்கும் நன்றாக தெரியும். மூன்று மாதத்துக்கு முன்பாக ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து வந்த சிறுபான்மையினர் விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிநிதியிடத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழ்கின்றதமிழ்மக்களின்பிரச்சினைகள் குறித்து அறிவுறுத்தியிருந்தோம்.

தற்போது இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் அதற்கான பலன்தெரிகின்றது. இவ்வாறுஎமது பிரச்சினை பன்னாட்டுச் சமூகம் அறிந்துக் கொள்கின்றது. ஆனால் அதற்குமுன்னர்வடக்குகிழக்குக்கு வெளியில்தமிழ்மக்களேஇல்லை என்ற நிலைப்பாட்டிலேயே அவர் இருந்துள்ளார். இன்று அவர்எமது பிரச்சினையை உலக அரங்கில் அரங்கேற்றியுள்ளமையால் அது தமிழ்மக்களுக்குகிடைத்தவெற்றியாக அமைகின்றது- என்றார்.
(ஜ-10)

# விக்ஸ் காட்டு மக்களின் போராட்டமும் தொடர்கிறது




வவுனியா, பெப்.27
தங்களது காணிகளைப் பெற்று தருமாறு கோரி, வவுனியா- இராசேந்திர குளம் விக்ஸ் காட்டு மக்கள், வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று ஐந்தாவது நாளாகவும் தமது கவன வீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'தாம் வாழும் காணிகளையே தமக்கு வழங்க வேண்டும்' எனக் கோரி வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக விக்ஸ் காடு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறுவர்கள், முதியவர்கள் எனப்பலரும் இணைந்து இரவிரவாக பனியின் மத்தியிலும் இந்தத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

'தற்போது ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் எம்மால் இணங்காணப்பட்ட பகுதியில் 47 குடும்பங்களுக்கும் காணி பகிர்ந்தளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மூன்று மாத கால அவகாசத்தின் பின்னர் அந்தக் காணியை வன இலகா திணைக்களத்திடமிருந்து பெற்றுத் தரப்படும். அதுவரையில் குறித்து ஒதுக்கப்பட்ட பகுதியில் மக்கள் குடியிருக்க வேண்டும். வன இலகா அதிகாரிகளால் எவ்வித இடையூறும் மக்களுக்கு ஏற்படாது" என்றும் வவுனியா மாவட்டச் செயலர் வாக்குறுதியளித்திருந்தார். (ஐ-21)



மலையக மக்கள் முன்னணி தேசிய பேராளர் மாநாடு நேற்று ஹட்டன் கிருஸ்ண பவான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தலைவர் வே.இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கட்சியின் புதிய பதவிநிலைத் தெரிவுகளும் இடம்பெற்றன. (ஐ-ய)

### சைட்டம் அதிகாரி மீதான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்

# கடந்த ஆட்சியைக் காரணம் காட்டி மௌனம் காக்க முடியாது அரசு

## டலஸ் அழகப்பெரும எம்.பி கூறுகிறார்



கொழும்பு,பெப். 27
"சைட்டம் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில், அரசு அமைதி காக்கிறது. இந்தச் சம்பவத்தின் பின்னணியை அரசு கண்டு பிடிக்க வேண்டும். சைட்டம் விவகாரத்தை முன்னைய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினை எனக்கூறி, அரசு அமைதியாக இருந்து விடமுடியாது."

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சைட்டம் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி சமீர சேனாரத்னமீதானதுப்பாக்கிச்சூட்டுசம்பவத்தின் பின்னணியைக் கண்டறிய வேண்டும். அந்தப் பின்னணி இனங்காணப்படும்போது, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் சூத்திரத்தையும் கண்டுகொள்ள முடியும்.

நல்லாட்சி என்கின்ற கூட்டு அரசானது பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு முன்வைக்காமல் காலம் தாழ்த்துகிறது. இவ்வாறு காலம் தாழ்த்துவதன் மூலம் அந்தப் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் எதிர்பார்க்கிறது. எந்தவொரு பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வு முன்வைப்பதாக இல்லை என்றார். (ஐ-5)

# கிழக்குப் பட்டதாரிகளை விரைவில் அரச சேவைக்குள் உள்ளீர்க்கவும்

## கிழக்கு ஆளுநரிடம் முதலமைச்சர் வலியுறுத்தல்

திருமலை, பெப்.27
'கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் வேலையற்ற பட்டதாரிகளை உள்ளீர்த்துக்கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளுநரிடம் வலியுறுத்தப் பட்டது.'

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டுக்கும், ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோவுக்கும் இடையில் சந்திப் பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியாயமான, நிரந்தரமான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

தற்போது பட்டதாரிகளை உள்ளீர்க்கும் பொறிமுறையில் வயதெல்லையை 45 வரை உயர்த்துதல் தொடர்பான தீர்மானமும் ஆளுநரிடம் வலியுறுத்திக் கூறப்பட்டது.

அத்துடன் வருடாவருடம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பட்டதாரிகளைஉள்வாங்குவதற்கானபொறிமுறையொன்றை உருவாக்குவதன் அவசியம் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. விரைவில்இதுதொடர்பான பிரேரணையொன்றை மாகாண சபையில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்" என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார். (ஐ-ய-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கூறப்படுபவற்றுக்கு இனவாத சாயம் பூசும் தெற்கு

## கிழக்கு விவசாய அமைச்சர் துரைசிங்கம் தெரிவிப்பு

வாழைச்சேனை, பெப்.27
நாட்டில் இனத் துவேசமே மேலோங்கியுள்ளது. தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுகின்றன என்று தென்னிலங்கையில் ஒரு சொல் சொன்னாலே போதும். தமிழர்களுக்கு எல்லாவற்றையும்விற்றுவிட்டார்கள்என்று கூறுவதற்கு தென்னிலங்கை பின்னிற்காது.
இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும், இலங்கைத்தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருமான கி.துரைசிங்கம் தெரிவித்தார்.
வாழைச்சேனைகிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் திறனாய்வு போட்டி நிகழ்வு நேற்றும்கிண்ணையடி பொது மைதானத்தில் நடைபெற்றது. அந்தநிழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது
1950ஆம்ஆண்டுகாலப்பகுதியில்தலைமைஅமைச்சராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலவுடன் வடக்கில்நடைபெற்ற மொழி தொடர்பான பேச்சின்போதுதமிழுக்குசம உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. அவர்அதனை ஏற்றுக்கொண்டார். கொழும்பு சென்றதும் தமிழுக்கு சம உரிமை கொடுக்கின்றபிரகடனத்தை வெளியிடுவேன் என்று அவர் கூறினார். ஆனால்கொழும்பு சென்றதும்அங்கிருந்ததேசியவாதிகள்என்றுசொல்லப்படுகின்ற தீவிரவாதிகள் அவ்வாறுசெய்யக்கூடாதுஎன்று அவருக்குஅழுத்தங்களைக் கொடுத்தார்கள். அதன் காரணமாகத் தான் சிங்களம் மட்டும்சட்டம்வந்தது.
வடக்கு, கிழக்கில்ஒரு வாக்குறுதி கொடுக்கப்படுகின்ற போது அதற்கு எவ்வாறான சாயம் தெற்கு மேற்கில் இடப்படுகின்றது என்ற வரலாற்று உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற ஒவ்வொரு தலைவரும் இப்போது நடக்கின்ற ஒவ்வொரு விடயங்கள் தொடர்பாகவும் மிகவும் கவனமாக நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.
ஒன்றுபட்டு உழைத்திட வேண்டும். விமர்சனங்களால் நாம் கோபப்பட மாட்டோம். சிறுபான்மை மக்களாகிய நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இப்போது இருக்கின்ற இந்தநிலைமை குழம்பிவிட்டால்நாம்எங்கே போகப் போகின்றோம், எத்தனை பெரிய போராட்டங்களைக்கண்டோம், எத்தனை பெரிய சாம்ராச்சியங்களை நாங்கள் அசைத்தோம், எமக்கு இதுவரையில்பலாபலன்கள் கிட்டவில்லை.
இப்போது இருக்கின்ற இந்த நிலைமையைக் கவனமாகக் கையாளுகின்ற இந்தத் தலைமையின் மேல் நம்பிக்கை வைத்து ஒருமித்துச் செல்லவேண்டும்-என்றார். (ற-101)

# தமிழருக்கு ஆதரவாக பிரிட்டனில் தீர்மானம்

## அந்தநாட்டுதொழிற்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 27
"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளில் நிறைவேற்றப்பட்டிருந்ததீர்மானங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது."
இவ்வாறு பிரிட்டன் தொழிற்கட்சியின் தலைவர் ஜெரமி கோர்பின் தெரிவித்தார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது.
இலங்கை மற்றும் பிரிட்டன் வாழ் தமிழ் மக்களின் சுயாதீனத் தன்மை தொடர்பில் ஆராய்வதற்காக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நாளை செவ்வாய்க்கிழமை சிறப்புக் கூட்டம்ஒன்றுநடத்தப்படஉள்ளது.
இந்தக் கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டு ஜெனிவாவில் இலங்கை வழங்கிய உறுதிமொழி விடயங்கள் மற்றும் ஜெனிவாத் தீர்மானத்தின் முன்னேற்றங்கள் குறித்து கருத்தில் கொள்ளப்பட உள்ளன. நாடாளுமன்றதில்பேசப்படும் விடயங்கள் மற்றும் தீர்மானங்களை பிரிட்டன் அரசு கோரிக்கையாகமுன்வைத்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தப்பட உள்ளது - என்றார்.
ஐ.நா. மனிதஉரிமைகள்சபையின்34ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பிக்கவுள்ளது.
இந்த நிலையில் பிரிட்டன் தொழிற்கட்சி, அந்த நாட்டு அரசின் ஊடாக இலங்கைக்கு அழுத்தம்கொடுக்கப்படும்என்று தெரிவித்துள்ளது. (ற-10)



விமல்ராஜ் சூட்டுச் சம்பவம்

# நீதி கேட்டு கிரான்குளத்தில் நேற்றுப் போராட்டம்

மட்டக்களப்பு, பெப்.27
காணிசீர்திருத்தஆணைக்குழுவின்மட்டக்களப்பு மற்றும்திருகோணாமலைமாவட்டப்பணிப்பாளர் விமல்ராஜ் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை கண்டித்து அவரது சொந்தக் கிராமமான கிரான்குளத்தில்நேற்றுக்காலைஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது.
கிராம மக்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்எஸ். வியாழேந்திரன், கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மாகாணசபைஉறுப்பினர்ஞா. கிருஸ்ணப்பிள்ளை மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கெடுத்தனர்.
"அரச தலைவர் அவர்களே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவமும்கண்டுகொள்ளப்படாமல்போகுமா? "நல்லாட்சிஅரசுகொலைஞர்களைக்கண்டுபிடித்து நீதியின் முன்னிறுத்த வேண்டும்? "நேர்மைக்கு பரிசாக துப்பாக்கி ரவையா?" போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
விமல்ராஜ் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் கொழும்புதனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ற-ய-46)




கோண்டாவில்மக்கள்நலன்பேணும்அமைப்பின்அலுவலகம்மற்றும்இலவச தையல் பயிற்சி நிலையம் என்பவற்றின் திறப்பு விழாக்கள் கடந்த வாரம் நடைபெற்றன. (ற)

# காணிகளில் அடாத்தாக விவசாயம்: கோட்டக்கேணி மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, பெப். 27
முல்லைத்தீவு, கோட்டக்கேணி பிள்ளையார் கோயில் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளில் சிலர் பலவந்தமாக விவசாயம் செய்கின்றனர்.
இவ்வாறுபாதிக்கப்பட்டமக்கள்குற்றஞ்சாட்டினர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது
மணலாற்றில்இருந்து இடம்பெயர்ந்துநாங்கள் இப்போதும்அகதிகளாகவாழ்கின்றோம். எங்களின் பூர்வீக நிலங்களில் பெரும்பான்மையின மக்களைப்பலவந்தமாகக்குடியேற்றுகின்றனர். கோட்டக்கேணி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பத்து பேருக்கு வழங்கப்பட்ட காணிகள் இருக்கின்றன. அவற்றில் தற்போது வேலிகள் அடைத்து விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காணிகளுக்குரிய அனுமதிப்பத்திரங்கள் எம்மிடம் உண்டு. நாம் விவசாயநடவடிக்கைகள்செய்யமுடியாதுஉள்ளோம் - என்றனர்.
"கோட்டக்கேணி பிள்ளையார் கோயில் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளினல் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று இதுவரை யாரும் முறைப்பாடு செய்யவில்லை" என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சி. குணபாலன் தெரிவித்தார். (ற-7)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 26 |
| 08 | 02 |
| 1948 | 2017 |

## பத்மநாதன் மங்கையற்கரசி [ பேரின்பம் ]

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் மங்கையற்கரசி (பேரின்பம்) நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி – பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் – தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வைத்தீஸ்வரன் (பிரான்ஸ்), கனகலிங்கம், மகேஸ்வரி, யோகேஸ்வரி, சுந்தரலிங்கம் (கனடா), ஞானேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, செல்லத்துரை, பேபி மற்றும் சிரோன்மணி, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், கலாமதி, சுகேஸ்குமார், பாஸ்கரகுமார், குணேஸ்குமார் (லண்டன்), ஸ்ரீலங்கநாதன், கலாசோதி, கலாரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலிங்கம், நாகலோஜினி, சாரதா, தயாபரன், பாலராசன் (கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும், சாம்பவி, கஜலக்சன், ரிஷிகேசன், பிரசன்னா, திலக்சன், தர்சிகன், மயூரன், கார்த்திகன், பரணிதா ஆகியோரின் பேர்த்தியாரும், பிரணவனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/85, அராலி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(C/28359) (11.18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்நாடு எண்ணூரில் கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இரு கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. எம்.பி.டபிள்யு. மாப்பிள் என்ற கப்பலும், டொன் காஞ்சிபுரம் என்ற எண்ணெய்க் கப்பலுமே அவ்வாறு விபத்துக்குள்ளாகின. எண்ணெய் கப்பலில் இருந்த கச்சா எண்ணெய், டீசல் ஆகியன ரொன் கணக்கில் கடலில் கலந்தன. அதனை அகற்றும் பணிகள் தீவிரமாக நடைபெற்று முடிவடைந்துள்ள போதிலும் இன்னும் சில இடங்களில் ஒயில் தொடர்ந்து கரையொதுங்கிக் கொண்டேயுள்ளது. இதனால் எண்ணூர் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டு அரசு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 5 ஆயிரம் ரூபாவை (இந்திய மதிப்பில்) நிதியுதவியாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வெள்ளைமாளி

# சில ஊ

# ட்ரம்ப் அ

வொஷிங்டன், பெப். 27

அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகைக்குள் செய்தி சேகரிப்பதற்கு முக்கிய நிறுவனங்களுக்குத் தடை விதித்தார் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

சி.என்.என்., த நியூயோர்க் டைம்ஸ், பொலிடிகோ, த லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ், பஸ்பீட் ஆகிய ஊடகங்களுக்கே தடைவிதிக்கப்பட்டது. இது தொடர்பான அறிவிப்பை வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் விடுத்தார். செய்தி நிறுவனங்களுக்கு தகவல் வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அதற்காக தினந்தோறும் வெள்ளை மாளிகையின் நடவடிக்கைகளை காணொலியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்று விதியல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

வெள்ளை மாளிகையில் செய்தி சேகரிக்க நியூயோர்க் டைம்ஸ் பத்திரிக்கைக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது அதன் வரலாற்றில் இதுவே முதன் முறை. வெளிப்படையாக ஆட்சி நடத்தும் ஓர் அரசை ஊடகங்கள்





(கோப்புப் படம்)

# மோடி – எடப்பாடி இன்று சந்திப்பு

சென்னை, பெப். 27

இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இடையிலான சந்திப்பொன்று இன்று இடம் பெறவுள்ளது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

நீட் தேர்வில் தமிழக மாணவர்களுக்கு விலக்கு வழங்கப்பட வேண்டும், இயற்கை எரிவாயுத் திட்டம் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழக அரசியல் நிலவரம் பதற்றமான நிலையிலேயே உள்ளது. இதனால் இந்த விவகாரம் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது. (ம)

## அமெ. – மெக்சிக்கோ இடையே பாலங்கள் அமைத்தல்வேண்டும்

அமெரிக்காவுக்கும் மெக்சிக்கோவுக்கும் இடையே சுவர் எழுப்பு வதில் ட்ரம்ப் உறுதியாக உள்ள நிலையில், அமைய வேண்டியது பாலங்களே தான் என்று பெரு அதிபர் பெட்ரோ வலியுறுத்தினார். இதை ட்ரம்பிடம் பெட்ரோ நேரடியாகச் சுட்டினார். மக்கள் சுதந்திரமாக நடமாட நாம் அனுமதிக்க வேண்டும். எனவே, மெக்சிகோ எல்லையில் தடுப்புச் சுவருக்கு பதிலாக பாலங்களை கட்டுங்கள் என ட்ரம்ப்பை நான் கேட்டுக்கொண்டேன் என செய்தியாளர் சந்திப்பொன்றில் பெட்ரோ குறிப்பிட்டார். (ம)

## 90 டொலருக்காக கொல்லப்பட்டார் கிம் ஜோங் நாம்

கோலாலம்பூர், பெப். 27

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் ஒன்றுவிட்ட சகோதரர் கிம் ஜோங் நாமைக் கொல்ல 90 டொலர்கள் சன்மானமாக வழங்கப்பட்டது என்று சந்தேகநபர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரே இந்தத் தகவலை வெளியிட்டார். கிம் ஜோங் நாமின் முகத்தில் நான் தடவியது வி.எக்ஸ். எனும் கொடிய நச்சு இரசாயனம் என்பது எனக்கு ஆரம்பத்தில் தெரியாது. தொலைக்காட்சி கேளிக்கை நிகழ்ச்சி என்று தெரிவித்து அதை நாமின் முகத்தில் தடவச் சொல்லி சிலர் தெரிவித்தனர். இதற்காக எனக்கு 90 அமெரிக்க டொலர்கள் சன்மானம் தந்தனர் என ஆய்சா வாக்குமூலம் வழங்கினார். (ம)



# சீன விடுதியில் தீ விபத்து; உயிரிழப்பு 10ஆக உயர்வு

பீஜிங், பெப். 27

சீனாவில் ஆடம்பர விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10ஆக உயர்வடைந்தது.

சீனாவில் ஜியாங்ஸி மாகாணத்தின் தலைநகர் நான்சாங்கில் 4 மாடி சொகுசு விடுதியொன்று உள்ளது. இதன் இரண்டாவது மாடியில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. 4 பேர் உடல்கருகிச் சாவடைந்தனர் என்று முதல்கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 6 பேர் சாவடைந்ததை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 10 ஆக உயர்வடைந்தது. மேலும் 14 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அச்சம் வெளியிடப்பட்டது. தீவிபத்துத் தொடர்பில் 7 பேர் கைதுசெய்யப்பட்டு அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)



# ஐ.எஸ்ஸின் தாக்குதலில் 10 பொலிஸார் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் ஜாஸ்ஜன் மாகாணத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதல் ஒன்றில் குறைந்தது 10 பொலிஸார் சாவடைந்திருக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மசூதி ஒன்றில் தொழுகையை முடித்துவிட்டு வெளியேறியபோதே அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. தனது கணவர் சுடப்பட்டார் என்ற செய்தியை கேட்டு சம்பவ இடத்துக்கு சென்ற பெண் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று மாகாண ஆளுநரின் பேச்சாளர் முகமது ரீஸா தெரிவித்தார். (ம)

# பேருந்து – லொறி விபத்தில் 19 பேர் சாவு

பெரு நாட்டின் வடமேற்குப் பகுதியில் நேற்றுக் காலை பேருந்து – பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானதில் 19 பேர் சாவடைந்தனர்.

பாரவூர்தி மோதிய வேகத்தில் பேருந்து தீப்பற்றி எரியத் தொடங்கியது. தீயணைப்புப் படையினரின் சில நிமிடப்போராட்டத்தில் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. 19 பேர் சாவடைந்தனர். மேலும் சிலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. விபத்துத் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாளிகையில் செய்தி சேகரிக்க
# ஊடகங்களுக்கு அதிரடித் தடை

யோக
மாளி
 முக்
வித்த்

ம்ஸ்,
சல்ஸ்
டகங்
இது
ளை
ாளர்
 நிறு
நாங்
அதற்
மாளி
ணொ
என்று
ட்டார்.
சய்தி
பத்தி
ப்பது
தன்
ஆட்சி
ங்கள்



தங்கு தடையின்றி அணுகுவது தேச நலனுக்கு முக்கியமானது என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் பாக்யுட் தெரிவித்தார்.

இந்தத் தடை தொடர்பில் அதிபர் ட்ரம்ப், நான் ஊடகங்களுக்கோ, செய்தி நிறுவனங்களுக்கோ எதிரானவன் அல்ல. மோசமான கட்டுரைகள் குறித்தும் நான் கவலைப்படுவதில்லை. நல்ல கட்டுரைகளை நான் விரும்பவே செய்கிறேன். போலிச் செய்தி நிறுவனங்களுக்கு மட்டுமே நான் எதிரானவன். அவைகள் இந்த உலகத்தை விட்டு வெளியேற வேண்டியவை என்று குறிப்பிட்டார்.

வெள்ளை மாளிகையின் நிருபர்கள் ஆணையத்தின் ஆண்டுவிழா எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ளது. இதில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் ட்ரம்ப் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டார். (ம)



## ஜல்லிக்கட்டு எழுச்சி இளைஞர்கள் வருகின்றனர் அரசியல் களத்திலும்

சென்னை, பெப். 27

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தற்போது அரசியலிலும் களம்காண முடிவெடுத்துள்ளனர்.

மிருகவதை என்று தெரிவித்து தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட்டிருந்தது. இந்தத் தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி லட்சக்கணக்கான இளைஞர்கள் திரண்டு சென்னை - மெரீனா கடற்கரை, மதுரை அலங்காநல்லூர் ஆகிய பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இளைஞர்களின் இந்த எழுச்சியை அடுத்து ஜல்லிக்கட்டின் மீதான தடை உடைந்தது. இதனால் அரசியலிலும் இளைஞர்கள் வருவார்களா என்ற எதிர்பார்ப்பு பரவலாக நிலவியது. இது தொடர்பில் சமூகவலைத் தளங்களில் வாதிட்ட இளைஞர்கள் புதிய அரசியல் கட்சியையும் தொடங்கியுள்ளனர். சென்னையில் நேற்று முன்தினம் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

என் தேசம் என் உரிமைக் கட்சி என்று பெயரிடப்பட்டுள்ளது.

நிர்வாகக் குழு, கட்சிக் கொடி ஆகியனவும் அறிவிக்கப்பட்டது. சாதி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்தலில் நிற்க இயலாது. அதேபோல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் தேர்தலில் நிற்க இயலாது என்பன அடிப் படை விதிகளாக உள்ளன. (ம)

## இயற்கை எரிவாயுத் திட்டம்; தமிழகத்தில் கடும் எதிர்ப்பு

சென்னை, பெப். 27

தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு பெறுவதற்கு புதுடில்லி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த முடிவுக்கு தற்போது தமிழகமெங்கும் பெரும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது. புதுடில்லி அரசைக் கண்டித்து இளைஞர்கள், மாணவர்கள் போராட்டமொன்றும் நடைபெறலாம் என்றும் தெரியவருகிறது.

இயற்கை எரிவாயு பெறும் திட்டத்தைச் செயல் படுத்தினால் விவசாய நிலங்கள் அ[illegible]ம், நெடுவாசல் கிராமத்தையொட்டிய சுமா[illegible] 50 கி.மீ. தூரத்துக்கு நிலத்தடி நீர்மட்டம் பா[illegible]ம் என்ற அச்சம் இருப்பதால் இந்தத் திட்ட[illegible]தக் கைவிடவேண்டும் என்று அரசியல் க[illegible]ள் முதல் பல்வேறு அமைப்புகள் சார்பி[illegible]ற்போது போராட்டம் நடத்தப்பட்டு வருகி[illegible]ன. நெடுவாசல் கிராம மக்கள், இயற்கை எ[illegible]யு நிலையம் அமையப்போகும் இடத்து[illegible]க்கு அருகில் பந்தல் அமைத்து கடந்த சில தினங்களாக சுழற்சி முறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ம)



ன்
ல்
லார்

ா மாகாணத்
நற்றுமுன்தி
 குறைந்தது
லாம் என்று
தி வெளியிட்

முடித்துவிட்டு
 மீது தாக்கு
ிக்கப்பட்டது.
 செய்தியை
ன்ற பெண்
ட்டார் என்று
ளர் முகமது
(ம)

ளவு




# மரண அறிவித்தல்

## கந்தையா கணேஸ்

(போர்த்தேங்காய் அடி வீரர்)

அளவெட்டி வடக்கு, வெள்ளியம்பதி, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேஸ் 2017.02.24 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் பாசமிகு கணவரும், கண்ணதாசன், லோகதாசன், காந்திமதி, குகதாசன், சுகுணதாசன், விமலதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, ஆறுமுகம் முத்தம்மா மற்றும் ராசகுமாரி, காலஞ்சென்ற ராசலட்சுமி மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

காளி கோயிலடி,
வெள்ளியம்பதி,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

021 205 9673



பிறப்பு 1934.12.25
இறப்பு 2017.02.24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெளிநாட்டு முதலீடுகளை நாட்டினுள் உள்வாங்கிக்கொள்ள வேண்டும்

## தலைமை அமைச்சர் விக்கிரமசிங்க கருத்துரைப்பு

"ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிரிடல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியம்"

*– ரணில் விக்கிரமசிங்க*

பொருளாதார உறுதியின்மை நிலமைகள் மற்றும் பன்னாடுகளிடம் இருந்து பெற்றுக்கொண்டதான அதிக கடன் தொகை மதிப்பீடுகளின் மீள் செலுத்துகை காரணமாக நாடு அதிக நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஆதலால் நாட்டினுள் நேரடியாக உள்வரு வதான வெளிநாட்டு முதலீடுகளை எந்தவித வரையறை களுமின்றி உள்வாங்கிக் கொள்ள வேண்டுமென தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதான தகவல் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்ட தகவல் தரல்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், "2018 ஆம் ஆண்டு 700 கோடி அமெரிக்க டொலர்களை கடன் தொகையாக மீள் செலுத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.தவிர மொத்தமாக 3 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர்களை கடன் தொகையாக அடுத்து வரும் 10 வருடங்களுக்குள் மீள் செலுத்தி முடிக்க வேண்டி யுள்ளது. உள்நாட்டு முதலீடுகளினுடாக மட்டும் அரசு இதுவரை பெற்றுள்ளதான கடன்தொகை மதிப்பீடுகளை மீளச் செலுத்த முடியாது. அதேவேளை, கடந்த காலத்தில் இறப்பர் இறக்குமதிச் செயற்பாடு களுக்கு அனுமதி வழங்கியதன் ஊடாக உள்நாட்டு இறப்பர் உற்பத்தியாளர்கள் இடையே போட்டித் தன்மை குறைவடைந்துள்ளது. இந்தச் செயற்பாடுகள் உள்நாட்டு உற்பத்தி முயற்சிகளையும் அதிலிருந்தான வருவாயினையும் குறைத்துள்ளது" என்றார்.

# சீன அரசின் "ஒரே மார்க்கம் ஒரே தடம்" திட்டத்துக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு

## நிதி நகர மற்றும் தொழிற்பேட்டை அபிவிருத்திக்கும் ஆதரவு

சீன அரசின் ஒரே மார்க்கம் ஒரே தடம் திட்டத்துக்கு இலங்கை அரசு எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும் என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதே போன்று அம்பாந்தோட்டை தொழிற்பேட்டை மற்றும் கொழும்பு நிதி நகரத்தின் நிர்மாணப் பணிகளுக்கு சீன அரசு வழங்கி வருவதான ஒத்துழைப்புகளுக்கும் அரசு ஆதரவு வழங்குவதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தவிர, உண்மையான நட்பு நாடாக சீனா தொடர்ந்து இலங்கையுடன் செயற்படும் என்பதான தகவலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.அத்துடன் எதிர்வரும் ஜூன் மாதம் சீனாவில் இடம்பெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் வெளிவிவகார திணைக்களத்தின் தலைவர் சொன்க் டாபி உள்ளிட்ட சில உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

"சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் அரசியல் தாண்டியதான வர்த்தக முதலீடு சார் தொடர்பை ஏற்படுத்திய இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி விளங்குகிறது"

# கலக்ஸி எஸ் - 8, கலக்ஸி எஸ் - 8 பிளஸ் அதிதிறன்பேசிகள் அறிமுகம்



உலகின் முன்னணிக் கைபேசித் தயாரிப்பு நிறுவனமான சம்சங் தனது புதிய கலக்ஸி எஸ் - 8, கலக்ஸி எஸ் - 8 பிளஸ் அதிதிறன்பேசிகளை அறிமுகமுகப் படுத்தவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட் டுள்ளது.

இவற்றின் விலை மற்றும் நிற வகைகளை சம்சங் நிறுவனம் வெளியிட்டுள்ளதுடன் மேற்படி இரண்டு வகையான அதிதிறன்பேசிகளும் கறுப்பு, ஆர்க்கிட் சாம்பல் மற் றும் பொன்னிறத்தில் வெளிவரவுள்ளது.

இதன்படி ஒற்றைச் சிம் கொண்டதான சம்சங் கலக்ஸி எஸ் - 8 அதிதிறன்பேசி அண்ட்ரோய்ட் 7.0 நௌகாட் மூலம் இயங்குநிலை பெறும் எனவும் இவற்றில் 2160 ஸ இற்கு 3840 பிக்சல்கள் அளவுடையதான 5.50 அங்குல முழு எச்.டி ரிலு மினோஸ் தொடுதிரை உள்ளதாகவும் கூறப்படுகிறது. இவை 6 ஜிபி ரம் உடன் இணைந்து குவால்காம் சினாப் டிராகன் 835 புறோசசர் மூலம் இயங்குநிலை பெறுகிறது.

அதேபோன்று மைக்ரோ எஸ்.டி அட்டை வழியாக 128 ஜி.பி உள்ளடங்கிய சேமிப்பான் இவற்றுடன் இணைப்புப் பெற்றுள்ளது.எல்.டி.இ பிளாஸ் கொண்ட 16 மெகாபிக்சல் பின்புற கமரா மற்றும் (குறிப்பிடப் படாத) மெகாபிக்சல் முன்பக்கமான கமராவைக் கொண்டுள்ளது.

மேலும் இவை 3000 மெகா வட்ஸ் மின்கலத் திறன் மூலம் இயங்கும் எனவும் அதிதிறன் இணைப்பு விருப்பங் களாக வைபை, ஜிபிஎஸ் அல்லது ஏ-ஜிபிஎஸ், புளூருத், ஜிஎஸ்எம், 3ஜி, 4ஜி எல்.டி.இ மற்றும் மைக்ரோ - யூஎஸ்பி ஆகிய வசதிகளை உள்ள டக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒற்றை சிம் ஆதாரம் கொண்டதான சம்சங் கலக்ஸி எஸ் -8 பிளஸ் அதிதிறன்பேசி அண்ட்ரோய்ட் 7.0 நௌகாட் மூலம் இயங்கும் எனவும் இதில் 2160 இற்கு 3840 பிக்சல்கள் அளவுடையதான 6.20 அங்குல முழு எச்.டி ரிலுமினோஸ் தொடுதிரை உள்ளதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 6 ஜிபி ரம் உடன் இணைந்து குவால்காம் சினாப் டிராகன் 835 புறோ சசர் மூலம் இயங்குநிலை பெறும் எனவும் தெரிவிக் கப்படுகிறது. தவிர மைக்ரோ எஸ்.டி அட்டை வழியாக 128 ஜிபி உள்ளடங்கிய சேமிப்பான் இணைப்புப் பெற்றுள் ளது. சம்சங் கலக்ஸி எஸ் - 8 பிளஸ் அதிதிறன்பேசி எல்.டி.இ பிளாஷ் கொண்ட 16 மெகாபிக்சல் பின்புற கமரா மற்றும் (குறிப்பிடப்படாத) மெகாபிக்சல் முன்பக்கக் கமராவைக் கொண்டுள்ளது.

மேலும் இவை 3000 மெகா வட்ஸ் மின்கலத்திறன் மூலம் இயங்குகின்றன. அதிதிறன் பேசியின் இணைப்பு விருப்பங்களாக வைபை, ஜிபிஎஸ் அல்லது ஏ-ஜிபிஎஸ், புளூருத், ஜிஎஸ்எம், 3ஜி, 4ஜி எல்.டி.இ மற்றும் மைக்ரோ-யூஎஸ்பி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.




# 'எப்சன்' நிறுவனம் கிழக்கு மாகாணத்துக்கான இலத்திரனியல் பொருள் வழங்கல் பங்காளராக தெரிவு




கணினி அச்சியந்திரம், போட்டோ பிரதி இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் பொருள்களின் பிரதான உற்பத்தி நிறுவனமான எப்சன் (EPSOH) இலங்கையின் கிழக்கு மாகாணத்துக்கான வழங்கல் பங்காளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மக்சர் நிறுவனத்துடன் இணைந்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எப்சன் இந்தியா நிறுவனத்தின் இலங்கைக்கான அலுவலர் எம்.சாய்ராம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி அறிமுக நிகழ்வில் எப்சனின் இலங்கைக்கான முகாமையாளர் ஜெரோம் சுமித், எப்சனின் இலங்கைக்கான விற்பனை முகாமையாளர் எஸ்.சுரேன் ஆகியோர் எப்சன் உற்பத்திகள், அதன் பாவனைகள் தொடர்பிலான விளக்கங்களை வழங்கியதுடன் மட்டக்களப்பு மக்சர் நிறுவனத்துடனான இணைந்த வியாபார நடவடிக்கைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிகழ்வில் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும்,தாய்லாந்து, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் உள்ளிட்ட உலகின் 90 நாடுகளில் கிளைகளைக் கொண்டும் 67ஆயிரம் ஊழியர்களைக் கொண்டும் இயங்கி வரும் எப்சன் நிறுவனம் கடந்த வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்துகான த கிளையினை ஆரம்பித்திருந்தமை நோக்கத்தக்கது.

இந்த நிலையிலேயே இலங்கையின் 25 மாவட்டங்களிலும் பங்காளர்களை இணைத்து தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் எப்சன் நிறுவனம் கிழக்குக்கான பங்காளராக மக்சர் நிறுவனத்தினைத் தேர்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையைப் போற்றுவோம் தாய்மையை வணங்குவோம்



ஒருபெண் தனது சுதந்திரத்தையும், சுய உரிமையையும் எவரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியாது. எவராவது இவற்றைத் தருவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. எனவே பெண் என்பவள் தத்தமக்குரிய கட்டுக் கோப்புக்களுக்குள் நின்று கொண்டு எவருக்கும் விலை போகாது தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்வதுடன் தத்தமக்குரிய பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்வு பூர்வமாகச் செயற்படுத்தி வருவாளேயானால், அவளது சுதந்திரத்தில் எவரும் தலையிடத் தயங்குவர்.

தெல்லியூர்த்தேவி

ஒருநாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் பெண்களின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது என்றார் மறைந்த இந்தியத் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு. குடும்பம், சமூகம், சமுதாயம், இனம் என குடும்ப வாழ்வு பரந்து சென்று விரிவடைகின்றது. பண்பாட்டுடன் கலாசாரம், தனித்துவம், விழுமியங்கள் என்பன பேணப்படும். குடும்பங்கள் இணைந்த சமுதாயங்களைக் கொண்ட நாடே கட்டுக்கோப்புகளுடன் சுபீட்சத்தை நோக்கி வீறுநடை போடமுடியும்.

மானுடத்தின் அரைப்பங்கினரான மாண்புறு மங்கையர்தான், இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரையும் தாங்கி வளர்த்தவர்கள். இத்தகைய மானுடத்தின் ஊற்றுக் களாகவும் மூலசக்தியாகவும் ஆரம்பத்தின் ஆதியாகவும் திகழ்ந்து பரம்பரையைத் தாங்கி வரும் தாய்க் குலத்தை மானுடம் கீழ்த்தரத்தில் வைத்துச் சிந்திக்கும் மடமையை,

*"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"* - எனக் கூறினார் மகாகவி பாரதியார்.

மகாகவியின் முற்போக்குச் சிந்தனைகளின் பின்னரான பெண்கள் நிலைமையில் முன்னேற்றம் காணப்பட்ட போதும், இன்னமும் அவர்கள் தாங்களாக விழிப்புணர்வு பெறவில்லையே என மனவருத்தம் அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஒருபெண் தனது சுதந்திரத்தை, சுய உரிமையை எவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது. எவராவது இவற்றைத் தருவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. எனவே பெண் என்பவள் தத்தமக்குரிய கட்டுக் கோப்புக்களுக்குள் நின்று கொண்டு எவருக்கும் விலை போகாது தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்வதுடன் தத்தமக்குரிய பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்வு பூர்வமாகச் செயற்படுத்தி வருவாளேயானால் அவளது சுதந்திரத்தில் எவரும் தலையிடத் தயங்குவர். இன்னும் ஒருபடி மேலே சென்று தனக்கும் தான் சார்ந்த குடும்பத்துக்குமான பொருளாதார தேவையையும் நிறைவேற்றும் வாண்மையும் தகுதியும் பெற்று விட்டால் எவராலும் அவளது சுதந்திரத்துக்கோ சுயமரியாதைக்கோ தடைபோட இயலாது.

இன்று இலங்கையைப் பொறுத்த வரையில் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போரால் சிதையுண்ட-சின்னாபின்னப்பட்ட குடும்பங்களை நிர்வகிக்கும் தலைமைப் பொறுப்பு பெண்களையே சார்ந்துள்ளமை வெள்ளிடைமலை.

இங்கு பெண்கள் சுய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டிய கட்டாய தேவைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறு அவர்கள் இந்தத் தேவைகளை நாடிச் செல்லும்போது வஞ்சிக்கப்படாமலும் ஏமாற்றப்படாமலும் தங்கள் தேவைகளைப் பெறக்கூடிய தற்துணிவு கொண்டவர்களாகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்வார்களானால் அவர்கள் சுதந்திரம் பெற்றவர்களாகி விடுவார்கள்.

குடும்பத்தின் பண்பாடு, கலாசாரம், தனித்துவம், விழுமியங்கள் என்பவற்றைப் பேணிப்பாதுகாத்துக் குடும்பம் என்ற கட்டுக்கோப்பை இணைக்கும் மாபெரும் சக்தியாகத் திகழ்பவள் பெண்ணே என்றால் மறுத்துவிட முடியுமா?

இன்றுபெண்கள்எல்லாத்துறைகளிலும் கால்பதித்துச் சுதந்திரமாக சுயமரியாதையுடன் வாழ்ந்து குடும்ப நிர்வாகத்தின் பங்காளியாகப் பவனிவரும் அதே வேளையில், இன்னமும் அவர்களிடம் விழிப்புணர்வு விருத்தியடையாத காரணத்தால் வன்புணர்வு, வஞ்சிக்கப்படுதல் போன்றன தலை விரித்தாடுவதையும் காணமுடிகிறது. விழிப்புணர்வு என்பது பிள்ளைகள் வளர்க்கப்படுகையில் சிறுவயதிலிருந்தே ஏற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

"சுளகால் புலியை விரட்டியடித்தாள் பெண்" என புறநானூறு பண்டைய பெண்ணின் வீரத்தைப் பறை சாற்றி நிற்கையில், அவள் போகப் பொருளாகவும் போகம் தணிக்கும் கருவியாகவும் அடிமையாகவுமே வாழ்ந்து கொண்டு இருக்கிறாள் என்பதை உணர்கையிலே அவள் பெற்ற விழிப்புணர்வு போதாமையே தொக்கு நிற்பதை அவதானிக்க முடிகிறது.

சுளகால் புலியை விரட்டிய புறநானூற்றுப் பெண்ணை விஞ்சினாள் எங்களது ஈழத்தமிழ்ப்பெண். இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப உலகிலே ஈழத் தமிழ்ப்பெண் கையில் துப்பாக்கி ஏந்தி எதிரிகளுடன் களத்தில் சமர் புரிந்தாள் என்றால் அவள் தனது சமத்துவத்தை நோக்கி வீறுநடை போடுகிறாள் என்பது தெளிவாகிறது.

பெண்ணுரிமை என்ற உயரிய இலக்கை நோக்கி விடுதலைப்போர் நகர்ந்ததையும் வரலாறு பதித்துள்ளது. ஆணுக்குப் பெண் நிகர் என்ற புதிய வரலாற்றுக் காவியம் ஈழமண்ணில் பதியப்பெற்றதால் ஈழமக்களின் மனதில் புதிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதுடன் போருக்குப் பின்னரான இந்தக் காலகட்டத்தில் தலைமைத்துவத்தை ஏற்று சவால்களைச் சமாளித்துக் குடும்பத்தை வழிநடத்திச் செல்கின்றாள் பெண் என்பதும் கண்கூடு. இதனை மெருகூட்ட பொய்யாமொழிப் புலவர் வாக்கான

*"தற்காத்து தற்கொண்டான் பேணி*
*தகை சான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்"*

என்ற குறள் மூலம் பெண்ணே தன்னைத்தானே காத்துக் கொள்வதுடன் தான் சார்ந்த ஆணினத்தையும் காத்துத் தகைசான்ற சொல்லாட்சியுடன் வாழ்வில் சோர்வில்லாமல் வாழ்வாளேயானால் அந்தக் குடும்பத்தில் அவள் மதிக்கப்பெற்று சகல செல்வங்களுக்கும் அதிபதியாகி வாழ்வை வளம்பெற வைக்க முடியும். இதனை எவராலும் மறுத்துவிட முடியுமா? "பெண்கள் மதிக்கப்படும் இடத்தில் சகல செல்வங்களும் குவிந்து கிடக்கும்" என சுவாமி விவேகானந்தர் கூறி உள்ளமையும் நோக்கற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்; 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தடுமாறும் நிலை தமிழருக்குவேண்டாம்

ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையின் 34ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகிறது. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஏற்கனவே அந்தச் சபையால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் எந்தளவுக்குச் செயற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து இந்த அமர்வில் ஆராயப்படவிருக்கிறது. ஏற்கனவே சபையால்வழங்கப்பட்டிருந்த கால அவகாசத்துக்கு மேலதிகமாகஇம்முறையும்அவகாசம்கோருவதற்குஇலங்கை ஆயத்தமாகி வருவது தெரிகிறது. தனது இணை அனுசரணையுடன் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை எந்தளவுக்கு இதய சுத்தியுடன் செயற்படுத்த இலங்கை முயன்றுள்ளது என்ற விடயம் பல வகையிலும் மிக நுணுக்கமாக ஆராயப்படும் என்பதில் ஐயமில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் எந்தளவுக்கு உளரீதியில் முன்னேற்றம் காணச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை உறுப்பு நாடுகள் மிகக் கவனமாக ஆராயக்கூடும். இவை பற்றி முன்கூட்டியே அறிந்துகொள்வதில் சில நாடுகள் அக்கறை கொண்டிருப்பதையும் அறியமுடிகின்றது. அந்த வகையிலேயே இந்திய அயலுறவுச் செயலரின் இலங்கைப் பயணம் அமைந்திருக்க வேண்டும். அதேவகையில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றும். கொழும்புக்கு அண்மையில் வருகை தந்திருந்தது. பன்னாட்டு மட்டத்தில் இலங்கைக்குநெருக்குதல்தரப்படுவதிலிருந்துவிடுவிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில் இவர்களின் வருகை இடம்பெற்றிருப்பது கவனத்திற்குரியது. ஐ.நா. மனித உரிமைகள்சபையில்நிறைவேற்றப்பட்டதீர்மானத்தை அமெரிக்காவே முதல் முன்மொழிவாளராகச் செயற்பட்டுநிறைவேற்றியிருந்தமைகுறிப்பிடத்தக்கது. அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் இரா.சம்பந்தன் தலைமையில் சந்தித்து தமிழர் தரப்பிலான விடயங்களை எடுத்துக் கூறியிருப்பதுடன் 2015ஆம் ஆண்டு ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் நிறை வேற்றிய தீர்மானத்தை முழுமையாகச் செயற்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மனித உரிமைகள் சபையில் அவகாசம் வழங்கப்படுகிறதோஇல்லையோஏற்கனவேநிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்படுவதில் தமிழ்த்தரப்பு கரிசனையாக இருப்பது அவசியம். பிரச்சினைகளை உள்நாட்டிலேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்பதெல்லாம் வெறும் பசப்பு வார்த்தைளே. அந்த வகையில் பல கட்டங்களை நாம் கடந்து வந்துள்ளோம். இப்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையினதும் ஏனைய செல்வாக்குள்ள நாடுகளதும் அழுத்தமே ஓரளவுக்காவது பயன் தந்துள்ளது. அவை குறித்து இலங்கை அரசு அச்சம் கொண்டிருப்பதும் கண்கூடு.

தீர்வு என்பது உள்நாட்டில்தான் ஏற்பட வேண்டும் என்பதில் இரண்டு நிலைகள் இல்லை. ஆனால் அதற்கு பன்னாட்டுக் கண்காணிப்பும் அழுத்தமும் அவசியம் . அதைத் தவிர்த்துக் கொண்டு அரசு, பன்னாட்டு மட்டத்தில்தலைதூக்குவதுமுடியாதகாரியம்.எனவேதான் தமிழர்கள் மிக உன்னிப்பாகவும் எச்சரிக்கையாகவும் செயற்பட்டு தமிழ்பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். பன்னாட்டுச் சூழ்நிலை அதற்குச் சாதகமாக இருப்பதாகவே தெரிகின்றது.

# அதிகாரப் போட்டிக்குள் சிக்கிக் கொள்ளாது தப்பித்துக் கொள்ளவேண்டும் இலங்கை

சிங்கள மூலம் –
அசங்க அட்டிகல (லங்காதீப)
தமிழில் – வீ.எஸ்.ரீ

வரலாற்றில் முன்னர் சில சந்தர்ப்பங்களில், உலகின் பலமிக்க நாடுகளின் முன்னால் இலங்கை தலை வணங்கிச் செயற்பட்டதுமுண்டு. அத்தகைய வேளைகளில் இஞ்சியைக் கொடுத்து மிளகாய் வாங்கிய நிலை போன்ற அனுபவம் எமக்கு ஏற்பட்டதுண்டு. கடைசியில் சுதந்திரத்தைப் பெற்றதன் மூலம், பின்னடைவுகளால் அதிருப்தியும் துக்கமும் அடைய வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டதுதான் மிச்சம்.

உலகப் புகழ்பெற்ற வர்த்தக சஞ்சிகையான "போப்ஸ்"ஸின் இணையத்தளத்தில் இலங்கை, சீனாவினது கொலனியாக ஆகியுள்ளதாக அண்மையில் கட்டுரையொன்று வெளியாகியிருந்தது.

சீனாவைப் பொறுத்தவரை அன்று முதல் இன்றுவரை அது இலங்கையின் நெருங்கிய நட்பு நாடொன்றாகவே இருந்து வந்துள்ளது; வருகிறது. அது மட்டுமன்றி, சீனா இன்று உலகின் முன்னணி பொருளாதார பலவான் நாடாகும்.



சீன மக்கள் நட்புறவுடன் பழகும் சுபாவம் கொண்டவர்கள் என்பதுடன் சீன நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக உற்சாகத்துடன் உழைக்கும் திறன்மிக்கவர்கள். பொருளாதார முன்னேற்றத்தில் மூன்றாவது தரத்திலுள்ள நாம், முதற்றரத்தில் உள்ள சீனாவுடன் உறவை நெருக்கமாகப் பேணுவதன் மூலம் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காண இயலும்.

### மகிந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்குச் சீனா பலவகைகளிலும் உதவியுள்ளது

முன்னைய மகிந்த அரசும், இன்றைய கூட்டு அரசும் சீனாவின் உதவி ஒத்தாசைகளைப்பெறுவதில் ஆர்வம் காட்டி வந்த, காட்டிவருகின்ற அரசுகள். குறுகிய காலத்தில் சீனாவின் ஒத்துழைப்புடன், நிதி மற்றும் ஒப்பந்தங்கள் மூலமான உதவியுடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள வானூர்தி நிலையம் என்பவை உருவாக்கப்பட்டன.

இன்று இந்தியாவும் எமது நாட்டுடன் நெருங்கிச் செயற்படும் அண்டை நாடாக இருந்து வருகிறது. இந்தியா எமக்கு அந்நியன் அல்ல. இலங்கை இந்தியாவின் ஒரு கொலனியோ என்ற சந்தேகம் கூட எழக்கூடும். அந்த அளவுக்கு இரண்டு லட்சம் பேர் வரையிலான இந்தியக் குடிமக்கள் இங்கு உள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். சீனாவைப் போன்று இந்தியாவும்கூட உலகப் பலவான் நாடொன்றாக விளங்குகிறது. எமது அண்டை நாடாக இருந்த போதிலும் சீனாவின் அளவுக்கு இந்தியாவின் உதவி எமக்குக் கிட்டுவதில்லை. போரின் போதான உதவி, கடனுதவி, அபிவிருத்தி உதவிகள் என்பவை சீனாவிடம் இருந்து கிடைத்த அளவுக்கு இந்தியாவிடமிருந்து கிட்டியதில்லை. ஆயினும் இந்தியா நல்லெண்ண அடிப்படையில் இலங்கைக்கு உதவ முன்வரும் போது அதனைப் புறம் தள்ளிவிட இயலாது.

பொருளாதார ரீதியைப்போன்றே அரசியல் ரீதியிலும் சீனாவால் இலங்கைக்கு நன்மைகள் அதிகம், இந்தியாவிடமிருந்தும் அத்தகைய நன்மைகள் கிட்டுமாக இருப்பினும், அத்தகைய நிலையில் நாம் எம்மீது நம்பிக்கையும் புரிந்துணர்வும் கொள்ளுதல் அவசியம்.

சீனாவில் 140 கோடி வரையிலும், இந்தியாவில் 130 கோடி வரையிலுமான மக்கள் வாழ்கின்றனர். 1978இல் பொருளாதாரச் சுதந்திர நிலை பெற்ற சீனாவின் இன்றைய பொருளாதார அபிவிருத்தி வேகம் நூற்றுக்குப் 16 வீதமாகும். 1977இல் பொருளாதாரச் சுதந்திரநிலை பெற்ற இலங்கையின்நிலைமைஎன்ன? ஆனால் 1991 இல் பொருளா தாரச் சுதந்திரம் பெற்ற இந்தியா, தனது பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நூற்றுக்கு 6.7 வீதமாக அதிகரித்து வைத் துள்ளது.

வர்த்தகத் தொடர்பு மற்றும் ராஜதந்திரத் தொடர்பிலும் சீனாவும் இந்தியாவும் இலங்கைக்குச் சிறந்த சந்தர்ப் பத்தை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா இலங்கையுடன் பாரம்பரிய நட்பைப் பேணி வருவதுடன், இலங்கையுடன் முரண்பட்டுக் கொள்ளவுமில்லை. ஆனால் இந்தியாவோ போரின் போது சில சந்தர்ப்பங்களில் வடக்கு,கிழக்கு பிரிவினைவாதத்தை ஆதரித்தது.

தமிழ் நாடு மாநில அரசின் அழுத்தங்கள் புதுடில்லி அரசை, இலங்கையின் பிரிவினைவாதக் கருத்தை ஆதரிக்க வைப்பித்தன. ஆயினும் சிக்கலான பலவேளைகளில் இந்திய அரசு, இலங்கைக்கு குறிப்பிடத்தக்க அளவு உதவி புரிந்தது.

திடீரென ஏற்படும் துன்பமொன்றுக்கு தூரத்தில் இருக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனா இலங்கையுடன் பாரம்பரிய நட்பைப் பேணி வருவதுடன், இலங்கையுடன் முரண்பட்டுக் கொள்ளவுமில்லை. ஆனால் இந்தியாவோ போரின்போது சில சந்தர்ப்பங்களில் வடக்கு, கிழக்கு பிரிவினை வாதத்தை ஆதரித்தது. தமிழ் நாடு மாநில அரசின் அழுத்தங்கள் புதுடில்லி அரசை, இலங்கையின் பிரிவினை வாதக் கருத்தை ஆதரிக்க வைப்பித்தன. ஆயினும் சிக்கலான பல வேளைகளில் இந்திய அரசு, இலங்கைக்கு குறிப்பிடத்தக்க அளவு உதவி புரிந்தது.

உறவினர்களைவிட, அயல் வீட்டுக்காரரே முதன் முதலில் உதவிட முன்வருவது வழக்கம். எனவே எமது அயல் நாடான இந்தியாவைப் பகைத்துக் கொள்வது இலங்கைக்கு எப்போதுமே நட்டம் ஏற்படுத்துவதொன்றே.

**சீனாவோ இந்தியாவோ இலங்கைக்கு உதவிகளை இலவசமாக வழங்குவதில்லை**

இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் போதான உதவிகள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் வழங்கும் உதவிகள் தொடர்பில் இந்தியாவோ, சீனாவோ எதனையும் எவருக்கும் இலவசமாக வழங்க முன்வரா என்பதை மனதில் இருத்த வேண்டும். நிதி உதவி, அடிப்படை வசதிகள் உதவி, பாதை, பாலம் அமைத்தல் போன்ற சகலவற்றிலும் இந்தியாவோ, சீனாவோ முதலீடு செய்யும் போது, உடனடி இலாபநோக்கைப் போன்றே, தத்தமது நாடுகளது எதிர்கால பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே செயற்படுகின்றன.

உலகின் மொத்தச் சனத்தொகையோ 7.5 பில்லியன். அதில் இந்தியா, சீனா ஆகிய இருநாடுகளது சனத்தொகைமட்டும் இரண்டரை பில்லியனுக்கு அதிகமாகும். இந்த இரு நாடுகளின் தொழிலாளர் சக்தி வலுமிக்கது. ஆனால் எமது நாட்டின் தொழில் துறைகளில் தொழிலாளர் வலு பலமற்றது. எத்தனையோ துறைகளில் தொழிலாளர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பினும், எம்மவர்கள் அதில் ஈடுபட ஆர்வம் காட்டுவதில்லை. சீன நாட்டுத் தொழிலாளர்களது உற்சாகத்துக்கும் திறமைக்கும் அவர்கள் இங்கு மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் சாட்சி பகரும்.

அதே வேளை இந்தியாவோ அடிக்கடி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது. காரணம் அது அவர்கள் நாட்டு அரசியல் பின்னணியால் அமைவது. ஆயினும் பல மிக்க அயல்நாடான இந்தியாவுடனான எமது உறவு சிறப்பாக அமைந்துள்ளமை நன்மையளிக்குமொன்றே. எனவே சீனாவுடனும், இந்தியாவுடனும் முரண்படாத விதத்தில் நல்லுறவு பேணிச் செயற்படுவது இலங்கைக்கு இலாபகரமான பயன்னைத் தரவல்லது. மக்கள் தொகை அடிப்படையில் நோக்கினால், இந்திய அரசின் நிலைப்பாட்டை மதிக்கும் தரப்பினர் இலங்கையை இந்தியாவின் கொலனி என்ற வகையில் கருதக்கூடும். அதே போன்று, இலங்கையைத் தமது பொருளாதாரக் கொலனி எனச் சீனா கருதக் கூடும். ஆனால் இலங்கையின் அரசியல் தீர்மானங்கள் உறுதியாகவும், முரண்பாடுகளின்றியும் அமையுமானால், எந்த நாட்டினது கொலனியும் அல்லாத விதத்தில் பெரும் அபிவிருத்திப் பாதையில் இலங்கையின் பயணம் அமைய வாய்ப்புண்டு.

இது குறித்து நாட்டுப்பற்றுள்ள தேசிய அமைப்பின் செயலாளர் தெரிவித்த கருத்து சில உண்மைகளைத் தெளிவுபடுத்துகின்றது. கடந்த வருட பிற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஜோன் ஹெறி, இலங்கை உலகின் முக்கிய கடல் மார்க்கத்தில் முக்கியமான இடத்தில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கருத்து மிகவும் சரியானதே என்பதை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 30 ஆயிரம் வரையான பெரிய வர்த்தகக் கப்பல்கள் எரிபொருள் நிரப்ப வரும் வாய்ப்பு உள்ளதென்பதையும், உலகில் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் திருகோணமலை துறைமுகம் இரண்டாவது இடம் வகிப்பதும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இந்தியா பலமுள்ள நாடாக இருப்பதால் சுதந்திரமாக இலங்கையால் இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்த இயலாதுள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கையின் பூகோள அமைவிடம் இடையூறாகவுள்ளது. பாகிஸ்தான் இந்தியாவின் எதிரி நாடென்பதால், இந்தியாவின் தென்புறத்தில் இருக்கும் இலங்கையின் நட்பும், பூகோள அமைப்பும் இந்தியாவுக்குப்பெறுமதியானவை. இராமாயண காலத்திலிருந்தே இலங்கையைத் தனக்கு அடங்கிச் செயற்படுமொரு நாடென்ற கண்ணோட்டத்திலேயே இந்தியா கருதி வந்துள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைத் தனியாகப் பிரித்து தனக்குக் கீழான ஒரு கொலனியாக வைத்துக் கொள்வது இந்தியாவுக்கு பல வழிகளில் வாய்ப்பான தொன்று.


அந்தவகையில், திருகோணமலையிலிருந்து தனுஷ்கோடிக்கு பாலம் அமைத்து ரயில் சேவைமேற்கொள்ளவும், தலைமன்னாரில் இருந்து தனுஸ்கோடிக்கு ரயில் மற்றும் நெடுஞ்சாலை அமைக்கும் திட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ள இந்திய இலங்கை அரசுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

சீனாவுடன் நெருங்கிய உறவைப் பாகிஸ்தான் பேணி வருவதால், போக்குவரத்து உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை இணைந்து பாகிஸ்தானில் மேற்கொள்ள இந்த இரு நாடுகளும் தயாராகி வருகின்றன.

வெளிநாடுகளில் வதியும் இந்தியக் குடிமக்கள் தனது நாட்டின் ஐந் தாவது இராணுவப் பிரிவாக இந்தியா கருதுகிறது. தற்போது மலையகப் பகுதிகளில் இரண்டு லட்சம் வரையான தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருவதுடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 'எட்கா' ஒப்பந்தம் கையயழுத்திடப்படுமானால், அந்தத் தொகை ஆறரை லட்சம் வரை உயர்வடைய வாய்ப்புண்டு.

அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் உரிமையை தற்போது இந்தியாவே கைப்பற்றியுள்ளது. அதே போன்று பலாலி வானூர்தி நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பான ஒப்பந்தமும் இந்தியாவுக்கே கிட்டியுள்ளது.

அந்த வகையில் இந்தியாவும் சீனாவும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தத்தமது பலத்தை நிரூபிக்கப் போட்டி போட்டு வருகின்றன. இலங்கை பொருளாதார ரீதியில் இந்த இரு நாடுகளது உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்யும் முக்கிய நாடாக இருப்பினும், இலங்கை தனது இறைமையையும் தனித்துவத்தையும் கட்டிக் காக்கும் விதத்தில் ஆசிய வட்டகையில் இந்த இரு நாடுகளில் எந்தவொரு நாட்டுக்கும் தலைவணங்காது, அவற்றின் கொலனியாகச் செயற்படாது. அவற்றுடன் நட்பு ரீதியாக இணைந்து செயற்பட்டு நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்லவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.



# வாசகர் திருமுகம்

## கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறியாதீர்!

கடந்த சனிக்கிழமை உதயனில் வெளியான கஜேந்திரகுமாரின் கனவு நிறைவேறுமா? என்ற தலைப்பிலான கட்டுரை சந்தர்ப்பவாத அரசியல் நடத்தி தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் தேடிக்கொள்ளும் முனைப்பில் தலையால் கிடங்கு கிண்ட முயலும் கஜேந்திரகுமாரது பொய் வேடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையிலான தொன்று. முன்னைய காலத்தில் கற்றறிந்தவர்களுடள் மட்டும் அரசியல் மட்டுப்படுத் தப்பட்டிருந்தது. ஆனால் இன்றைய நாள்களில் அரசியல் அறிவு தெளிவு ஆர்வம் மட்டுமன்றி அரசியல் வரலாறும் பொதுமக்களின் பெரும்பாலோருக்கு அத்துப்படி. குறிப்பாக இளைய சமுதாயத்தவர் எமது அரசியல்வாதிகள் குறித்து நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

அந்த வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பழுத்த பண்பட்ட அரசியல் வாதியுமான சம்பந்தன் ஐயாவின் இன்றைய அரசியல் வழிநடத்தலை நாளும் பொழுதும் விமர்சித்துவரும் கஜேந்திரகுமாரது அரசியல் பின்னணி குறித்து தமிழ் மக்கள் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளனர். அரசியல் ரீதியிலோ தனிப்பட்ட ரீதியிலோ சமூகத்தால் அறியப்பட்ட ஒருவர் குறித்து விமர்சிப்பதற்கு குறித்த விமர்சனத்தை மேற்கொள்பவர் அதற்கான தகுதி கொண்டவராயிருத்தல் அவசியம். ஆக கஜேந்திரகுமார் போன்றோர் கண்ணாடி வீட்டிலிருந்துகொண்டு கல்லெறிவதால் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கப்போவது அவர்களே!

*த.அருமைநாயகம், கோண்டாவில்*

## தலைக்கவசத்தை அணிவதில் அலட்சியப் போக்கு வேண்டாம்

தலைக்கவசம் தொடர்பாகப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வாகன ஓட்டிகளின் பாதுகாப்புக்காகவே தலைக்கவசங்களை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் பலர் இதை உணருவதில்லை. பொலிஸாரின் நடவடிக்கைக்குப் பயந்தே பலரும் தலைக்கவசங்களை அணிந்து செல்கின்றனர். இத்தகையவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர்கள் தலைக்கவசத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டிகளை முறையாக இணைக்காது விட்டு விடுகின்றனர். விபத்துக்கள் நிகழும் போது உயிரிழப்புக்களுக்கு இதுவே காரணமாகி விடுகின்றது. வாகன ஓட்டிகள் இனியாவது தலைக்கவசங்களை முறையாக அணிந்து சென்றால் உயிரிழப்புக்களை ஓரளவு தவிர்க்க முடியும்.

*பா.நிதர்சனி, கொக்குவில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா





**மேடம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**இடபம்:** எதிர்கால நலன் குறித்த சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர். சிலரது உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**மிதுனம்:** உங்களின் நற்செயலை சிலர் விமர்சனம் செய்யலாம். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு, பிள்ளைகளின் வழியில் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். பணியாளர்களுக்குப் பாராட்டும், வெகுமதியும் கிடைக்கும்.

**சிங்கம்:** எதிரி தொல்லை மறையும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**கன்னி:** பொது விடயங்களில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் மந்தகதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர். பெண்கள் ஆடம்பரத்தடன் செயற்படுவர்.

**துலாம்:** முக்கிய பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.



**விருச்சிகம்:** ஆன்மிக நாட்டம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உருவாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்களின் தேவை தாராளமாக நிறைவேறும்.

**தனுசு:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மகரம்:** உற்சாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். பெண்களுக்கு சகோதர வழியில் உதவி உண்டு.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | 9 | 1 | | |
| | 3 | | 2 | | | 6 | | 5 |
| | 4 | | | | | | 7 | |
| | | | | 6 | | | 5 | 9 |
| | | 5 | | | | 8 | | |
| 6 | 8 | | | 9 | | | | |
| | 7 | | | | | | 3 | |
| 5 | | 1 | | | 7 | | 6 | |
| 3 | | 2 | 5 | 4 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 9 | 5 | 6 | 2 | 8 | 4 |
| 8 | 2 | 9 | 3 | 4 | 7 | 1 | 6 | 5 |
| 5 | 4 | 6 | 2 | 8 | 1 | 3 | 7 | 9 |
| 2 | 9 | 8 | 7 | 3 | 5 | 4 | 1 | 6 |
| 7 | 5 | 4 | 6 | 1 | 8 | 9 | 3 | 2 |
| 3 | 6 | 1 | 4 | 2 | 9 | 8 | 5 | 7 |
| 6 | 8 | 5 | 1 | 9 | 4 | 7 | 2 | 3 |
| 9 | 7 | 3 | 8 | 6 | 2 | 5 | 4 | 1 |
| 4 | 1 | 2 | 5 | 7 | 3 | 6 | 9 | 8 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# அரவிந்த் சாமியுடன் இணைந்தார் சிம்ரன்



இயக்குநர் செல்வா இயக்கத்தில் அரவிந்த் சாமி - ரித்திகா சிங் இணைந்து நடிக்க உள்ள படத்தில் பிரபல நடிகை ஒருவரும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். சுமார் 20 வருடங்களுக்குப் முன்பு வெளியான புதையல் படத்துக்குப் பின்னர், இயக்குநர் செல்வா இயக்கத்தில் அரவிந்த் சாமி மீண்டும் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் அரவிந்த் சாமிக்கு ஜோடியாக ரித்திகா சிங், நந்திதா, சாந்தினி உள்ளிட்ட 3 நாயகிகள் நடித்து வருகின்றனர். இந்த நிலையில் முக்கிய கதாபாத்திரத்தில் சிம்ரன் நடிக்க உள்ளார்.
இந்தப் படத்துக்கு 'வணங்கா முடி' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுவரும் நிலையில் படக்குழு அதனை மறுத்துள்ளது. முக்கியமான கதாபாத்திரத்தில் தம்பி ராமையா, ஹாசினி, ஹரிஷ் உத்தமன், ராஜ்கபூர், நாகி நீடு, ரமேஷ், சுந்தர் உள்ளிட்ட பலரும் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். இந்தப் படத்துக்கான படப்பிடிப்பு கடந்த வாரம் தொடங்கிய நிலையில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகை சிம்ரன் இந்தப் படத்தில் பொலிஸ் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் கைகள் சொல்லும் குணாதிசயங்கள்



பெண்களின்கைகளது அமைப்பை வைத்து அவர்களது குணாதிசயங்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

**மிருதுவான கைகள் :**
கைகள் மிருதுவாக இருந்தால், அத்தகைய பெண்கள் முயலும் எல்லா வேலைகளும் தடையின்றி நிறைவேறும். லாபமும் கிடைக்கும். தர்ம காரியங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்.

**வறட்சியான கைகள் :**
கைகள் வறட்சியாகவும், நரம்புகள் வெளியே தெரியும் படியும் அமைந்திருந்தால், அவர்களது குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் அதிகமிருக்கும். கணவனும், பிள்ளைகளுமே கூட விரோதியாவார்கள்.

**உள்ளங்கை பள்ளம் :**
உள்ளங்கைகள் சிறிது பள்ளமாக இருக்கும் பெண்கள் உத்தமிகள். உண்மையைப் பேசும் குணமுடையவர்கள். ஒழுக்கமானவர்கள். உள்ளங்கைகள் அதிக பள்ளமாகவும், முக்கியமான ரேகைகள் மட்டுமே நன்றாகத் தெளிவாகப் பிரகாசமாக இருந்தால் எந்தக் காலத்திலும் சரீர ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.

**கைகளின் நீளம் :**
பெண்களது கைகள் முழங்கால் அளவுக்கு நீண்டு தொங்கும்படி அமைந்திருந்தால், அவர்கள் சகல சௌபாக்கியங்களுடன் இருப்பார்கள். வாழ்க்கையின் சங்கடங்கள் எதையும் சிரித்த முகத்துடன் சகித்துக் கொள்வார்கள். கணவனுக் காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பார்கள்.

**கை விரல்கள் :**
பெண்களின் கை விரல்கள் மென்மையாகவும், ஒழுங்காகவும், அழகாகவும் இருந்தால் சகல சௌபாக்கியங்களும் அமைந்திருக்கும். இத்தகைய பெண்களுக்கு புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகமிருக்கும். கணவனை மதிப்பவர்கள். எல்லோரும் பாராட்டும் வகையில் நடந்து கொள்வார்கள். இனிமையாகப்பேசி, பழகக்கூடியவர்கள்.

நீண்ட கை விரல்களை உடைய பெண்கள் கலையார்வமுள்ளவர்கள். இசை ஞானம் உள்ளவர்களாகவோ, இசைக் கருவிகளை வாசிப்பதில் பெரிதும் வல்லவர்களாகவோ இருப்பார்கள். சிலர் நாட்டியத்திலும், சிலர் நடிப்பிலும் சிறந்து விளங்குவார்கள்.

கை விரல்கள் பருமனாகவும், முரடாகவும் அமையப் பெற்ற பெண்கள், உழைத்து சம்பாதித்து வாழ்பவர்களாக இருப்பார்கள். பொறாமைக் குணமுடையவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்குப் புத்திர பாக்கியம் அமைவது அரிது.

கை விரல்கள் நெருக்கமாக சேர்ந்திருந்தால், கஞ்சத்தனம் மிக்கவர்களாகவும், பணம் சேர்ப்பதிலேயே எப்போதும் குறியாகவும் இருப்பார்கள்.

**நகங்கள் :**
கைவிரல் நகங்கள் சொத்தையாகவும், கறுப்பாகவும் இருந்தால் ஆயுட்காலம் முழுவதும் கஷ்டமும், வறுமையும், பலரின் பழிப்பும் உண்டாகும்.

விரல் நகங்கள் சிவந்து, பளபளப்பாக, அழகாகக் காணப்பட்டால் அப்பெண்கள் ஆரோக்கியமானவர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருப்பார்கள்.

பெண்களது கைகள் சமமாக இருந்தால், அவர்களுக்கு எல்லா சௌபாக்கியங்களும் கிட்டும். குடும்பத்தை நன்றாக நிர்வகிப்பார்கள். பெரியவர்களிடம் மரியாதை மிக்கவர்கள்.

இவ்வாறு பெண்களின் கை அமைப்பினை வைத்தே அவர்களின் குணாதிசயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

# இலட்சியங்களை அடைய குழந்தைகளுக்கு வழிகாட்டுங்கள்

எதிர்காலத்தில் எந்த முயற்சியில் ஈடுபட்டாலும், கஷ்டம். முடியாது என்ற வார்த்தைகளே நினைவுக்கு வரும். அது அவர்கள் வளர்ச்சியைப் பாதிக்கும். அதனால் புதிய முயற்சிகளில் குழந்தைகள் ஈடுபடும்போது, உன்னால் முடியும், செய்து பார் என்று நம்பிக்கையளித்து, அதைச் செய்து முடிக்க சரியான பாதை யைக் காட்டுங்கள்.

பெற்றோர் சொல்லும் அறிவுரைகள் பெரும்பாலும் குழந்தைகளுக்கு புரியாது. அவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு பெற்றோருக்கு சொல்லத்தெரியாது. அதனால் அறிவுரைகளை வழங்காமல், அந்த அறிவுரைகளுக்கு ஏற்ப பெற்றோர் வாழ்ந்துகாட்ட வேண்டும். குழந் தைகளும் அதுபோல் வாழ்ந்துகாட்டுவார்கள். வாழைப்பழத்தை சாப்பிட்டு விட்டு தோலை குப்பைக்கூடையில் போடவேண்டும் என்பதை சொல்லிக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டியதில்லை. முன்னோடியாக பெற்றோர் அதை செய்துவிட்டால், குழந்தைகளும் அதனைப் பின்பற்றத் தொடங்கிவிடுவர்.

பெற்றோர் தங்களிடம் இருக்கும் மூடநம்பிக்கைகளை குழந்தைகள் மீது திணிக்கக்கூடாது. சிறுவயதில் மூட நம்பிக்கைகளை பதிய வைத்துவிட்டால், பிற்காலத்தில் அவர்களிடம் இருந்து அந்த நம்பிக்கை மாறாது. பேய், பிசாசு, மாந்திரீகம் போன்றவற்றை விளையாட்டுக்காகவோ, பயமுறுத்தவோ கூட சொல்லக்கூடாது. சொன்னால் அவர்கள் விபரீதமாக யோசிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

நீதியைச் சொல்லும் கதைகளில்கூட பொய், புரட்டு, மூடநம்பிக்கை இருக்குமானால் அதிலிருக்கும் நீதி குழந்தைகளுக்கு புரியாது. மாறாக பொய்யான விடயங்கள் ஆழமாக பதிந்துவிடும். குழந்தைகளின் கற்பனை உள்ளம் மூடநம்பிக்கைகளை எளிதாக கிரகித்துக் கொள்ளும்.

பெற்றோர், மற்றவர்கள் மீதுள்ள தங்கள் கோபத்தை வீட்டில் குழந்தைகளிடம் காட்டக்கூடாது. அப்படி அடிக்கடி நடந்தால் குழந்தைகள் முரட்டு சுபாவம் கொண்டவர்களாகி விடுவார்கள். எப்போதும் சிடுசிடுப்பு, எரிச்சல் இதெல்லாம் குழந்தைகள் விடயத்தில் கூடவேகூடாது. குழந்தைகள் கோபமற்றவர்களாகவும், பொறுமை உணர்வுமிக்கவர்களாகவும் வளரவேண்டும் என்றால், அத்தகைய குணாதிசயத்தை தங்களிடம் இருந்து பெற்றோர் வெளிப்படுத்த வேண்டும். குழந்தைகளை திட்டுவது, அடிப்பது எல்லாம் பெற்றோர் மீது அவர்களுக்கு அவநம்பிக்கையை உருவாக்கிவிடும். அது அவர்களிடம் வன்முறை எண்ணத்தை தூண்டும். தங்கள் வீட்டில் இருந்து வன்முறை எண்ணம்கொண்ட ஒருவர் உருவாக பெற்றோர் ஒருபோதும் காரணமாகி விடக் கூடாது.

# வரலாற்றில் இன்றைய தினம்

1594-நாலாம் ஹென்றி பிரான்ஸின் அரசரானார்.
1844-ஹெய்டியிடமிருந்து டொமினிக்கன் குடியரசு சுதந்திரம் பெற்றது.
1900-பிரித்தானிய தொழிலாளர் கட்சி தொடங்கப்பட்டது.
1940-கதிவீச்சுள்ள கார்பன்-14 மாடின் காமென் மற்றும் சாம் ருபென் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது.
1964-பைசா சாய்ந்த கோபுரத்தை விழாமல் பாதுகாக்க இத்தாலி அரசு உதவிகளைக் கோரியது.
1991-குவைத் விடுவிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ் அறிவித்தார்.
1992-தொண்டர் ஆசிரியர்கள் நியமனம். புதுமாதிரி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ளோருக்கு மட்டும் நியமனம்.
1992-தமிழகத் தமிழரும் பாதிப்புறும்போது பிரபாகரனையே நினைக்கிறாகள் என பண்டுருட்டி ராமச்சந்திரன் உரை.
1992-வவுனியா, மன்னாரில் மீண்டும் ஊரடங்கு
1992-குடாநாடு மீதான உத்தேச தாக்குதலை நிறுத்த ஐ.நா. தலைவருக்கு உலக நாடுகளைச் சேந்த 30 ஆயிரம் தமிழர் மகஜர்.
1993-உதவும் நாடுகள் வழங்கிய வட கிழக்கு அபிவிருத்தி நிதி செலவிடப்படாமல் தேக்கம் என திறைசேரி வட்டாரங்கள் தெரிவிப்பு.
1993-உடுகம்பொலவின் புத்தகம் மூலம் அரசின் படுகொலைகள் அம்பலம்; நியூயோக்கில் அச்சாகியது 1987 -1990 ஜே.வி.பி நடவடிக்கை உச்சத்திலிருந்தபோது, நடந்த சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல எழுதிய புத்தகத்தில்
1993-கிளாலி கடற் பயணத்தின்போது அடையாள அட் டையினூடாக இறந்ததாகக் கருதி சாவு அறிவித்தல்; தப்பி வந்த கொக்குவில் விஜயகுமார் நான் உயிரோடு வந்துவிட்டேன் என மீண்டும் விளம்பரம்.
1993-பாதித் தேங்காய் வாங்க யோசனை செய்த இருவர்; கஷ்டத்திலும் நன்மையுண்டு தேங்காய் விலை உயர்வால் நோய் குறையும் எனத் தெரிவிப்பு.
2014-ஜெனிவாத் தீர்மானம் தனக்குத் தலையிடியெனக் கூறுகிறார் மகிந்த.
2014-ஜனாதிபதி ஆணைக்குழு நம்பகத் தன்மையற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சாடல்
2014-மனித உரிமை மீறல் குறித்து அரசு. பன்னாட்டுக் கூட்டு விசாரணைக்கு தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை.
2016-கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு இராணுவமே முட்டுக் கட்டையென ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீமானம் அவர்கள் முழுமையாக வெளியேற வேண்டுமெனவும் அதில் தெரிவிப்பு.
2016-உரத்துப் பேசினால் எஞ்சிய பிள்ளைகளையும் இழந்து விடுவேன் என ஆணைக்குழு முன்பாக தாய் ஒருவர் சாட்சியம்.
2016-பன்னாட்டு விசாரணைக்கான கதவுகள் மூடப்பட்டு விட்டன என அமைச்சர் சமபிக்க சொல்கிறார்.

# நாளை

**மாசி-16**

செவ்வாய்க்கிழமை -28.02.2017
திதி: துதியை மா. 06.58
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.06.28
சுபநேரம்:10.58-12.28 வரை
ராகுகாலம்:03.28-04.58 வரை

# இது புதுசு



கைகள் அற்ற நெற் மற்றும் துணிகளைக் கொண்ட ரொப் வகைகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன.
இந்த ரொப்களில் கழுத்துப் பகுதிக்கு கற்கள் பதித்த டிசைன்கள் அமைந்துள்ளன.
இவை 700 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகலிங்கம் கிருஷ்ணபாலா

அவர்களின்

## ஓராண்டு நினைவஞ்சலி



இன்று அணையாத தீபமாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் எங்கள் அன்பு அப்பா
அன்று ஆணிவேராய் எங்களைத் தாங்கி நின்ற அருமைத் தந்தையே! உங்கள்
பாதச்சுவடுகளைப் பற்றி நடப்போம் உங்கள்
அன்பு முகமும் அறிவுரைகளும் எங்கள்
இதயங்களில் பசுமரத்தாணிபோல் பதிந்து இருக்கிறது அப்பா!
நீங்கள் இறைவன் பாதம் சரணடைந்து புனிதனாகச் சங்கமமாகிவிட்டீர்கள்
எங்கள் பிறப்பு முடியும்வரை உங்கள் இறப்பை மறக்கமாட்டோம்
என்றும் எங்களுடன்தான் வாழ்கின்றீர்கள் என்ற நினைவுகளுடன்
எமது பணி தொடர்வோம்

மாற்றம் ஒன்றுதான் மாறாதது ஆனால்
உங்கள் நினைவுகள் மாறவே மாறாது

உங்கள் மனைவி
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

---

**பணிப்பெண் தேவை**

சமையல் உட்பட வீட்டு வேலைகளை வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு 24 வயதுக்குட்பட்ட பணிப்பெண் உடன் தேவை.

**021 226 0277**

கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு, புலோலி

---

**சமையல்/பராமரிப்பு/வீட்டுப்பணிப் பெண் தேவை**

கொழும்பில் (வெள்ளவத்தை) 4 பேர் உள்ள யாழ் தமிழ் குடும்பவீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய பணிப் பெண் (வயது 18–50) ஒருவர் தேவை. தனியறை, தனிக்குளியலறை, TV மருத்துவச்செலவு போன்ற வசதிகள் செய்துதரப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், பகுதியினர் மற்றும் யாழ் உணவு வகைகள் சமைக்கத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

(தரகர்கள் தேவையில்லை.) **077 505 5922**

---

## மரண அறிவித்தல்

### செல்வி லக்ஷனா சற்குணசீலன்



தையிட்டியைப் பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லக்ஷனா சற்குணசீலன் நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சற்குணசீலன் (முன்னாள் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க ஊழியர்) - சீதாதேவி தம்பதியரின் மகளும் நிகன்யா (யா/தெ. மகாஜனக் கல்லூரி மாணவி), டிசாந் (யூனியன் கல்லூரி மாணவன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**
**077 844 8102**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்



### அம்பிகைபாகு யோகேந்திரன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகைபாகு யோகேந்திரன் 24.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியை இந்தியாவில் நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**மனோன்மணிவாசம்**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**சகோதரி**
**திருமதி [illegible]**
**077 [illegible] 2057**

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 02 . 1947



இறப்பு 26 . 02 . 2017

### திருமதி நாகம்மா குமாரவேலு

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா குமாரவேலு நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் குமாரவேலுவின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும் பகீரதன்(நேசன்- KPK Building Construction Works), பார்த்தீபன்(மோகன்-லண்டன்) காலஞ்சென்ற பகீரதி ஆகியோரின் அன்புத் தாயும் கனகம்மா(மல்லாவி)வின் சகோதரியும் விஜிதா (வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி), ஜெயசாந்தி(லண்டன்) ஆகியோரின் மாமியும் கஜீவன்(மொரட்டுவ பல்கலைக்கழகம்), கஜிந்தன், கஸ்தூரி(கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), அஜிந்தா, நிதுசா, யாதவி, திகழ்நிலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 1/1, திருவையாறு, கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1/1, [illegible]**
**[illegible]**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**தொலைபேசி - 077 248 4406**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(தொடர்ச்சிகள்)*
*வடக்கில்...*

நடைபெறாது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதற்கு, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானி க்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் இணையத்தளத்தில் நேற்றைய தினம் செய்தி வெளியாகியிருந்தது. இதனால் வடக்கில் பெரும் குழப்பம் நேற்று நிலவியது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகக் கலந்துரையாடலில் பங்கேற்ற வடக்கு மாகாண சபை உறுப்பி னர் து.ரவிகரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது, காணி விடுவிப்புத் தொடர்பில் அரசுடன் பேச்சு நடைபெறுவதால், முழு அடைப்புப் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றார். (வ-5)

*11 கர்ப்பிணிப்...*

பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21ஆக அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

"இந்த மாதம் 10ஆம் திகதியிலிருந்து நேற்று வரையான காலப்பகுதியில் பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு 11 கர்ப்பிணிப் பெண்கள் உள்ளாகியுள்ளனர். இவர்கள் காய்ச்சல் ஆரம்பித்த முதல் நாளில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதால் தகுந்த சிகிச்சை வழங்கப்பட்டு குண மடைந்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள் காய்ச்சல் ஏற்பட்ட முதல் நாளே வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்த் தொற்று எதிர்ப்புச் சக்தி குறைவாகக் காணப்படுவதால் அவர்களை இலகுவாக வைரஸ் தாக்கும். இந்த நோய்த் தொற்றானது குறைவடையும் வரை மக்கள் நெரிசல் உள்ள இடத்தில் நோயால் பாதிக்கப்பட்ட நபர்களை பராமரித்தல் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும். இவ்வாறு தவிர்ப்பதன் மூலமாக இந்த நோய்த் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளிலும் காய்ச்சல் தொடர்பான குருதி மாதிரிகளை பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன" என்று சுகாதாரத் துறையினரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4-6)


## மரண அறிவித்தல்

## கார்த்திகேசு தம்பிராசா



புத்தூர், நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தம்பிராசா நேற்று (26.02.2017) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - கைராசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - அகிலாண்டம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவகாமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சுகுமாரனின் பாசமிகு தந்தையும் கதிராசி, பறுவதம், தங்கம்மா, தவமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அசுவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, கொடிகாமம்.**
**077 119 4713**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானமணி கந்தையா



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானமணி கந்தையா 25.02.2017 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - நேசம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தையாவின் அன்புமனைவியும் ஜெயவதனா (ஜேர்மனி), ஜெகதீசன் (லண்டன்), ஸ்ரீவதனா காலஞ்சென்ற விமலநாதன், தனேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (ஜேர்மனி), ஆனந்தராசா (கண்ணியம்) மற்றும் சண்முகராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான தையல்அம்மா, கண்மணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சுதர்சினி - சுரேஸ் (ஜேர்மனி), கிரிசாந்தன் - கார்த்திகா, றஜிந்தன் - மல்லிகா, தர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அரவிந் (ஜேர்மனி), மதுசாயினி, தனுஷாயினி, கரிஷ், லஷ்சாயினி, பிரவீனா, ஆகாஷ் (ஜேர்மனி), அம்ரித்தா (ஜேர்மனி), உமேஷ் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொய்யாத்தோட்டம், இருபாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## திருமதி மரகதம் கிருஷ்ணபிள்ளை



ஊர்காவற்றுறை –சுருவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொட்டாஞ் சேனையை வசிப்பிடமாகவும் யாழ். நகர் பாண்டியன் தாழ்வை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரகதம் கிருஷ்ணபிள்ளை 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை – தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் – ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகளும் கௌசலாவின் அன்புத்தாயாரும் ஜெயபாலனின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம், மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் பகவதி காலஞ்சென்ற கனகரெட்ணம் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் சிந்துஷா, ஆதவன் காலஞ்சென்ற மாதுளன் மற்றும் கீர்த்திகா, பதுசனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஏகநாயகி (தேவா) காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமிர்தலெட்சுமி, சிறிஸ்கந்தராஜா, ஆனந்தி ஆகியோரின் சிறிய தாயாரும் வசந்தி, கரன், ஜெயந்தி, சுதா, தயா, பாமா, கேமா. கண்ணன், கேதி, சிவகுமார் ஆகியோரின் உறவு வழி அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2017 புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு பாண்டியன் தாழ்வில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**54/12,கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன்தாழ்வு.**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**கண்ணன் 077 711 1084**
**ஜெயபாலன் 003 1646 138 310**







## கண்ணீர் அஞ்சலி



## S.G.சாந்தன்

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எனது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றேன்.

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகிறோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.



**நண்பன் S.சுகுமாரன் குடும்பத்தினர்**
**மிலேனியம் ஹெஸ்ரோறன்ற் அன் கெஸ்ட் ஹவுஸ். 077 601 6310**

## குணரத்தினம் சாந்தலிங்கம்

### (S.G.சாந்தன்)



யாழ்ப்பாணம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் புதியகொலனி, மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் சாந்தலிங்கம் (S.G சாந்தன்) நேற்று (26.02.2017) ஞாயிற்றுக் கிழமை யாழ். போதனா மருத்துவமனையில் பிப2.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லப்பா குணரத்தினம்-யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் மேரி மெற்றில்டா, கனகாம்பிகை ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சா. மோகனராஜ் காலஞ்சென்ற பிரபுராஜ், குகராஜ், கோகுலராஜ், சகிலன்ராஜ், சரண்ராஜ், டார்வின்ராஜ், லோகராஜ், துசாந்தினி, அதிசயவாணி, அபூர்வ வாணி, காலஞ்சென்ற அற்புதவாணி, ஆனந்தவாணி, காலஞ் சென்ற சகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம், கந்தலிங்கம், பஞ்சலிங்கம், தேவிமீனாள், லட்சுமி, செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரவீன், ஆதித்தன், தேனிசைச் செல்வன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2017) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியிலுள்ள அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிளிநொச்சி இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா...

முடிவடையவுள்ளது. இலங்கை ஏற்றுக் கொண்ட விடயங்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பது குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட், விலாவாரியான காட்டமான அறிக்கையை அடுத்த மாதம் 22ஆம் திகதி சமர்ப்பிப்பார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இன்றைய ஆரம்ப அமர்வில், சபைத் தலைவர் உரையைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் உரையாற்றுவார். இதன்போது, இலங்கை தொடர்பான தனது முழுமையான அறிக்கையில் குறிப்பிடவுள்ள விடயங்களைக் கோடிட்டுக்காட்டி உரையாற்றுவார்.

ஐ.நா.வின் இந்தக் கூட்டத் தொடரில், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா.வின் அறிக்கையாளர்கள் இருவரது அறிக்கைகளும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. சிறுபான்மை மக்களின் விடயங்களை ஆராயும் ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஜசாக் மற்றும் சித்திரவதை தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் மென்டோஸின் அறிக்கைகள் ஆகியவை இந்தக் கூட்டத் தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மேலும் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை, பிரிட்டனால் அடுத்த மாதம் 22ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்படவுள்ளது. (வ-5)

## ஐ.நா...

உரிமைகள் ஆணையாளர் உரையாற்றுவார். அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை தொடர்பான நிலைப்பாடுகளை முன்வைத்து நாளை செவ்வாய்க் கிழமை உரையாற்றுவார்.

2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, கொழும்பு அரசுக்கு மேலும் 18 தொடக்கம் 24 மாத கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்று கோருவதற்கு அவர் திட்டமிட்டுள்ளார். அத்துடன் ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி உதவியை வழங்குமாறும் மங்கள சமரவீர கோரிக்கை விடுக்கவுள்ளார்.

இலங்கை தொடர்பான 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்கவுள்ள விரிவான அறிக்கை மீது, வரும் மார்ச் 22ஆம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது. அத்துடன், இலங்கை தொடர்பான மற்றொரு தீர்மானமும் அன்றைய தினம் முன்வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-5,4)

## பொது...

கட்சியின் அமைச்சரும், சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பின் ஊடாகத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அரசு சகல நகர்வுகளையும் முன்னெடுத்து வருகின்றது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் ஆதரவுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் மூலமாக சகல பிரிவுகளும் ஆராயப்பட்டன. மக்கள் கருத்தறியும் நடவடிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு வெளியில் முன்னெடுக்கப்பட்டன. தற்போதும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. புதிய அரசமைப்பை உருவாக்கிய பின்னர் பொது வாக்கெடுப்பை நடத்தத்தயார்.

மக்களின் விருப்பம் இல்லாது நாம் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கத் தயாராக இல்லை. மக்களின் விருப்பத்துக்கு அமையவே எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்க முடியும். மக்களின் விருப்பம் இல்லாது எதைச் செய்தாலும் அது மக்கள் விரோதச் செயற்பாடாகவே அமையும்.

தமிழ் மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அவர்களும் பொது வாக்கெடுப்புக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர் என்றார். (வ-5)

## ஈழத்துப்...

செயலிழந்த நிலையில், இதயம், சுவாசப் பகுதிகளும் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்தார் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நோய் காரணமாக அவருடைய இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்படைந்தன. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அவர் சேர்க்கப்பட்டார். நேற்று முற்பகல் சாந்தன் காலமாகிவிட்டார் என்று முகநூல்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாகத் தவறான செய்தி பரவியது. எனினும் அவர் ஆபத்தான நிலையில்தான் இருக்கிறார் என்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைத் தகவல்கள் நேற்று மதியம் உறுதிப்படுத்தின.

இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் 2.10 மணியளவில் சிகிச்சை பயனளிக்காது சாந்தன் உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

"அவரது 2 சிறுநீரகங்களும் பாதிப்புற்ற நிலையில் நீண்ட காலமாக போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று முன்தினம் வைத்தியசாலை விடுதி இல. 9 இல் சாந்தனுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. குருதி சுத்திகரிப்பும் (Dialysis) கிரமமாகச் செய்யப்பட்டது . நேற்றும் குருதிச் சுத்திகரிப்பு செய்ய ஏற்பாடாகி இருந்தது . எனினும் உடல் நிலை மிக பாதிக்கப்பட்டிருந்தது. இதயம் மற்றும் சுவாசப் பகுதிகள் பாதிப்படைந்தன. குருதியில் உப்புகளின் அளவும் அதிகரித்துக் காணப்பட்டது . தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதும் இன்று (நேற்று) பி.ப 2.10 மணியளவில் அவர் உயிரிழந்தார்" என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

அவரது இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்று உறவினர்களால் அறிவிக்கப்பட்டது.

சிறந்த பாடகரும் நாடகக் கலைஞருமான எஸ்.ஜி.சாந்தன், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் காலத்தில் முன்னணிப் புரட்சிப் பாடகராக விளங்கினர். 1995ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தின் நட்சத்திரப் பாடகராக விளங்கினார்.

முதன்முதலில் 1972 இல் கொழும்பு, செட்டித் தெரு கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்வையிடச் சென்றபோது அங்கு பாடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

பிரபல தென்னிந்தியப் பாடகர் ஆலங்குடி சோமு, தெய்வம் திரைப்படத்துக்காகப் பாடிய "மருதமலை மாமணியே முருகையா..." என்ற பாடலை கொழும்பில் அவர் சிறுவனாயிருந்தபோது அங்கு எதேச்சையாகப் பாடினார். இதுவே இவரது கலைப் பயணத்தின் ஆரம்பமாக அமைந்ததுடன் இது இவரது முதல் மேடை அனுபவமாகவும் அமைந்தது. இதன் பின்னர் இவரது வீடு அமைந்துள்ள தெருவுக்கு வரும் "முகத்தார் வீடு" ஜேசுரட்ணம் என்பவர் சாந்தனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அழைத்துச் சென்று சிறுவர் மலர் நிகழ்ச்சியில் பாடவைத்தார். அன்றிலிருந்து வானொலி நிகழ்ச்சியின் நாடகத்திலும் சாந்தன் நடிக்க ஆரம்பித்திருந்தார்.

1977 இல் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த இவர், 1981 இல் கண்ணன் இசைக்குழுவுடன் இணைந்து தனது கலைப் பயணத்தை ஆரம்பித்து மேடைகளில் பாடல்களை பாட ஆரம்பித்தார். அதன் பின் தனது பெயரிலேயே "சாந்தன் இசைக்குழு" ஆரம்பித்து மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தார்.

இந்தக் காலப்பகுதியிலேயே ஈழத்தில் போர் உச்சக்கட்டத்தை அடைந்தபோது ஈழத்தின் புரட்சிப் பாடல்களைப்பாடும் தலை சிறந்த பாடகரானார். இதில் முதன் முதலாக பெரும் புகழை ஈட்டிய பாடலாக "இந்த மண் எங்களின் சொந்த மண்..." என்னும் பாடலே இவருக்கு மிகப்பெரும் பெருமை சேர்த்தது. அன்றிலிருந்து இறுதிப் போர் வரையில் அந்தத் துறையிலேயே ஈடுபட்டார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் பலமுறை கௌரவிக்கப்பட்ட பாடகருமாவார். புலம்பெயர் தேசங்களிலும் ஈழத்திலும் அதிகளவிலான ரசிகர்களைக் கவர்ந்த பாடகருமான எஸ்.ஜே.சாந்தனின் பாடல்கள் மூலம் தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தையும் எழுச்சியையும் உண்மையையும் உணர்ச்சிகரமாக வெளியில் கொண்டுவந்த பெருமையும் இவருக்கு உள்ளது.

இறுதிப் போரில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தார். பின்னர் இராணுவத்தினர் விடுவித்த நிலையில் உடல் / உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட போதும் தனது இனிய குரலால் பக்திப் பாடல்களையும், கருத்தாளமிக்க திரையிசைப் பாடல்களையும் பாடி வந்தார்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கும் வரையில் தமிழீழ எழுச்சிக்கான பாடல்களை சாந்தன் பாடி வந்தார். இவரின் இரண்டு மகன்கள் மாவீரர்கள்.

இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சிக்கிய சாந்தன், மறுவாழ்வுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டு, பல்வேறு இடங்களிலும் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார். (வ-4,7,101)

## வாள்வெட்டுக்...

தெரிவிக்கப்பட்டது. இந்தியச் சினிமாப் பாணியில் நடந்த இந்த அடாவடியால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டது.

6 மோட்டார் சைக்கிள்களில் 13 பேர் இவ்வாறு ஆயுதங்களுடன் நடமாடியுள்ளனர். அவர்களைக்கண்ட பொலிஸார் 2 மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றனர். எனினும் ஒருவரைக் கூடப் பிடிக்க முடியவில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் பகுதியில் இருந்து தாவடி நோக்கிய திசையில் நேற்று மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனை அதே திசையால் 5 மோட்டார் சைக்கிளில் 13 பேர் கொண்ட கும்பல் துரத்திச் சென்றது. தாவடியில் தனியார் கல்வி நிலையம் முடிந்து வெளியேறும் மாணவர்களை ஏற்றுவதற்காக நின்ற பெருமளவு பெற்றோர் வாள் வெட்டுக் கும்பல் துரத்துவதைக் கண்டு பதறிக் கூக்குரல் இட்டனர்.

தாவடி மதுபானச் சாலையை அண்மித்துக் குறித்த இளைஞன் மீது கும்பல் தாக்க முற்பட்டது. கும்பலிடமிருந்து சுதாகரித்த இளைஞன் மீண்டும் கொக்குவில் திசையை நோக்கித் தப்பியோடினார். இவ்வாறு மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்த வேளையில் தனியார் கல்வி நிலையம் முடிந்து வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓர் சிறுவனையும் கும்பல் தள்ளி விழுத்தியவாறு சென்றது.

இந்தியத் திரைப்படப் பாணியில் பகல் வேளையில் இவ்வாறு அடாவடியில் ஈடுபட்டதை அவதானித்தவர்கள் பலரும் பதறிக் கூக்குரல் எழுப்பினர். அந்தநேரம் அந்த இடத்தால் இரு மோட்டார் சைக்கிளில் பயணித்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் மூவர் அந்தப் பகுதிக்கு விரைந்து கும்பலைப் பிடிக்க முயன்றனர். கைத் துப்பாக்கியை எடுத்து அச்சுறுத்த முயன்றும் வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் சிறப்பு துவிச்சக்கர வண்டிப் பிரிவு களமிறக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அண்மையில் தெரிவித்தார். அத்துடன். அந்தப் பிரிவுக்கு புதிதாக துவிச்சக்கர வண்டிகளையும் அவர் வழங்கியிருந்தார். (வ-4,101)

## வடக்கு...

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள மூவர் அடங்கிய விசாரணைக் குழு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவினர் கடந்த மாதம் சாட்சியங்களைப் பதிவு செய்த நிலையில், கடந்த வியாழக் கிழமை தொடக்கம் அமைச்சர்கள் மீதான விசாரணையை ஆரம்பித்திருந்தனர்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மீதான விசாரணை கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெற்றிருந்தது. கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இருவரும் நேற்று முன்தினம் சனிக்கிழமையும், நேற்று ஞாயிற்றுக்கிழமையும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்த ஒருவர் விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை. இருப்பினும் கல்வி அமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரிடம் விசாரணை விளக்கம் கோரப்பட்டது. கல்வி அமைச்சர் மீது நிர்வாக ரீதியிலான மோசடிகள் தொடர்பிலேயே முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களை, மாகாண சபை உறுப்பினர் ஒருவரே முன்வைத்திருந்தார். இதில் நிர்வாக ரீதியிலானது மற்றும் நிதி ரீதியான முறைப்பாடுகள் உள்ளடங்கியிருந்தன. (வ-5101)

## விக்கியின்...

அவரது அண்மைக்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக்கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு நீதிபதிகளை நியமித்து உள்ளக விசாரணையை முன்னெடுக்க வடக்கு மாகாண சபை விரும்புவதாக வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். இவ்வாறு செய்வதற்கான அதிகாரம் அரசமைப்பில் அவருக்கு வழங்கப்படவில்லை. அவர் முன்னாள் நீதியரசர். அவர் ஏன் இப்படி உளறுகிறார் என்று தெரியவில்லை. அவரை முதலமைச்சராக நியமித்ததையிட்டுத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகம் கவலையடைகின்றது.

தெற்கையும் வடக்கையும் இணைக்கும் எமது நடவடிக்கைக்கு இன நல்லிணக்க செயற்பாடுகளுக்கு விக்னேஸ்வரன்தான் தடையாக இருக்கின்றார். கடந்த தேர்தலில் இரண்டாயிரம், மூவாயிரம் வாக்குகளைப் பெற முடியாதவர்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டுதான் விக்னேஸ்வரன் இவ்வாறு செயற்படுகின்றார்.

இனி வருகின்ற தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரட்டியடித்துவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் விக்னேஸ்வரன் உள்ளிட்ட குழுவினரின் ஒரே இலக்கு. அந்த இலக்கை அடைவதற்காகத்தான் அவர்கள் இப்போதிலிருந்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியலுக்குள் காணப்படுகின்ற அதிகாரப் போட்டிதான் இது. இவர்களின் செயற்பாடுகளால் நாட்டுக்கு அதிக பாதிப்பு ஏற்படும். அதைவிடவும் அதிகமான பாதிப்பு தமிழ் மக்களுக்குத்தான் ஏற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முழுமையான ஜனநாயக வழியைப் பின்பற்றுகின்றது. இது வரவேற்கக்கூடிய நல்லதொரு நிலமை. ஆனால், முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாட்டைப் பார்த்தால் அந்தக் குழுவினர் ஒருவகையான இனவாதத்தை நோக்கிச் செல்வதை புரிந்துகொள்ள முடிகின்றது.

இது நாட்டுக்குப் பெரியளவிலான பிரச்சினைகளை ஏற்படுத்தும் விடயமாகும் என்றார். (வ-சி)

## மைத்திரியுடன்...

மைப்புக்கும் இடையேயான சந்திப்பு இன்று மாலை 5 மணிக்கு அரச தலைவர் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாகப் போராடி வருகின்றனர். இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கடந்த வாரம் ஆராயப்பட்டிருந்தது. இதன்போது, அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்திப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக இன்று மாலை 5 மணிக்கு அரச தலைவருடனான சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு காணிகள் விடுவிப்புத் தொடர்பிலேயே பேச்சு நடத்தப்படவுள்ளது. ஏனைய காணிகள் விடுவிப்புத் தொடர்பில் அடுத்த கட்டமாக பேச்சு நடத்தப்படும் என்று தெரிய வருகின்றது. (வ-5)

## கூட்டமைப்பினருக்கு...

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்குத் தமிழ் மக்களின் பெரும்பான்மையை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கட்சியாகும். அவர்களுக்கு அரசுடன் இணைவதற்கு உள்ள சந்தர்ப்பம் தவிர்க்கப்படுகிறது. இதன் காரணமாக அரசுக்கு எதிராக விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கும் குழுவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறியுள்ளது. அவர்கள் அரசுடன் இணைவதன் ஊடாக வடக்குப் பிரச்சினைகள் தொடர்பில் சிறப்பான தீர்ப்பு பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த யோசனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம் அல்ல எந்தவொரு கட்சி அதிக ஆசனங்களை வெற்றிக் கொண்டிருந்தாலும் அந்தக் கட்சிக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு பதவி ஒன்று வழங்கப்பட வேண்டும். அதற்கு மாற்று யோசனையாக மாகாண முதலமைச்சர்களை அமைச்சரவையுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செய்தித்தாள்

அழகான காகிதத்தில்
அச்சிட்ட செய்தித்தாள்
நாள் தோறும் வருகுது
நல்ல செய்தி பல தருகுது

அனல் பறக்கும் செய்திகளை
அற்புதமாய்த் தருகுது
அயல் நாட்டு நடப்பெல்லாம்
அழகழகாய்த் தருகுது

நம் நாட்டு நடப்பை எல்லாம்
சுடச் சுடவே தருகுது
நல்ல பல விழுமியங்கள்
நமக்காய் வெளிவருகுது

நாளும் வரும் நாளிதழ்களை
நன்றாய்த் தினம் வாசிப்போம்
நாளும் செய்தி படிப்பதாலே
நமக்கு அறிவு பெருகிடும்

## புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்





## வெந்நீரூற்றுக்கள்


இயற்கையாகவே தரைக்கு அடியிலிருந்து வெளிப்படும் சூட்டுத்தன்மை கொண்ட நீரூற்றுக்கள் வெந்நீரூற்றுக்களாகும். எரிமலைப் பகுதிகளிலேயே இந்த வெந்நீரூற்றுக்கள் கூடுதலாக காணப்படினும் இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா என்னும் இடத்தில் 7 வெந்நீரூற்றுக்கள் அடுத்தடுத்து காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வெப்ப அளவுகளில் உள்ளன. நியூசிலாந்து, ஜப்பான், இத்தாலி, திபெத் ஆகிய நாடுகளில் உள்ள வெந்நீரூற்றுக்கள் உலகப் பெயர் பெற்றவை. அமெரிக்காவிலுள்ள யல்லோஸ்ற்றோன் என்னும் தேசிய பூங்காவிலுள்ள ஒல்ட்பெயிற்புல் என்னும் வெந்நீரூற்று சுமார் ஒருமணிநேரத்துக்கு 70,000 லீற்றர் வெந்நீரை 40 மீற்றர் உயரத்துக்கு பாய்ச்சியடிக்கின்றது. பூமியின் உட்பாக வெப்பம் காரணமாக ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள பாறைகள் அதிகமாக உருகி குழம்பாகக் காணப்படும். எரிமலைகள் நிறைந்த பகுதிகளில் இந்தக் குழம்பு தரைக்கு கீழ் சிறிது தூரத்திலேயே இருக்கும். அவ்விடங்களின் மேற்பகுதியில் சேரும் நீர் கொதித்து ஆவியாகும். ஆவியின் அமுக்கத்தினால் அங்கு இருக்கக் கூடிய துளை வழியாக தரைக்கு மேல் சூடான அந்த நீர் வெளிப்படுகின்றது. இவ்வாறே வெந் நீரூற்றுக்கள் உண்டாகின்றன.

## நான்கு எருதுகளும் சிங்கமும்



ஒரு காட்டில் நான்கு எருதுகள் மிகுந்த ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அவை ஒன்றாகவே புல் நிலங்களுக்குச் சென்று, ஒன்றாகவே மேய்ந்து, பின்னர் மாலையில் ஒன்றாகவே தம் இனத்தவரோடு வந்து சேருவது வழமை.

இந்த நான்கு கொளுத்த எருதுகள் மேல் சிங்கம் ஒன்றுக்கு பெரும் ஆசை ஏற்பட்டது. அவற்றைப் பிடித்து உண்பதற்கு அது சந்தர்ப்பம் பார்த்திருந்தது. அவை ஒன்றாய் மேயும் சந்தர்ப்பங்களில் அவற்றை சிங்கத்தால் நெருங்க முடியாதிருந்தது. காரணம் நான்கு எருதுகளும் சேர்ந்து கொம்புகளால் குத்தி சிங்கத்தை விரட்டி விட்டிருந்தன.



தன் முயற்சிகளில் தோல்வி கண்ட சிங்கம் நரியிடம் ஆலோசனை கேட்டது. நரிக்கு பங்கு தருவதாகவும் ஆசை காட்டியது. நரியோ எருதுகளைத் தனித்தனியே பிரித்து விட உபாயத்தைக் கையாண்டது. எருதுகள் ஒவ்வொன்றையும் தனித் தனியே அணுகி அவற்றுக்கு வேறு வேறு திசைகளைக் காட்டி அவ்விடங்களில் நல்ல பசுமையான புற்கள் உண்டென்றும், தனித் தனியே மேய்வதால் நிறைய புல் கிடைக்குமென்றும், கூடி மேய்ந்தால் எவருமே வயிறாற உண்ண முடியாதென்றும் கூறி ஆசை காட்டியது.

நிறைந்த புல் மேய பேராசைப்பட்ட எருதுகள் ஒவ்வொன்றும் நரி காட்டிய திசைகளில் தனித்தனியே பிரிந்து சென்றன. இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திய சிங்கம் நாளுக்கு ஒன்றாக எருதுகள் இரண்டை அடித்துக் கொன்று தின்று நரிக்கும் பங்கு கொடுத்தது.

இரண்டாம் நாள் முடிவில் மாலை வேளையில் தம் இருப்பிடம் திரும்பிய எருதுகள் தம்முள் இருவர் காணாமற் போயுள்ளனர் என்பதை உணர்ந்தன. இரண்டும் சேர்ந்து யோசனை செய்தன. தாம் தனித்தனியே பிரிந்ததன் விளைவை உணர்ந்தன. உடனேயே தாமதியாது தம்மிலும் மூத்த எருதுகளிடம் நடந்தவற்றைக் கூறி அவற்றின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்றன.

அதன்படி தம் இனத்து இளம் எருதுகளை தமக்கு உதவியாக்கி, அவைகள் காட்டு மரங்களின் இடையே ஒளிந்திருக்க அந்த இரு எருதுகள் மட்டும் தனித்தனி மேய்வதுபோல் பாசாங்கு செய்தன. முன்னதாகவே இரண்டு எருதுகளில் ருசி கண்ட சிங்கம் தனியே மேயும் ஓர் எருதை நெருங்கி வர, மறைந்திருந்த இளம் எருதுகள் பாய்ந்து வந்து தமது கொம்புகளால் குத்தியும் முட்டி மோதியும் சிங்கத்தைப் பலமாகத் தாக்கின. சிங்கம் எதிர்பாராத சுற்றிவளைப்புக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் உயிரிழந்தது. நரியோ தப்பினேன் பிழைத்தேனென ஓட்டமெடுத்தது. தாம் தனித்தனியே நண்பர்களைவிட்டுப் பிரிந்து சென்றதை நினைத்து எருதுகள் இரண்டும் மிக மிக வருந்தின.

**கூடி வாழ்ந்தால் கோடி நன்மை**
**ஒற்றுமையாய் வாழ்வதால் உண்டு நன்மையே**
**வேற்றுமையை வளர்ப்பதனால் விளையும் தீமையே**

## இலங்கை பற்றியவை

- ஒரு நாட்டின் பெருமையை கௌரவத்தை பிரதிபலிப்பவை தேசியக் கொடி, தேசிய இலச்சினை, தேசிய கீதம்
- இலங்கையின் தேசியக் கொடியை உருவாக்கியவர் கேர்ணல் கென்றி ஸ்ரீல் ஒல்கொட்
- இலங்கையின் தேசியக் கொடி முதன்முதலில் ஏற்றப்பட்ட தினம் 04.02.1952 - சுதந்திர தினத்தன்று
- தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்படுவது தேசிய துக்க தினத்தில்
- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன் - சிங்கள மொழியில்
  C.W.W. கன்னங்கரா - ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார்.
  புலவர்மணி நல்லதம்பிப்பிள்ளை - தமிழ்மொழியில் மொழி பெயர்த்தார்
- இலங்கையின் தேசிய மரம் - நாக மரம்
- தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
- தேசிய மலர் - நீலோற்பலம் (நீல அல்லி)
- தேசிய மிருகம் - மர அணில்
- தேசிய பறவை - காட்டுக்கோழி
- தேசிய இரத்தினக்கல் - நீல மாணிக்கக் கல்
- தேசிய உணவு - பாற்சோறு



## நில்; கவனி; செல்



- உன் வார்த்தைகளைக் கவனி
- உன் செயல்களைக் கவனி
- உன் எண்ணங்களைக் கவனி
- உன் நடத்தையைக் கவனி
- உன் முதுகைக் கவனி (பின்னால் உள்ளவர்களை)
- உன் வாழ்க்கையைக் கவனி (குடும்பத்தை)
- உன் சூழலைக் கவனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை மத்தி, அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27
ஞானதீபம் இளையோர் திறன்விருத்தி மையம் யாழ்ப்பாணம் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்திய 23 வயதுப் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அரியாலை பண்ணை வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:23, 25:19, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இளவாலை மத்தி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. ஆட்டநாயகனாக இளவாலை மத்தியின் ஜெனி தெரிவானார். நிகழ்வுக்கு விருந்தினர்களாக அமலமரித் தியாகிகள் சபையின் வடக்கு மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அடிகளார், வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23-108)





# மெதடிஸ்த பெண்கள் பூப்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 27
வடமராட்சி வலய பூப்பந்தாட்டத் தொடரில் 17 வயதுப் பிரிவில் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் நெல்லியடி மத்திய கல்லூரியும் மோதின. மூன்று தனிநபர் ஆட்டங்கள், இரு இரட்டையர் ஆட்டங்களைக் கொண்டதாக இறுதி அமைந்தது. மூன்று தனிநபர் ஆட்டங்களையும் மெதடிஸ்த பெண்கள் அணி வீராங்கனைகள் கைப்பற்றினர். இதனால், இரட்டையர் ஆட்டங்களுக்கு வேலை வைக்காமல் அந்த அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து ஜமகா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சுன்னாகம் சிவன் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை ஐயனார் அணியை எதிர்த்து ஊரெழு பாரதி அணி மோதவுள்ளது. மாலை 4.45 அணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதவுள்ளது.

**வல்வை வி.க. கால்பந்தாட்டம்**

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக 'பி' அணியும் பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-23-108)

# சுழிபுரம் விக்ரோறியா கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 27
வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட்டில் பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியா கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்குகளை இழந்து 65 ஓட்டங் களைப் பெற்றது. அதிகபட்சமாக நிந்துசா 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தமிழரசி ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் 7 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. (ம-422)



# கே.ஸி.ஸி.ஸி. சம்பியனானது

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய விகிரம்ரரஜன், கங்கு ஞாபகார்த் துடுப்பாட்டத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி. அணி சம்பியனான்து.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி. அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 37.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மதுசன் 62 ஓட்டங்களைப் பெற்றார். 188 ஓட்டங்க்ளைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி,ஸி.ஸி. அணி 23.4 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்கு களை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ஆதித்தன் ஆட்டமிழக்கமால் 51 ஓட்டங்களையும், பனுசன் 34 ஓட்டங்களையும், உத்தமன் 24 ஓட்டங் களையும், யனுசன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மதுசன், பகீதரன் இருவரும் தலா இரு இலக்குகளையும், வாமனன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக கே.ஸி,ஸி.ஸி. அணியின் ஆதித்தனும், தொடராட்ட நாயகனாக அதே அணியின் ராகுலனும் தெரிவாகினர். (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் கழகம் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத் துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சுன்னாகம் சிவன் அணி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுன்னாகம் சிவன் அணி மோதியது. இதில், சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழக அணி 59:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# அஞ்சல் அலுவலகம் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 27
கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான கிரிக்கெட்டில் ஆண்கள் பிரிவில் கரவெட்டி அஞ்சல் அலுவலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி கமநல சேவைகள் திணைக்கள அணியை எதிர்த்து கரவெட்டி அஞ்சல் அலுவலக அணி மோதியது. 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.


முதலில் துடுப்பெடுத்தாடிய கமநல சேவைகள் திணைக்கள அணி 4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரோசன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிரதீபன் 2 இலக்குகளையும் ரஜீவன், மனோபவன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி அஞ்சல் அலுவலக அணி 2 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதனையும் இழக்காமல் கிண்ணம் வென்றது. அதிகபட்சமாக அனுதர்சன் 15 ஓட்டங்களையும், பிரதீபன் 4 ஓட்டங்களையும்பெற்றுக் கொடுத்தனர். (ம-422)

# மலாகாவை வென்றது எய்பர்

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் பழைமை மிகுந்த லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் எய்பர் வெற்றி பெற்றது.

எய்பரை எதிர்த்து மலாகா மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் எய்பர் வெற்றிபெற்றது. மூன்று கோல்களும் இரண்டாம் பாதியிலேயே பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# சோதனைகளும் தேவையானவை

## சொல்கிறார் கோக்லி

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்வியின் பின்னர் கருத்துத் தெரிவித்த இந்திய அணித்தலைவர் கோக்லி, இதுபோன்ற கடின சோதனைகளும் அவ்வப்போது அணிக்குத் தேவையானவை என்று குறிப்பிட்டார்.

ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையைச் சொல்லவேண்டுமாயின் ஆஸ்திரேலிய அணி எம்மை ஒன்றுமில்லாமல் செய்துவிட்டது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை எம்மை நெருக்கடிக்குள்ளேயே ஆஸ்திரேலியா கட்டிப்போட்டது. இரு இன்னிங்ஸிலும் நாம் தடுமாற்றத்தை வெளிப்படுத்தினோம். இந்த வெற்றிக்கு ஆஸ்திரேலிய வீரர்கள் தகுதியானவர்கள்தான். தொடர் வெற்றிநடைக்குப் பின்னர் சந்தித்த ஒரு மோசமான தோல்வி. கடந்த இரு ஆண்டுகளில் நாம் வெளிப்படுத்திய மோசமான துடுப்பாட்டப் பெறுபேறு இதுவே. சொந்த மண்ணில் எதிர் அணியிடம் தோல்வியடைந்த பின்னர் அதிலிருந்து மீண்டுவருவதென்பது கடினமான விடயம். ஆனால் எம்மால் அதைச் செய்ய இயலும்.

பந்துவீச்சாளர்களின் செயற்பாடுகள் எந்தவிடத்திலும் எனக்கு அதிருப்தியாகப் படவில்லை. குறிப்பாக அஸ்வின், உமேஸ் யாதவ் இருவரும் சிறப்பாகவே வீசினார்கள். சுழலுக்குச் சாதகமாக ஆடுகளத்தில் யாதவ் சாதித்துக் காட்டினார். பாராட்டப்பட வேண்டிய விடயமது.

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்துபார்க்கும் இரு வாய்ப்புக்களிலும் நாம் தவறவிட்டோம். இதுவும் எமக்கு பெரும் பின்னடைவைக் கொடுத்தது என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# கோக்லி ஏமாற்றம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் முழுவது மாகத் தடுமாற்றம் காட்டினார் விராட் கோக்லி. முதலாவது இன்னிங்ஸில் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார் கோக்லி. இரண்டாவது இன்னிங்ஸில் 13 ஓட்டங்களுடன் கெபியின் பந்து வீச்சில் சிக்கினார். மொத்தத்தில் இந்த ஆட்டத்தில் அவரது ஓட்டுமொத்த ஓட்டங்களின் எண்ணிக்கை 13. சராசரி 6.5. சொந்த மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லி ஆகக் குறைந்த சராசரியையும் ஓட்டங்களையும்பெற்றஆட்டமாக இந்த ஆட்டம் பதிவானது. (ம)

# நாணயச் சுழற்சி சாதகம் வெற்றி தொடர்பில் சிமித்

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 333 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு நாணயச் சுழற்சியில் வென்றமையும் முக்கிய காரணம் என்று குறிப்பிட்டார் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ் சிமித்.

கடுமையான பயிற்சியின் மூலம் இந்த வெற்றி கிடைத்ததாக நினைக்கிறேன். ஆஸ்திரேலிய வீரர்கள் விளையாடிய விதத்தைப் பார்த்து நான் மிகவும் பெருமையடைகிறேன். நாங்கள் சிறந்த திட்டத்துடன் களமிறங்கினோம். கெபி மிகவும் அபாரமான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பாக விளையாடும் சில வீரர்களையும், சிறந்த சுழற்பந்து வீச்சாளரையும் பெற்றுள்ளோம். நாணயச் சுழற்சியில் வென்றது கூடுதல், பலம் என சிமித் தெரிவித்தார்.

முன்னதாக, ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் டேரன் லீமன் இந்திய ஆடுகளங்களில்நாணயச் சுழற்சி ஒரு விடயமல்ல என்று தெரிவித்திருந்தார். சிமித், நாணயச் சுழற்சி வெற்றிக்கு முக்கிய பங்காற்றியது என்றவாறாகத் தெரிவித்தார். இருவரினதும் கருத்துக்கள் முன்னுக்குப்பின் முரணாக வந்தமைந்தன. (ம)



# அதிவேக 9,000 ஓட்டங்கள் வில்லியர்ஸ் புதிய சாதனை

பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் விரைவாக 9 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டவர் என்ற சாதனையை தென்னாபிரிக்க அணித்தலைவர் வில்லியர்ஸ் படைத்தார். நியூசிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வில்லியர்ஸ் 85 ஓட்டங்கள் எடுத்தார். அவர் 5 ஓட்டங்களை எடுத்திருந்தபோது 9 ஆயிரம் ஓட்டங்களை நிறைவுசெய்தார். 205 இன்னிங்ஸில் இந்த மைல்கல்லை வில்லியர்ஸ் எட்டினார். இதன்மூலம் பன்னாட்டு அரங்கில் விரைவாக 9 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டவர் என்ற அடைவை அவர் ஏற்படுத்தினார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி 228 இன்னிங்ஸில் 9 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டமையே நேற்றுமுன்தினம் வரை சாதனையாக இருந்தது. 13 வருட காலமாக கங்குலியின் பெயரில் இருந்த இந்தச் சாதனை நேற்றுமுன்தினம் வில்லியர்ஸின் பெயருக்கு மாற்றப்பட்டது. (ம)



# மெக்சிக்கோ தொடரில் வருகிறார் ஜோகோவிக்

மெக்சிக்கோ ரென்னிஸ் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் களமிறங்குவதை உறுதிசெய்தார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள நட்சத்திர வீரரான நொவக் ஜோகோவிக்.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் நடைபெற்ற டேவிஸ் கிண்ணத் தொடரில், ஜோகோவிக் களமிறங்கினார். தோள்பட்டையில் காயமேற்பட்டு பாதியிலேயே வெளியேறினார். இதனால் மெக்சிக்கோ தொடரில் அவர் களமிறங்குவதில் சிக்கல்கள் இருந்தன. இந்த நிலையில் தொடரில் களமிறங்குவதை நேற்றுமுன்தினம் ஜோகோவிக் உறுதி செய்தார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெற்று முடிந்த ஆஸ்திரேலியத் தொடரிலும் ஜோகோவிக் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. இதனால் இந்தத் தொடரில் அவர் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும் என்ற நெருக்கடி உள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வரதாதேவி உலகநாதன்


தோற்றம் 22.08.1958 மறைவு 26.02.2017

தோப்புக்காடு காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதாதேவி உலகநாதன் நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் உலகநாதன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், இ.போ.சாலை காரைநகர், முன்னாள் களஞ்சிய காப்பாளர், சீ நோர் நிறுவனம், காரைநகர்) இன் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - பகவதியம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தேனியம்மா தம்பதியரின் அன்புமருமகளும் திருமணிதேவி, அம்பிகாதேவி காலஞ்சென்ற லோகமாதேவி, கைலாயநாதன், சற்குணநாதன், கந்தசிவநாதன், ஸ்ரீரங்கநாதன், கைலாயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிநாதன் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சந்திராதேவி, இந்திராதேவி, கோகிலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நிலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
C. உலகநாதன் (கணவர்)
தோப்புக்காடு, காரைநகர்.

### சின்னப்பு சூசைப்பிள்ளை

**( இளைப்பாறிய கனிஷ்ட பரிசோதகர், யாழ். தபாலகம்)**



192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு சூசைப்பிள்ளை 25.02.2017 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராயப்பு - திரேசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அந்தோணியாப்பிள்ளை (வேவி) இன் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரான்சிஸ்கம்மா மற்றும் மேரி றோசலின் ஆகியோரின் அன்புச்சகோதரரும் மேரிகிறேஸ், வில்லியம் ஜோர்ஜ், அன்ரன் றொபேட் காலஞ்சென்ற அன்ரன் குணசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவதாஸ், சரோஜினிதேவி, பியங்கா ஆகியோரின் மாமனாரும் துயிலன், விதுஷா, நிலானி, திலக்ஷன், றூபிறோஸ் றோசாமெய் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.02.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**192, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
வில்லியம் ஜோர்ஜ் (மகன்)

### திருமதி நாகரத்தினம் செல்லையா



வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் இல. 33, ஜெயந்திநகர், கிளிநொச்சியில் வசித்தவரும் தற்போது இல. 76, திருநகர் வடக்கில் வசித்துவந்தவரும் ஆகிய திருமதி நாகரத்தினம் செல்லையா நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புஸ்பராசா (பவுன்) மற்றும் ஜெயாநிதி, சற்குணராசா (பாபு), நகுல்ராஜ் (ஜெகன்), காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் யோகேஸ்வரி, மோகனகுமார் (காந்தி ஆரம்ப வித்தியாலயம், கிளிநொச்சி), தர்சினி, வாசுகி, நகுலேஸ்வரி (நகரசபை, வவுனியா) ஆகியோரின் மாமியாரும் உதயசந்திரன், உதயகுமார், உமாநந்தினி, உதயராஜ் (வசந்தன் பழ வாணிபம், பொதுச்சந்தை, கிளிநொச்சி), சாந்தகுமார், ராஜினி, கிருஸ்ணவதனி, புவிதரன் ஆகியோரின் பெரியதாயும் ரேகா, நேமிநாதன், தர்சிகா, குகசாளினி, குகசாந், கேசல்யா, டிசாந், டனோஜன் (மத்திய கல்லூரி மாணவன்), திசாந், தனுஜா, டிலைக்சன், உமாலோஜினி, நோஜன்(கிளிநொச்சி மகா வித்தியாலயம்), கேதுரகன், யதுசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிசாஷ்ந்தின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 76, திருநகர் வடக்கு,**
**கிளிநொச்சி. 077 079 0761**

தகவல்:
குடும்பத்தினர்
பெறாமக்கள் (ஜெயந்திநகர்)

# அதிகளவில் தேடப்படுகிறார் ரொனால்டோ



சீனாவில் அதிகளவில் தேடப்படும் கால்பந்து வீரராக போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ உள்ளார்.

உலகில் அதிக சனத் தொகையைக் கொண்ட நாடாக சீனா உள்ளது. கால்பந்தாட்டத்தை வளர்த் தெடுப்பதற்கு அங்கு தற்போது பற் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சீன கால்பந்தாட்ட அணிகள் ஐரோப்பிய வீரர்களை ஒப்பந்தம் செய்ய கடும் முனைப்புக் காட்டுகின்றன. சீனாவில் இணையத் தளத்தில் அதிகம் தேடப் பட்ட கால் பந்தாட்ட வீரராக போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ உள்ளார்.

ஆர்சனல் வீரர் ஒசில் இரண் டாவது இடத்தில் உள்ளார். அவரைவிட ரொனால்டோ பத்து மடங்கு முன்னி லையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வேல்ஸ் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் முன்னணி வீருமான பேல் மூன்றாவது இடத்திலும், மன் செஸ்டர் யுனைற் ரெட்டின் மார்சியல் 4 ஆவது இடத்திலும், மன்செஸ்டர் யுனைற்ரெட்டின் ருனே ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

அதிகம் தேடப்படும் கால்பந்தாட்டக் கழகத்தில் மன் செஸ்டர் யுனைற்ரெட் முதலிடத்தில் உள்ளது. (ம)

## ரசல் இல்லாதமை பின்னடைவே இப்படித் தெரிவித்தார் பாண்டே

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியில் ரசல் விளையாட முடியாதமை பெரும் பின்னடைவே என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னணி வீரரான பாண்டே.

தொடர்ந்து மூன்று ஊக்கமருந்துச் சோதனைகளைத் தவறவிட்டமைக்காக ரசலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த ஒரு வருடத்துக்கு அவரால் பன்னாட்டு ஆட்டங்களிலும் பன்னாட்டு அந்தஸ்தைப் பெற்ற கழகங்களின் ஆட்டங்களிலும் விளையாட இயலாது. ரசல் கடந்த சில ஐ.பி.எல். தொடர்களில் கொல்கத்தா அணிக்காக விளை யாடி வந்தவர். இந்த நிலையிலேயே பாண்டே இவ்வாறு தெரிவித்தார். ரசல் ஓர் சிறந்த சகலதுறை வீரர். தனித்து நின்று ஆட்டத்தை வெல்லும் வல்லமை படைத்தவர். கடந்த சில தொடர்களில் ஏராளமான ஆட்டங்களில் தனது ஆதிக்கத்தை அவர் மிகையாக நிலைநாட்டியுள்ளார். இந்த நிலையில் நடப்பு வருடத் தொடரில் அவர் விலகியமை பெரும்பின்னடைவே என்று பாண்டே மேலும் தெரிவித்தார்.

கோடிபதி ஷனிடா
சீட்டிழுப்பு வாரம்: 105
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 26.02.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 77,343,320/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
P 21 48 49 52
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


Galaxy Star
வெற்றி வாரம் 139
திகதி 26.02.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 26,27,47,48
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,108,540 /-
2017.03.01ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 26.02.2017
வெற்றி வாரம் 2101
வர்ணம் ஊதா
மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
19 21 27 37
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 10, 862, 401/=
2017.02.28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

இணைந்த கணிதம்
COMBINED MATHEMATICS
A/L 2018 - English Medium
Limits and Differentiation (எல்லைகளும் வகையீடும்)
ஆரம்பம் 27.02.2017 Monday, Wednesday 6.00P.M - 7.30P.M
A/L 2019 - English Medium
Trigonometry (திரிகோண கணிதம்)
ஆரம்பம் 04.03.2017 Saturday, Sunday 7.30 - 9.30A.M
By: T. SHANJEEVAN B. Sc
Dip in English (Lecturer in University)
NEW SCIENCE WORLD
Brown Road, Jaffna. 077 336 4055

## மரண அறிவித்தல்

### கந்தையா குணரட்ணம் (குணம்)


பிறப்பு 12.02.1937 இறப்பு 26.02.2017

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணரட்ணம் நேற்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுமதி, தேவா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னராஜா (ஸ்ரார் மணிக்கூடு திருத்தகம், நெல்லியடி), அஞ்சலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்லத்துரை(கோபாலு)யின் அன்பு மைத்துனரும் துவாரகன், ஜானகி, ரேகா, அக்ஷயா(பிரான்ஸ்), ஆகாஸ்(பிரான்ஸ்), அனுசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.**

தகவல் :
குடும்பத்தினர்
077 929 5985

SLAS
போட்டிப்பரீட்சை மாலை நேர வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வியாழன் வரை பி.ப. 5.00-7.00 மணிவரை
ஆரம்பம் : செவ்வாய் (நாளை) பி.ப. 5.00 மணி
தொடர்புகளுக்கு: 076 688 3394, 021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

IELTS Life skills UK
ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
நெல்லியடி 021226 2470 | சாவகச்சேரி 021227 0775 | சுன்னாகம் 021224 1970 | கிளிநொச்சி 021228 5655
www.itdmi.com/english

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org